# திருக்குறள் கதைகள்
# பொருட்பால்
# 1031 – 1080

## தமிழறிஞர்
## கே.வி.குணசேகரம்

## நூல் விபரம்

நூலின் பெயர் :- திருக்குறள் கதைகள்
(1031 – 1080)

நூலாசிரியர் :- தமிழறிஞர்
கே.வி.குணசேகரம்

பதிப்பாண்டு :- 2010

மொத்தப் பக்கங்கள் :-

விநியோகம் :- லங்கா புத்தகசாலை
கு.டு 1.14, டயஸ் பிளேஸ்
குணசிங்கபுர,
கொழும்பு – 12

தொ.பேசி :- 011-2341942

விலை :-

# என்னுரை

திருக்குறள் கதைகள் பொருட்பால் 1031 - 1080 வரையான 50 குறள்களுக்கான கதைகள் இந்நூலில் உள்ளன. இது வரை 930 குறள்களுக்கான கதைகள் வெளிவந்துவிட்டன. 1330 திருக்குறள் பாக்களுக்கான கதையை 2003 – 03 – 21ந் திகதி எழுதத்தொடங்கி 2006 – 06 – 29ந் திகதி முடித்தேன். முதல் 210 குறள்களுக்கான கதைகளை கொழும்பு 12இல் உள்ள லங்கா பதிப்பகத்தினர் 7 தொகுதிகளாக வெளியிட்டனர். 211ஆம் குறளிலிருந்து 580ஆம் குறள் வரையும், இன்பத்துப்பால், 1081 – 1330 வரையான குறள்களுக்கான கதைகளை தமிழ்நாடு மணிமேகலைப் பிரசுரத்தினர் 7 தொகுதிகளாக வெளியிட்டனர். இப்பொழுது 581 – 1080 வரையான 500 குறள்களுக்கான கதைகளை லங்கா பதிப்பகத்தினர் 10 தொகுதிகளாக வெளியிடுகின்றனர்.

1330 குறள்களும் 24 நூல்களாக வெளியிட நான் மிகுந்த சிரமப்பட்டேன். நான் இடைவிடாது எழுத உற்சாகம் தந்தவர்கள் பலர். கணனி மயப்படுத்தித் தந்தவர்கள் பலர். எழுத்துப்பிழைகளை நீக்கித் தந்தவர்கள் பலர். அணிந்துரை தந்தவர்கள் பலர். இவர்களுக்கெல்லாம் அவ்வப்போது வெளிவந்த நூல்களில் நன்றி கூறியுள்ளேன். திருக்குறள் கதைகளின் நிறைவு நூலான இந்நூலிலும்

அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். 24 நூல்களையும் எழுதி முடித்ததை நினைக்க ஆச்சரியமாகவுள்ளது. திருக்குறள் பா, உரை, விளக்கம், கதை என்பன ஒரே நூலில் உள்ளன. குறள்களுக்கான விரிவான விளக்கமும், இலகுதமிழில் உரையும், மக்களின் அன்றாட நிகழ்வுகளைக் குறிக்கும் கதைகளும் அடங்கிய இந்நூலை தமிழிலக்கிய உலகம் வரவேற்று விமர்சிக்க வேண்டும். இது தான் எனது ஆசை.

இந்தவகையில் இந்து தத்துவ நூல்களான ஆத்திசூடி, பகவத்கீதை, திருவருட்பயன், சிவஞானபோதம் என்பனவற்றிற்கும் கதைகள் எழுதியுள்ளேன். அவை வெளிவந்துள்ளன. அவற்றைப் பற்றிய விமர்சனங்களையும் அறிஞர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். இக்கதைகளிலுள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையேயாகும். யாரையும் குறிப்பிடுவனவல்ல.

நான் எழுதும் நூல்களில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்கிச் சீர்செய்து தரும் ஓய்வுபெற்ற அதிபர்களான திரு வா. ஜெயரட்ணம், திரு. தி.கிருஷ்ணகுமார் அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளை நீக்கித் தருவதோடு, தகுந்த ஆலோசனைகளை வழங்கி என்னை உற்சாகப்படுத்தும் ஆசிரியை செல்வி ப.இறைமகளுக்கும், எனது கதைகளை அழகாக கணனி மயப்படுத்தித்தரும் செல்வி. க.தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் கொழும்பு 12இல் அமைந்துள்ள லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்

**கே. வி. குணசேகரம்**
ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம்.

கோப்பாய் மத்தி, கோப்பாய்.

## அணிந்துரை

திரு.கே. வி குணசேகரம் அவர்கள் எழுத்துலகில் பல்வேறு பரிநாமங்களிலும் தடம் பதித்துச் செல்வதைக் காணலாம். இவர் தனக்கென ஒரு சீரான பாதையில் தன் கருத்துக்களை ஆதாரபூர்வமாகவும், தர்க்கரீதியாகவும் வெளிப்படுத்துவதில் வல்லவர். “இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம்” என்ற நூற்தொகுதியில் பத்துப் பாகங்களைப் படைத்துள்ளார். இந்நூல்களைச் சிறுவர்கள், பெரியவர்கள், பாமரர்கள் யாவரும் கற்றுப் பயன்பெறும் வகையில் இலகு நடையில் தான் பெற்றுக்கொண்ட பட்டறிவினை ஒருங்கிணைத்து அமைத்துள்ளார் என்றால் அது மிகையாகாது.

ஆசிரியரின் நூல்கள் வாசகர்களை அந்நூலில் திளைக்கச் செய்யும் வகையில் வடிவமைத்துள்ளார். தான் கூற எடுத்துக்கொண்ட விடயத்தைச் சிருஷ்டிக்கப்பட்ட பாத்திரங்களை உள்ளடக்கிய கதைகளினூடாக வெளிப்படுத்திச் செல்லும் பாங்கு சிறப்பானதோர் அம்சமாகும்.

திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் எழுதிய கட்டுரைகள், சிறுவர் கதைகள், கவிதைகள், பகவத்கீதைக் கதைகள், நாடகங்கள் எனப்பலவாகும். இவை ஒவ்வொன்றும் வாசகனை வாசிக்கத்தூண்டும் வகையிலேயே எழுதப்பட்டதாகும். இவரது படைப்புக்கள் இளம் தலைமுறையினர்க்கும், சிறார்களுக்கும் பல அறிவியல் விடயங்களை இலகு நடையில் விளங்க வைக்கின்றன.

இந்து தத்துவங்களை இலகு தமிழில் ஆர்வத்தைத் தூண்டும் விதத்திலும் தேடலை ஊக்குவிக்கும் பாங்கிலும் தத்துவங்களாகவும், கட்டுரைகளாகவும் எழுதி வருகிறார். இந்த வகையில் மூவாயிரத்திற்கு அதிகமான கதைகளையும் ஐந்நூறுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதிப் பெரும் பணியாற்றி வருகின்றார். திருக்குறளில் உள்ள அனைத்துப் பாக்களுக்கும் அதன் கருத்துக்களை இலகுவில் யாவரும் மனதில் பதிக்கக்கூடிய வடிவில் கதைகளாகத் தந்துள்ளார். இதுவரை இதை யாரும் செய்யவில்லை. திருக்குறள் கதைகளுக்குத் தேவையான இடத்து இதிகாச புராண விடயங்களைப் புகுத்தி விளக்கியுள்ளார்.

இவரது எழுத்துப் பணி தொடரவேண்டும் என்பது பல்லாயிரம் வாசகர்களின் விருப்பமாகும். இப்பேரவாவை நிறைவு பெறச் செய்வதற்கு அவர் நீண்ட

நாட்கள் ஆரோக்கியமாக இருக்க எல்லாம் வல்ல இறையோனை வேண்டுகிறேன்.

'மிதிலை'
சோ. தி. கிருஸ்ணகுமார்
அரசடி லேன்,
ஓய்வு பெற்ற அதிபர்.
திருநெல்வேலி.

## தலையான தொழில்

இராசகோபாலால் புதிதாக வாங்கிய இருநூறு ஏக்கர் வயல் நிலம் நன்கு உழுது பண்படுத்தப்பட்டு இருந்தது. அன்று விதைப்புக்கு நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் ஆயத்தமாக நின்றனர். அன்று காலை ஒன்பது மூன்றிற்குச் சுபவேளை அந்த நல்ல நேரத்தில் விதைப்பதற்குத் தயாராகத் தொழிலாளர்கள் நின்றனர். எல்லோரும் வந்துவிட்டார்கள். சுவாமியாரைக் காணவில்லை.

பூசைக்கான ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டிருந்தன. அங்கு வந்த நவராசா பூரண கும்பத்திற்கு அருகில் சாணத்தால் பிடித்து அறுகம்புல் நாட்டிய பிள்ளையாரைப் பார்த்தான். பின் ''தணி அண்ணை, நான் சில இடங்களில்

பார்த்திருக்கிறேன் மங்கலகரமான நிகழ்வுகளுக்கு மஞ்சள் மாவில் தான் பிள்ளையார் பிடித்து வைக்கிறார்கள்'' என்றான்.

''இங்கு சில மெத்தப்படித்தவை இருக்கினை. சிலர் புதுமைகள் செய்ய விரும்புவீனை, சிலர் ஆராய்ச்சி செய்வதாக நினைக்கினை. இவையெல்லாம் எமது சமயத்தைப் படித்தவர்களல்ல. மாட்டின் சாணம் புனித கங்கையைவிடப் புனிதமானது. சிவனும் தேவர்களும் கணங்களும் மனிதர்களும் அசுரர்களும் மாட்டின் சாணத்தில் இருந்து பெறப்படும் விபூதியைத் தரித்துத் தானே மோட்சமடைகின்றனர். அதனால் தேவர் உலகில் இருந்து மனிதர்கள் உய்வடைய வேண்டும் என்ற நோக்குடன் பரம்பொருளான சிவபெருமானால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டது தான் கோமாதாவான பசு. அதில் இருந்து பெறும் சாணகத்தில் உருவாக்கப்படும் பிள்ளையாருக்குத்தான் சக்தி உண்டு. அதைத் தவிர மஞ்சள் மா, அரிசிமா, களிமண், கல் என்பவற்றிலும் பிள்ளையாரைப் பிடிக்கலாம். ஆனால் பசுவின் சாணத்தில் உருவாக்குவது தான் சிறந்தது பயன் உள்ளது'' என்றார் தணிகாசலம்.

நவராசா சிரித்தான். ''உண்மை தான் சில நாட்களாக எனக்கு இந்தச் சந்தேகம் இருந்தது. இன்று தான் அதை அறிந்து கொள்ள முடிந்தது'' என்றான்.

''அப்போது சுவாமியார் வந்தார். நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயக்

குருக்கள் தான் கொண்டு வந்த சிறிய பிள்ளையார் விக்கிரகத்தை வாழையிலையில் வைத்துவிட்டுப் பூசையைத் தொடங்கினார்.

பூசை முடிந்ததும் நவராசா தேவாரத்தையும் புராணத்தையும் ஓதினான். சுவாமியார் கையில் ஒரு பிடி நெல்லை அள்ளி "வள்ளியம்மை இங்கே வா" என்றார். இராசகோபாலுக்கு அருகே கைகட்டி, கண்மூடி நின்று மகா கணபதியைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்த வள்ளியம்மை திடுக்கிட்டுச் சில கணங்கள் தடுமாறினாள். பின் மெல்ல நடந்து வந்து சுவாமியாருக்கு அருகில் நின்றாள்.

"உயர்ந்த பண்பு, ஒழுக்கம், ஆன்மீகம் ஆகிய எல்லாப் பண்புகளையும் உடையவள் தமிழ்ப் பெண். வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவருக்குப் பின்னாலும் அவனது மனைவி இருப்பாள். அவளின் திறமை தான் கணவன் அடைந்த பெரு வெற்றிகளுக் கெல்லாம் காரணமாகும். பார்வதி தேவியின் வடிவங்களாகத் திகழும் பெண்களை மதிக்காத எந்தக் குடும்பமும் உயர்வடைய மாட்டாது. பெண்கள் மதிக்கப்பட்டால் தான் வானம் பொழியும். வள்ளியம்மை, நீ சாதாரண பெண்ணல்ல. இலட்சிய வேட்கை கொண்ட ஒரு வீரப்பெண். அதனால் தான் உனது குடும்பம் முன்னேறியது. ஆகையால் இந்தா இந்த நெல்லைப்பிடி, உனது கணவனின் உற்சாகத்துக்குத் தோள் கொடுக்கும் நீ இதை விதை" என்றார் சுவாமியார்.

திகைத்துப் போனாள் வள்ளியம்மை. முதல் நாள், நாளுக்கு விதைப்பதற்கு அவளும் இராசகோபாலும் தணிகாசலத்தைக் கேட்டிருந்தனர். வள்ளியம்மை தணிகாசலத்தைப் பார்த்தாள் "வாங்கி விதையம்மா" என்றார் தணிகாசலம்.

"உலகம் பல தொழில்களைச் செய்து சுழன்றாலும் ஏர்த்தொழிலில் தான் நிற்கிறது. அதனால் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் ஏர்த்தொழிலே உலகில் சிறந்தது. உலக உயிர்கள் அனைத்தையும் உழவனை நம்பியே இறைவன் படைத்தார். இந்த வயல் விளைந்தால் எத்தனையாயிரம் பட்சிகளின் வயிறு நிரம்பும். எத்தனையாயிரம் மனிதர்களின் பசி போகும் எத்தனையாயிரம் மிருகங்களுக்கு உணவு கிடைக்கும். அதனால் எந்தத் தொழில் செய்பவனும் உழவுத் தொழிலையும் மேற்கொள்ளல் வேண்டும். அப்படி மேற்கொண்டால் தான் உலகம் வாழும். நீ விதையம்மா..." என்றார் சுவாமியார்.

வள்ளியம்மை கண்களை மூடி மகா கணபதியைப் பிரார்த்தித்தாள். அவளது இமைக்குள் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணதி தோன்றித் தன் தும்பிக்கையை அசைத்தார். அவள் தன் கையில் இருந்த நெல் மணிகளை வயலுள் தூவினாள்.

---

**1031. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.**

---

உலகம் பலவிதமான தொழில்களைச் செய்து சுழன்றாலும் உழவுத் தொழிலாலேயே

இயங்குகிறது. அதனால் எவ்வளவு துன்பம் நேர்ந்தாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

## அச்சாணி போன்றவர்.

சுவாமியார் சென்றுவிட்டார். வந்தவர்களுக்குப் பாற்சோறும், பலகாரங்களும் வழங்கப்பட்டது. அவற்றை உண்ட மக்கள் ஒவ்வொருவராகத் தத்தமது வீடுகளுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். தொழிலாளர்கள் கடகங்களில் நெல்லை அள்ளிச் சென்று விதைத்துக் கொண்டிருந்தனர். பல உழவு இயந்திரங்கள் விதைத்த நெல்லை உழுது மறைத்துக் கொண்டிருந்தன.

“சுவாமியார் எதையும் அர்த்தத்துடன் தான் செய்வார். அவரின் சொல் செயல் யாவும் உண்மையானவை. அதனால் தான் குருக்கள் தொழிலைத் தொடங்க வேண்டாம் என்று சொன்ன போதும், உன்னைத் தொழிலைத் தொடங்கச் சொன்னேன். ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கு மட்டுமல்ல இன்பத்திற்கும் காரணமானவள் அவனது மனைவி தான். வீட்டில் நிம்மதி இருந்தால் தான் மனதில் நிம்மதி இருக்கும். மனம் மகிழ்ந்தால் தான் தொழிலில் வெற்றி கிடைக்கும். என்னைப் பொறுத்தவரை எனது மனைவி என்னை முழுமையாகப் புரிந்து வைத்துள்ளாள். அதனால் தான் என்னால் மற்றவர்களுக்குத் தான தர்மங்கள் செய்ய முடிகிறது. வள்ளியம்மையின் திறமையால் தான் உனது குடும்பம் உயர்வடைந்தது. நீ ஏழ்மையுற்ற நிலையில் இருந்த போது உன்னை அவள் அலட்சியம் செய்திருந்தால், நீ இன்று இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது. அதனால்

தான் சுவாமியார் வள்ளியம்மையைக் கொண்டு விதைப்பித்தார்'' என்றார் தணிகாசலம்.

''வள்ளியம்மை ஒழுங்காக இருக்காவிட்டால் இராசகோபால் என்றோ செத்திருப்பான். உண்மையில் வள்ளியம்மை திறமைசாலிதான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''நீ புதுத்தொழிலைத் தொடங்கப்போவதாகச் சொன்னதும் ஏதோ தொழிற்சாலை தொடங்கப்போகிறாய். அல்லது வியாபார நிலையம் தொடங்கப்போகிறாய் என நினைத்தேன். அவற்றையெல்லாம் விட்டுவிட்டு நீ மிகவும் கஷ்ரமான உழவுத் தொழிலை மேற்கொண்டதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உழவுத்தொழில் புனிதமானது; புண்ணியமுள்ளது பாவத்தைப் போக்குவது. உழவு செய்ய முடியாமல் வேறு தொழிலைச் செய்து வாழ்கின்றவர்களைத் தாங்குவதால், உழவுத்தொழில் செய்வோர் உலகத்தவர்களுக்கு அச்சாணி போன்றவர்கள்'' என்றார் தணிகாசலம்.

நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் அங்கு வேலை செய்வதைப் பார்க்க வள்ளியம்மைக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவர்களுடன் சேர்ந்து தானும் வேலை செய்யவேண்டும் போல இருந்தது. அதனால் வள்ளியம்மை வயலுள் இறங்கினாள்.

''நீ காதலிக்கும் போதும், பின் அவளை அழைத்து வந்த போதும் உனது தந்தை அவளை எவ்வளவு கேவலமாகப் பேசினார்.

அதனால் அவர் இறக்கும் போது அதற்காக மிகவும் வருந்தினார். ஒவ்வொருவனும் முற்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களின் பயனாகத் தான் அவனுக்கு மனைவி அமைவாள்'' என்ற வேலாயுதபிள்ளை ''நான் வருகிறேன்'' என்று கூறிவிடைபெற்றார். அவருக்குப் பின்னால் தணிகாசலமும் சென்றார்.

சேலையைத் தூக்கி மடித்துக் கட்டிக்கொண்டு தொழிலாளர்களுடன் மிகவும் உற்சாகமாக வேலை செய்துகொண்டிருந்த வள்ளியம்மையைப் பார்க்க இராசகோபாலுக்கு வேதனையாக இருந்தது; ''இவ்வளவு காலமும் கஷ்டப்பட்ட அவள் இனி மகாராணி மாதிரி இருக்க வேண்டும்'' என்று நினைத்து அவளை அழைத்தான் இராசகோபால்.

''என்ன..?'' என்று கேட்டவாறு வள்ளியம்மை அவனின் அருகில் வந்தாள். வயலில் இருந்த கிணற்றின் அருகே ஓங்கி வளர்ந்திருந்த பூவரச மரத்தின் கீழ் இருவரும் அமர்ந்தனர் ''என்னுயிர் நீர் தானே. நீர் கஷ்ரப்பட்டது போதும். இனி நீர் கஷ்ரப்படக்கூடாது. ஒரு சிறிய துரும்பைக்கூட நீர் தூக்கினால் எனது நெஞ்சு வலிக்கிறது. அதனால் வீட்டு வேலைகள் செய்வதற்கும் ஒரு தொழிலாளியை ஒழுங்கு செய்யப் போகிறேன். நீர் எனக்கும், பிள்ளைகளுக்கும் சமைத்துத் தந்தால் சரி'' புன்னகைத்தான் இராசகோபால்.

மகிழ்ச்சி பொங்கத் தனது கணவனை நிமிர்ந்து பார்த்தாள் வள்ளியம்மை. அவன் தன்மீது வைத்திருக்கும் அளவற்ற அன்பை

நினைக்க அவளுக்குப் பரவசமாக இருந்தது. அப்போதே அவனது நெஞ்சில் சாய்ந்து கொள்ள வேண்டுமென்ற நினைவு அவளது மனதில் மெல்ல எழுந்து வளர்ந்தது. அவள் அவனின் நெஞ்சின் மிது சாய்ந்தால் அவன் இறுக அணைத்து முகத்தை நிமிர்த்தி முத்தமிடுவான். அந்த இனிமையான இன்பம் வேண்டுமென அவளது மனம் ஆசைப்பட்டது.

---

**1032. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴து ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து.**

---

உழவுத் தொழில் செய்யாமல் ஏனைய தொழில்கள் செய்து உயிர் வாழ்கின்ற அனைவரையும் தாங்குகின்ற உழவரே உலகத்தவர்களுக்கு அச்சாணி போன்றவர்.

## உரிமையுடன் வாழ்பவர்

தணிகாசலம் வேப்பமரத்தின் கீழ் பரப்பப்பட்டிருந்த மணலில் துண்டொன்றை விரித்துப் படுத்திருந்தார். அவருக்கு அருகில் அவரது மனைவி பாக்கியலட்சுமி அமர்ந்திருந்தாள். நாற்காலி ஒன்றில் பரமேஸ்வரன் அமர்ந்திருந்தார்.

“கனநாள் மோதகம் சாப்பிட்டு. இன்றைக்கு அவியும்” என்றார் தணிகாசலம்.

“ஒருநாளென்றாலும் ஆசைப்பட்டு உணவு எதுவும் நீங்கள் கேட்டதில்லை. இன்று

கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது'' என்றாள் பாக்கியலட்சுமி.

''இதுவரை நீ நான் ஆசைப்பட்டவற்றையெல்லாம் செய்து தந்துகொண்டிருந்தாய். நான் கமத்தை விட்டதும் வருமானமில்லாதவனுக்கு என்ன சாப்பாடு என்று நினைத்துப் போலும் ஆசைப்பட்ட உணவைச் செய்து தருகிறாய் இல்லை. எல்லாம் உழைப்புள்ள மட்டும் தான். நான் வேலை செய்வேன். தாயும் மகளுமாகச் சேர்ந்து 'தோட்டவேலைகளைச் செய்யவேண்டாம்' என்று கூறிவிட்டு இப்போ விரும்பிய உணவுப் பண்டங்களைச் செய்து தருகிறீர்கள் இல்லை'' என்று குறைபட்டார் தணிகாசலம்.

பாக்கியலட்சுமி அவரைப் பார்த்தாள். அவளுக்குத் துக்கமாக இருந்தது. முன்னொருபோதும் ஆசைப்பண்டங்கள் எதையும் கேட்காத அவர், இப்பொழுது கேட்பது மட்டுமல்லாமல் பெரும் குறையும் சொல்கிறார் என்பதை நினைக்க அவளின் கண்கள் கலங்கின.

''முன்பு தீன்பண்டங்களைச் செய்துவைத்துவிட்டு என்னைத் தேடித்திரிவீர். எனக்கென்று வைத்ததைப் பிள்ளைகள் எடுத்துச் சாப்பிட்டுவிடுவார்கள். இல்லாவிட்டால் பழுதடைந்துவிடும். என்ன அழுகிறீரா.... நான் சும்மா வேடிக்கையாகச் சொன்னால்....'' பரபரத்தார் தணிகாசலம்.

“இதில் என்ன வேடிக்கை இருக்கு. பிறர் முன்னிலையில் தனது மனைவியை விளையாட்டாகக் கூடக்கேலி செய்யக்கூடாதென்று உங்களுக்குப் புரியாதா...? தங்கச்சி எல்லாம் நீ கொடுத்த இடம்’’ என்றார் பரமேஸ்வரன்.

பரமேஸ்வரன் அப்படிச் சொன்னதும் பாக்கியலட்சுமியின் துயரம் அதிகரித்து அழுகையாக வெடித்தது.

“நீங்கள் என்ன பிறத்தியாரா...? பாக்கியத்தின் கோபத்தைக் கூட்டிவிட்டீர்கள்’’ என்றார் தணிகாசலம்.

அப்போது அவர்களுக்குத் தேநீர் கொண்டுவந்த நாமகள், தாயார் முகத்தை முந்தானையால் மூடியபடி விம்முவதைக் கண்டு அதிசயித்துப் போனாள். அவள் தன் வாழ்நாளில் பாக்கியலட்சுமி அழுவதைக் காணவில்லை. தனது திருமணம் குழம்பியபோது கூட நாமகள் தான் அழுவதைக் கண்டால் கூடுதலாக வேதனைப்படுவாள் என்று நினைத்துத் தனது துயரத்தை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை “என்னம்மா, என்ன நடந்தது?’’ பரபரத்தாள் நாமகள்.

“அப்பா இன்றைக்கு அம்மாவுக்கு அடித்துவிட்டார்’’ என்றார் பரமேஸ்வரன்.

பரமேஸ்வரனை ஆச்சரியத்துடன் பார்த்த நாமகள் சொன்னாள்; “அப்பாவுக்கு அடிக்கத் தெரியாது’’ என்றவள் தாயின் முந்தானையை விலக்கினாள். பாக்கியலட்சுமி

சிரித்துக் கொண்டிருந்தாள். அவளது கண்களால் கண்ணீர் ஒழுகிக் கொண்டிருந்தது.

“ என்னம்மா விசித்திரமாக இருக்கின்றது” என்றாள் நாமகள்.

“இன்றைக்குப் பெரும் விசித்திரம் ஒன்று நடந்துவிட்டது. கொப்பர் மோதகம் சாப்பிட ஆசைப்படுகிறார். என்னைக் கலியாணங் கட்டிய நாளிலை இருந்து இன்று வரை வாய்திறந்து எதையும் கேளாத மனிசன் இன்றைக்குக் கேட்டுட்டுது. அதோடை உழைப்பில்லாததாலை தன்னை நாம் கவனிப்பதில்லையாம்” விம்மினாள் பாக்கியலட்சுமி.

“அப்பா அப்படிச் சொன்னவரே.....?” ஆச்சரியப்பட்டாள் நாமகள்.

“முன்பு அவர் தோட்டஞ் செய்யும் போது எல்லாத் தானியங்களும் வீட்டில் இருக்கும். நாங்கள் தேவையான நேரம் தேவையான தானியங்களை எடுத்து எல்லாவற்றையும் செய்வோம். இப்போது நீங்கள் தோட்டம் செய்யாததால் ஆடு, மாடு, கோழிகளுக்குக் கூடக் கடையில் வாங்கித்தான் தானியங்களைப் போடவேண்டியுள்ளது. கனநாட்களாக மோதகம் அவிக்கவில்லை என்று நினைத்து நேற்றுக் கடையில் பயறு வாங்கி வந்தேன். அந்தப் பயறு நாட் சென்ற பயறு. அதைவிட நேற்று மாதவன் தகப்பனின் துவசம் செய்தவன். எள்ளுத் தேவையென்று வந்தான். நேற்றுத்தான் எனது வாழ்நாளில் கேட்ட தானியத்தை இல்லையென்று

சொன்னேன். பயறு, அரிசி, உழுந்து யாவும் வீட்டில் இருந்தால் தினந்தோறும் நினைத்ததைச் செய்யலாம். அத்துடன் தரமானதாகவும் இருக்கும். ‘‘உழவு செய்து அதன் பயனால் உண்டு வாழ்கின்றவர்கள் தான் உரிமையோடு வாழ்கின்றவர்கள். ஏனைய தொழில்களைச் செய்பவர்கள் அனைவரும் உழவரைத் தொழுது வாழ்பவர்கள்’’ என்று எனது தந்தையார் அடிக்கடி கூறுவார். அதனால் நீங்கள் பழையபடி உழவுத் தொழிலைச் செய்யுங்கள்’’ என்றாள் பாக்கியலட்சுமி.

‘‘சுத்தமான நல்ல பண்டங்களை உண்ணவேண்டுமானால் கமம் செய்ய வேண்டும் என்றாள் நாமகள்.

**1033. உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்று எல்லாம்**
**தொழுதுஉண்டு பின்செல் பவர்.**

உழவுத் தொழில் செய்து அதன் மூலம் கிடைப்பவற்றை உண்டு வாழ்பவர்களே உரிமையோடு வாழ்கின்றவர் ஆவார். மற்றவர்கள் அவர்களைத் தொழுது வாழ்பவர்களே ஆவார்.

**வன்மை உடையவர்**

‘‘தாயும் மகளும் தான் கமம் செய்ய வேண்டாம் என்று மறித்தவை. இப்போது தான் கமம் செய்வதால் உண்டாகும் நன்மை தெரிகிறது. நான் கமம் செய்து மூட்டை மூட்டையாகக் கொண்டுவந்து வீட்டில் அடுக்கினால் மனிசி மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் விதம் விதமான பண்டங்களைச் செய்து தரும். உறவினர்கள்,

அயலவர்கள் எல்லோருக்கும் அள்ளிக் கொடுக்கும். ஆடு, மாடு, கோழிகள் யாவும் திண்டு கொழுத்திருக்கும். இப்போது கமம் செய்யாமையால் தானியங்கள் எதுவும் இல்லை. அதனால் தான் நீங்கள் இப்போது ஆசைப்பண்டங்களைச் செய்யவில்லையென்று எனக்குத் தெரியும். நேற்றுக் கடையில் பயறு வாங்கியிருக்கிறார்கள். அதுவும் நாட் சென்ற பயறு. அவியவில்லை. அதனால் மோதகம் அவிக்கவில்லை. இதைத் தாயும் மகளும் கதைத்துக்கொண்டிருக்கும் போது நான் கேட்டேன். முன்பு எனக்குப் பணக்கஷ்ரம் இருந்ததே தவிரப் பொருட்கஷ்ரம் இருக்கவில்லை. பிள்ளைகள் தினமும் விதம் விதமான திண்பண்டங்களை மாலை வேளைகளில் தேநீருடன் சாப்பிடுவார்கள். இப்போ கடையில் பொருட்களை வாங்க வேண்டியுள்ளதால் அவற்றை உண்ண முடியவில்லை. அதனால் தான் சொன்னேன்'' என்றார் தணிகாசலம்.

''வீட்டுத் தேவைக்காக அளவாகக் கொஞ்சமாகச் செய்யுங்கள்'' என்றாள் நாமகள்.

''எந்தத் தொழிலை ஒருவன் செய்தாலும், தனக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தானே உற்பத்தி செய்தல் வேண்டும். அப்பொழுது தான் வயிறார உண்ணலாம். இனத்தவர்கள், அயலவர்கள், நண்பர்களுக்குக் கொடுக்கலாம். முன்பு நான் சொன்ன போது நீங்கள் அதைக்கேட்கவில்லை. இப்போது உணர்ந்துள்ளீர்கள். அது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது'' என்றார் தணிகாசலம்.

“எனது தந்தையார் ஒரு விவசாயி. எந்த நாளும் வீட்டில் நெல் மூடைகள் அடுக்கப்பட்டிருக்கும். ஒரு நாளாவது அரிசிக்குக் குறையிராது. அப்பா எமது வீட்டுத் தேவைக்காக நல்ல இன நெல்லைக் குறிப்பிட்ட வயலில் விதைப்பார். அந்த நெல்லை கடைசிவரையும் விற்க மாட்டார். அந்த அரிசியில் வடித்த கஞ்சியே தனிச் சுவையானது. அப்பா இறந்த பின்பு அப்படியான சுவையான சோற்றை நான் சாப்பிடவில்லை. இப்பொழுது நினைத்தாலும் நாவூறுகிறது” என்றார் பரமேஸ்வரன்.

“உழவுத் தொழிலால் வரும் நெல்லை மலைபோலக் குவித்து வைத்திருக்கும் உழவர், பல அரசர்களின் குடை நிழலில் உள்ள நிலம் முழுவதையும் தம் குடை நிழலின் கீழ் கொண்டுவரும் திறமை உள்ளவர்கள்” என்று எனது தந்தை அடிக்கடி சொல்வார். “பருத்திமலை வளம் உள்ள நாடு. அங்குள்ள உழவர்கள் வருடம் முழுவதும் நெல் விதைப்பார்களாம். ஆதனால் அந்நாட்டில் நெல் மலை மலையாகக் குவிந்திருக்குமாம். மற்ற நாடுகளுக்கு விற்க முடியாததால் பருத்திமலை அரசன் நெற்செய்கையைக் கட்டுப்படுத்தினானாம். வறுமையுற்ற பல நாடுகளுக்கு அவன் நன்கொடையாக நெல்லைக் கொடுப்பானாம். அதனால் பல நாடுகள் பருத்திமலை அரசனுக்கு உரித்தாகின” என்று கஜேந்திரன் கொண்டுவந்த சரித்திரப் புத்தகத்திலிருந்து அறிந்து கொண்டேன். உங்களிடம்அப்புத்தகத்தைத் தந்தேன். நீங்கள் அதைப்படிக்கவில்லையா......?” என்று கேட்டார் தணிகாசலம்.

‘‘படித்தனான். பருத்திமலை நீர்வளம் மிக்க நாடு. பஞ்சம் ஏற்படும் வேளைகளில் அயல்நாடுகளில் இருந்து மக்கள் அங்குவந்து குடியேறுவார்கள். அறுவடை நடைபெறும்போது கூலியாட்கள் பற்றாமையினால் படைவீரர்கள் தான் கூலித் தொழிலாளிகளின் வேலைகளைச் செய்வதாகவும் குறிப்புக்கள் உள்ளன. மங்களபுரி, பவளபுரி, மதகநாடு போன்ற பல நாடுகள் பருத்திமலையின் நெற்குவியலுக்கு அடிமையாகியுள்ளன’’ என்றார் பரமேஸ்வரன்.

‘‘தேநீரைக்குடியுங்கோ’’ என்று நீட்டினாள் நாமகள்.

‘‘அப்ப இனி நீங்கள் வயலை உழுது பயறு விதைத்து அது விளைந்த பின் தான் மோதகம் எனக்குக் கிடைக்கும்’’ என்றார் பரமேஸ்வரன்.

‘‘இராசகோபாலிடம் ஒரு மூட்டை பயறு வாங்கவா?. அவன் தந்தால் அதற்குப் பணம் வாங்கமாட்டான். திருப்பி அத்தானியத்தைக் கொடுத்தாலும் வாங்கமாட்டான். அது பெரிய பிரச்சினை. அதனால் தான் நான் யாரிட்டையும் எதையும் கேட்பதில்லை’’ என்றார் தணிகாசலம்.

‘‘தான் கொடுப்பாரே தவிரப் பிறரிடம் வாங்க மாட்டார். அதனால் அம்மாவும் கேட்பதில்லை. இருந்தாலும் அப்பாவின் ஆசைக்காக வள்ளி மாமியிடம் நான் பயறு கேட்கப்போகிறேன்’’ என்றாள் நாமகள்.

**1034. பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுஉடை நீழ லவர்.**

நெல்லை அதிகமாக வைத்திருந்து இன்பமாக வாழும் உழவர்கள், பல அரசர்களின் குடை நிழலில் உள்ள நிலங்களைத் தமது குடை நிழலின் கீழ்க் கொண்டு வரும் வல்லமை படைத்தவர்கள்.

## யாசிக்காதவர்கள்

இராசகோபால் தனது மோட்டார் வண்டியில் ஏராளமான தானியங்களை ஏற்றிக் கொண்டு தணிகாசலத்தின் வீட்டிற்கு வந்தான். அவனுடன் வள்ளியம்மையும் கூட வந்தாள்.

இராசகோபால் மோட்டார் வண்டியில் மூட்டைகளாகக் கட்டிக்கொண்டு வந்த தானியங்களை இறக்கித் தணிகாசலத்தின் வீட்டினுள் கொண்டு சென்றான். அதைக்கண்ட தணிகாசலம் பரபரப்புடன் அங்கு வந்தார்.

“இதென்ன கோபால்......... இதெல்லாம் ஏன்...?”

“இது நெல், இது கடலை, இது உழுந்து, இது எள்ளு, இது நிலக்கடலை..............” ஒவ்வொரு மூட்டைகளையும் சுட்டிக்காட்டிச் சொல்லிக்கொண்டிருந்தான் இராசகோபால்.

“இவற்றையெல்லாம் ஏன் இங்கே கொண்டுவந்தனீ?” அதட்டினார் தணிகாசலம்.

“மாமா, நீங்கள் மோதகம் பல நாட்களாகச் சாப்பிடத் தரவில்லையென்று பாக்கியம் மாமியை நேற்று ஏசினீர்களாம். அவா வாழ்க்கையில் முதல் முதலாக வாய்விட்டு கண்ணீர் செரிந்து அழுதாவாம். அதை என்னால் பொறுக்கமுடியவில்லை. பெரும் தர்மவானின் மனைவி அழலாமா.......? அப்படி அழுதால் ஊர் தாங்குமா...? அதனால் தான் எல்லா வகைத் தானியங்களையும் கொண்டு வந்துள்ளோம்” என்றாள் வள்ளியம்மை.

“அதற்கிடையில் உங்களுக்கு அதை யார் சொன்னது?” கோபத்துடன் பாக்கியலட்சுமியைப் பார்த்தார் தணிகாசலம்.

“நான் சொல்லவில்லை” என்றாள் பாக்கிலட்சுமி.

“நீர் சொல்லாவிட்டால் யார் சொல்லியிருப்பார்கள்” என்று சிலகணங்கள் யோசித்த தணிகாசலம்; “நீங்கள் கொண்டுவந்த தானியங்கள் அனைத்தும் எங்களுக்குத் தேவைதான். கடையில் வாங்கும் தானியங்கள் நாட்சென்றமையால் பழுதடைந்து விடுகின்றன. நீ கொண்டுவந்த தானியங்கள் அனைத்தையும் நிறுத்துவிட்டுப் பணம் தருகிறேன். பணம் வாங்குவதானால் மட்டும் வைத்துவிட்டுப் போ. இல்லாவிட்டால் எல்லாவற்றையும் கொண்டு போ” என்றார் தணிகாசலம்.

வள்ளியம்மை கோபத்துடன் தணிகாசலத்தைச் சில கணங்கள் பார்த்தாள். அவளுக்கு அழுகை வந்தது; ‘‘மாமா கையால் தொழில் செய்து உணவு உற்பத்தி செய்யும் உழவர்கள் யாரிடமும் சென்று உணவுப் பொருட்களைக் கேட்டு வாங்கி உண்ண மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அத்துடன் அவர்கள் தம்மிடம் இரந்து கேட்பவர்க்கு இல்லையென்று சொல்லாமல் கொடுப்பவர்கள் என்பதும் தெரியும். அதை நீங்கள் நினைவூட்டுகிறீர்கள்....? இவ்வளவு காலமும் நீங்கள் இரக்காது கொடுத்து வந்தீர்கள். நாம் உங்களுக்கு எவ்வளவோ கடமைப்பட்டுள்ளோம். எம்மைவிட இந்த ஊரவர் பலருக்கு நீங்கள் அள்ளிக் கொடுத்துள்ளீர்கள். இப்பொழுது நாம் அதைத்திருப்பித்தர விரும்புகிறோம்’’ என்றாள் வள்ளியம்மை.

‘‘நான் விவசாயி. எனக்குக் கொடுத்துத்தான் பழக்கம். பிறரிடம் வாங்கிப் பழக்கமில்லை’’ என்றார் தணிகாசலம்.

‘‘நாம் பிறரா......?’’ விம்மினாள் வள்ளியம்மை.

அதைக்கேட்டு ஒரு கணம் ஆடிப்போனார் தணிகாசலம். அவர் தன்னை சுதாகரித்துக்கொண்டு ‘‘வள்ளியம்மை...’’ என்று தடுமாறினார்.

"இறக்கி வைத்த மூடைகளை ஏற்றுங்கோ...." அதுக்கு மேல் பேசமுடியாது தடுமாறினாள் வள்ளியம்மை.

பாக்கியலட்சுமி பதறிப்போனாள். நாமகள் தடுமாறினாள். "மச்சான் இதென்ன பேச்சு. இராசகோபால் யார்...?" என்று கேட்டார் பரமேஸ்வரன்.

"இவர் இப்படித்தான் மாமா.... பலருக்கு இவர் உதவி செய்திருக்கிறார். இவர் யாரிடமும் உதவி பெறுவதில்லை. யாராவது தனக்கு உதவி செய்துவிடுவார்கள் என்பதற்காகத்தான் இவர் வீட்டில் வைபவங்கள் எதையும் கொண்டாடுவதில்லை" என்றாள் நாமகள்.

"சரி. கொண்டுவந்தவற்றை வையுங்கோ. இனிமேல் கொண்டுவரக்கூடாது. தம்பி இராசகோபால், நான் உனக்குத் தந்த தோட்டத்தை விடு. நான் கமக்காரனாக மாறவேண்டும். நான் கமம் செய்யாததால் தான் நீங்கள் தானியங்களைக் கொண்டு வருகிறீர்கள். சில தினங்களுக்கு முன்பு நவராசா வாழைக்குலையும் மரக்கறி வகைகளும் கொண்டுவந்து தந்தான். தில்லைநடராசா நெல்லுக்கொண்டு வந்தான். நான் உழவுத் தொழிலை விட்டதால் தானே இவர்கள் எல்லோரும் எனக்குப் பொருட்களைக் கொண்டுவந்து தருகிறார்கள்" என்று கூறினார் தணிகாசலம்.

அவர்களைப் பார்க்கப் பரமேஸ்வரனுக்கு ஆச்சரியமாக இருந்தது; "பட்டணத்தில் உள்ளவர்கள், தமது இனத்தவர்கள்,

நண்பர்களது வீடுகளுக்குச் செல்வதானால் கடைகளில் ஏதாவது திண்பண்டங்களை வாங்கி வருவார்கள். இங்கு அன்பு தான் முக்கிய இடத்தைப் பெறுகிறது'' என்று நினைத்தார் பரமேஸ்வரன்.

---

**1035. இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர் கரவாது**
**கைசெய்துஊண் மாலை யவர்.**

---

கையால் உழைத்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர் பிறரிடம் சென்று இரக்கமாட்டார்; தம்மிடம் இரந்து வருபவர்களுக்குத் தேவையான பொருள் கொடுப்பர்.

துறவிகளும் வாழார்.

நவராசா தனது வயலை விதைப்பதற்கு முதல் நாள் மகா கணபதிக்குப் பொங்கல் வைப்பான். அன்று நவராசா மகாகணபதிக்குப் பொங்கினான். தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் இராசகோபாலும் வள்ளியம்மையும் பொங்கல் நிகழ்விற்காக மகாகணபதி ஆலயத்திற்கு வந்திருந்தனர்.

``ஏராளமான சொத்துக்களை உடைய நவராசாவின் மனைவியான துர்க்காவுக்கு நவராசா பல தொழில்கள் செய்வது பிடிக்கவில்லை. வியாபாரம், தரகு வேலை, கமம் என்று இருபத்துநான்கு மணி நேரமும் அவன் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான்.

அவர்களுக்குத் திருமணமாகி இரண்டு வருடங்கள் கழிந்தும் பிள்ளைப்பேறு கிடைக்கவில்லை. அதனால் துர்க்கா மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தாள். நவராசா தொழிலில் அதிக ஈடுபாடு கொண்டமையால் துர்க்காவுடன் கழிக்கும் நேரம் மிகவும் குறைவாகவே இருந்தது. அதனால் துர்க்கா கமச் செய்கையை விடும்படி அவனுக்கு தினமும் சொல்லிக்கொண்டிருந்தாள்.

“யாருக்காக நீங்கள் சம்பாதிக்கிறீர்கள்? எம்மிடம் போதியளவு சொத்திருக்கு. எனது சகோதரர்கள் ஐவர் வெளிநாட்டில் வசிக்கிறார்கள். அவர்கள் எமக்குத் தேவையானவற்றை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் கமச் செய்கையை விட்டுவிடுங்கள். மற்றய தொழில்களைச் செய்யுங்கள்” என்றாள். நவராசா சிறு வயதிலிருந்து தோட்டச் செய்கையில் ஈடுபட்டதால் அவனுக்கு அதைவிடக் கஷ்ரமாக இருந்தது. வாகனம், காணி, கட்டிடங்கள் போன்றவற்றை வாங்கி விற்பதாலும் தரகு வேலை பார்ப்பதாலும் பல இலட்சம் ரூபா வருமானமாக வந்துகொண்டிருந்தது. அதனால் அவனால் அவற்றைவிட முடியவில்லை.

தானியங்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதாலும் அதிக வருமானம் அவனுக்குக் கிடைத்தது. அதனால் அவன் தான் செய்யும் தொழில்களை விட விரும்பவில்லை. அதனால் வேண்டாவெறுப்பாக அக்கறையின்றித் துர்க்கா பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டாள். அதை உணர்ந்த வள்ளியம்மை சொன்னாள்;

“துர்க்கா, நீ நினைப்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால், கணவன் ஒரு நல்ல காரியத்தில் ஈடுபடும் போது மனைவி மனங்கோணக்கூடாது”

துர்க்கா வள்ளியம்மையைக் கவலையுடன் பார்த்தாள். அவளது கண்கள் கலங்கின; “வள்ளியக்கா, எனக்கு அவரின் மீது அன்பில்லையென்று கருதுகிறீர்களா...? எனக்கு ஒரு குழந்தை வேண்டும்” விம்மினாள்.

“கவலைப்படாதை துர்க்கா.... மகா கணபதி கைவிட மாட்டார். அவரை நம்பு” என்றாள் வள்ளியம்மை.

மகாகணபதி மீது நான் பூரண நம்பிக்கை வைத்துள்ளேன். அவர் உழவுத் தொழிலைக் கைவிட வேண்டும் என்று நினைத்துத்தான் பொங்கிறேன்” சிரித்தாள் துர்க்கா. அவளது கண்களால் கண்ணீர் வழிந்தது.

பொங்கல் பானையை தணிகாசலம் இறக்கி நிலத்தில் வைத்துவிட்டுத் தலைவாழை இலையை வைத்து அதில் பொங்கலைப் படைத்தார். பின் வாழைப்பழத்தை வைத்தார். அதன் பின் மோதகத்தை வைத்துவிட்டுக் கற்பூரத்தைக் கொழுத்தினார். பின் தேங்காயை உடைத்துவிட்டுத் தேவாரம் பாடினார்.

கற்பூரம் அணைந்ததும் தண்ணீரைத் தெளித்துவிட்டு மகா கணபதிக்குப் படைக்கப்பட்ட நிவேதனப் பொருட்களை அங்கிருந்தவர்களுக்குக் கொடுத்தார்.

நவராசா மகிழ்வுடன் வீட்டுக்குச் செல்ல நினைத்தான். துர்க்காவையும், வள்ளியம்மையையும் அவ்விடத்தில் காணவில்லை. திரும்பிப் பார்த்தான். அவர்கள் இருவரும் அரச மரத்தின் கீழ் நின்றனர். அரசமரத்தடியில் சுவாமியார் இருந்தார். நவராசா அரசமரத்தடிக்குச் சென்றான். சுவாமியார் அவனைப் பார்த்து புன்னகைத்தார்; ‘‘மகனே, உனது மனைவியைத் திருப்திப்படுத்து. எந்தெந்த வேளையில் எதையெதைச் செய்ய வேண்டுமோ அதையதைச் செய். உழவர்களுடைய கைகள் உழவுத்தொழிலைச் செய்யாமல் விடுமானால் எல்லாவற்றையும் துறந்துவிட்டோம் என்று கூறும் துறவிகளும் வாழமுடியாமற் போய்விடும். அதனால் உழவுத் தொழிலை மட்டும் செய். ஏனையவற்றைக் கைவிடு. காலம் நிறைய இருக்கிறது. பின்பு அவற்றைச் செய்யலாம்’’ என்றார்.

‘‘அப்படியே செய்கிறேன் சுவாமி’’ என்றான் நவராசா.

துர்க்கா மகிழ்வுடன் சிரித்தாள். அவளுக்கு; ‘‘நவராசா தன்னுடன் அதிக நேரம் இருக்க வேண்டும்’’ என்ற எண்ணம் மேலோங்கியது.

---

**1036. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை.**

---

உழவர்களது கை, ஏரைத் தொடாமல் ஓய்ந்து இருக்குமானால், எல்லாப் பற்றையும் துறந்து விட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் உணவு இராது.

பயிர் சிறக்க.

துர்க்கா நவராசாவின் வீட்டுக்குத் தனியே வந்தாள். அவளைக் கண்ட கதிரேசன் தடுமாறிப்போனார். வழமையாக நவராசாவுடன் மோட்டார் வாகனத்தில் வரும் துர்க்கா அன்று வாடகை வாகனத்தில் வந்து இறங்கினாள். அவள் இறங்கியதும், அவள் வந்த வாகனம் சென்றுவிட்டது.

துர்க்கா வந்து கதிரேசனுக்கு அருகில் அமர்ந்தாள். அவளது முகம் என்றுமில்லாதவாறு சோர்ந்திருந்தது.

“தனியே வந்திருக்கிறாய். நவராசா எங்கே?” என்று கேட்டார் கதிரேசன்.

“விடிய முன் புறப்படுகிறார். இரவு பத்துப் பதினொரு மணிக்கு வாறார். காலைச் சாப்பாடும் மத்தியானச் சாப்பாடும் எங்கே சாப்பிடுகிறார் என்று தெரியவில்லை. இரவு பத்துமணிக்குப் பின்பு வந்தாலும் சரியாகச் சாப்பிடுவதில்லை. வந்தவுடன் நித்திரையாகிவிடுகிறார்” என்றாள் துர்க்கா.

கதிரேசனுக்குக் கவலையாக இருந்தது; “இளங்குடும்பம் பிரிந்திருந்தால் பல விபரீதங்கள் வந்துவிடும். முன்பு துர்க்கா நவராசாவுடன் பிரச்சினைப்பட்டவள். பின் இலட்சுமியின் வேண்டுகோளிற்கிணங்க

ஒற்றுமையானவள். இனிப்பிரச்சினைப்பட்டால் கரைச்சல். பொதுவாகப் பெண்கள் கெட்டுப் போவதற்கு அவர்களது கணவன்மார்களே காரணமாக அமைகிறார்கள். வசந்தினியின் கணவன் இரவு பகலாகத் தான் வேலை செய்யும் நிறுவனத்தில் தங்கியிருப்பதால் தான் அவள் கெட்டழிந்தாள்'' என்று யோசித்தார் கதிரேசன்.

''எனக்குப் பேச்சுத் துணைக்கு வீட்டில் யார் இருக்கிறார்கள்? நான் சமைப்பதை உண்ண யாரும் இல்லை. எவ்வளவு நேரம் வானொலி கேட்பது? தொலைக்காட்சியைப் பார்ப்பது?'' என்று சொன்னாள் துர்க்கா.

சுவாமியார் சொன்ன பின்பு வியாபார நிலையத்தையும், தரகு வேலையையும் விடப்போவதாகச் சொன்னவன். திடீரெனச் செய்த வேலைகளை விடமுடியுமா...? கொஞ்ச நாட்கள் பொறுத்துக்கொள்ளம்மா'' என்றார் கதிரேசன்.

அப்படித்தான் அவரும் சொல்கிறார். அவர் வந்தால் நீங்கள் வற்புறுத்திச் சொல்லுங்கோ. நீங்கள் சொன்னால் அவர் கட்டாயம் கேட்பார்'' என்ற துர்க்கா தான் கொண்டு வந்த புகையிலையைக் கொடுத்துவிட்டுச் சொன்னாள்; ''இப்ப அவருக்கு இங்கு வருவதற்குக் கூட நேரமில்லை. அதனால் தான் நான் கொண்டுவந்தேன்'' என்றாள்.

''நன்றி அம்மா'' அவனை நெருக்காதை. அவன் உன்னில் நிறைய அன்பு

வைத்திருக்கிறான். உன்னுடைய சொல்லைக் கேட்பான்'' என்றார் கதிரேசன்.

பூரண மகிழ்வுடன் சிரித்தாள் துர்க்கா. அவளது சிரிப்பைப் பார்க்க கதிரேசருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அப்பொழுது நவராசாவும் இராசகோபாலும் அங்கு வந்தனர். கதிரேசனுக்குப் பக்கத்தில் துர்க்கா இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான் நவராசா.

‘‘துர்க்காவைத் தனியே விட்டுட்டு நீ எங்கே திரிகிறாய்?. உனக்கு இப்போது ஏன் பணம்? தேவைக்கு அதிகமாகப் பணம் இருக்கு. இராசகோபாலைப் போல நாலைந்து பிள்ளைகள் இருந்தால் தான் ஓய்வு ஒளிச்சலின்றி பணம் தேட வேண்டும்'' என்றார் கதிரேசன்.

‘‘என்னுடைய வியாபார நிலையத்தை இராசகோபாலிடம் ஒப்படைத்துவிட்டேன். தரகு வேலையை உடன் விடமுடியவில்லை. காணியை, வாகனத்தை வாங்கியவர்கள் பணம் கொடுத்து முடிந்ததும் விட்டுவிடுகிறேன்'' என்றான் நவராசா. துர்க்கா மகிழ்வுடன் சிரித்தாள்.

‘‘கதிரேசப்பா, உங்களை எனது வயலுக்கு ஒரு முறை அழைத்துச் செல்வதற்காகத்தான் வந்தேன். நெற்பயிர் வெழுறி வாடியிருக்குது. வந்து ஒருமுறை வயலை பாருங்கோ'' என்றான் இராசகோபால்.

‘‘ஒருபலம், புழுதி கால் பலம் ஆகும்படி நன்றாக உழுது காயவிட்டால், ஒரு பிடி எருவும் தேவைப்படாமலே பயிர் செழித்து வளரும். நீ நன்றாக வயலை உழுது காயவிடவில்லைப் போலத் தெரிகிறது. காசு சம்பாதிக்க வேண்டும் என்ற அவசரத்தில் வயலை உழுது காயவிடாமல் விதைத்தால் பயிர் செழிக்காது; ‘‘சரி வா போவம்’’ என்று எழுந்தார் கதிரேசன்.

வீட்டுக்கு வந்த துர்க்கா சேலையைக் கழற்றினாள். நவராசா குளித்துவிட்டு வந்தான். உள்ளாடையுடன் நின்ற துர்க்காவைப் பார்த்ததும் அவனுக்கு மோகம் தலைக்கேறியது.

காலையிலும் சாப்பிடாமல் சென்றீர்கள். உங்களுக்குப் பிடித்த கறி வகைகளைச் சமைத்துள்ளேன். சாப்பிட வாருங்கள்’’ என்றாள் துர்க்கா.

‘‘சேலையைக் கழற்றாமல் கேட்டிருந்தால் சாப்பிட்டிருக்கலாம்’’ என்றவாறு அவளை அணைத்தான் நவராசா. மகிழ்ச்சிச் சிரிப்புடன் ‘‘சாப்பிட வாருங்கோ’’ என்று சிணுங்கினாள் துர்க்கா.

---

**1037. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்துஎருவும் வேண்டாது சாலப் படும்.**

---

ஒரு பலம் புழுதி கால் பலம் ஆகும் படி நன்றாக நிலத்தை உழுது காய விட்டால், ஒரு பிடி எருக் கூட இடாமலே பயிர் செழித்து வளரும்.

## பாதுகாத்தலே முக்கியம்.

கதிரேசன் இராசகோபாலின் வயலை வந்து பார்த்தார். அவர் கற்கும் போது விவசாயத்தை ஒரு பாடமாகக் கற்றவர். அத்துடன் அவ்வூர் மிருக வைத்தியரான பொன்னுச்சாமியின் உதவியாளராகவும் கடமையாற்றியவர். அதனால் மிருகங்களுக்கு நோய் ஏற்பட்டாலும் அவர் மருந்து கொடுப்பார். அவ்வூர் மிருக வைத்தியரான பொன்னுச்சாமி இறந்த பின் கதிரேசன் தான் மிருக வைத்தியராகக் கடமை புரிந்து வந்தார்.

‘‘நல்ல முறையில் வயல் உழுது காயவிடப்படவில்லை. ஒருவன் பல தொழில்களைச் செய்வதை விட ஒரு தொழிலை அக்கறையுடன் செய்தால் அத்தொழில் மூலம் பல தொழில்களில் இருந்து பெறும் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அவாப்பட்டுப் பல தொழில் செய்வதாலும் அவசரப்பட்டு காரியமாற்றுவதாலும் நட்டம் தான் உண்டாகும். தன்குடி உயரவேண்டும் என்று விரும்பி உற்சாகத்துடன் பல தொழில்களைச் செய்தாலும் அதில் அக்கறை வேண்டும். நீ அவசரப்பட்டுவிட்டாய். குளத்தில் போதியளவு நீர் இருக்கிறது. வருடம் பூராகவும் வயலுக்கு பாய்ச்சுவதற்குத் தேவையான நீர் குளத்திலுள்ளது. அப்படியிருக்க ஏன் அவசரப்படுகிறாய்?. நன்றாக வயலை உழுது காயவிட்டால் எருவில்லாமலேயே பயிர் வளரும். வயல் புழுதியாக வரும்வரை உழ வேண்டும். சிலர் ஓரிரு முறை உழுவார்கள். அதனால் தான் களை அதிகமாக முளைக்கிறது;

களை எடுக்க அதிக பணம் செலவாகிறது. அந்தப் பணத்தில் பலமுறை வயலை உழுதிருக்கலாம். பலமுறை வயலை உழுவதால் வயலின் களித்தன்மை நீங்கி மண் புழுதியாகும். அதனால் நெல்லின் வேர் நிலத்தில் இலகுவாகச் செல்லும்'' என்றார் கதிரேசன்.

''நான் அவசரப்பட்டது உண்மை தான். இன்னும் இரண்டு வாரம் கழித்து விதைத்திருக்கலாம். இல்லாவிட்டால் குருக்கள் கூறியது போல அடுத்த வருடம் விதைத்திருக்கலாம்'' என்றான் இராசகோபால். அவனது குரல் கரகரத்தது.

''ஒரு தொழிலை நன்கு திட்டமிட்ட பின்பு தான் செய்ய வேண்டும். செய்துவிட்டுப் பின் ஏன் அதைச் செய்தோம் என்று எண்ணக்கூடாது. அப்படி எண்ணினால் எண்ணுபவனின் பலம் பாதியாகக் குறைந்துவிடும். அத்துடன் தன்குடியை உயர்த்த வேண்டும் என்ற நினைப்போடு முயற்சி செய்யும் ஒருவனுக்குத் தெய்வம் வரிந்து கட்டிக் கொண்டு வந்து உதவி செய்யும். அவன் காலநேரம் பார்க்கத்தேவையில்லை. சண்முகம் நல்ல உழைப்பாளி என்று உனக்குத் தெரியும். அவன் ஒருமுறை ஐப்பசி மாதம் வெங்காயம் நட்டான். அத்துடன் மரக்கறி வகைகளையும் நட்டான். வழக்கமாக ஊரவர் தைப்பொங்கல் கழித்துத்தான் வயலில் இறங்குவார்கள். சண்முகத்தை நானும் ஏசினேன். ஊரவர் 'அவனுக்குக் காசு மெத்தின குணம்' என்றனர். ஆனால் அந்த முறை அவனுக்குச் சா வெள்ளாமை. பல இலட்சம் ரூபாவை அவன் இலாபமாகப் பெற்றான். அதற்குக்

காரணம் அவனுடைய கடும் முயற்சியே தவிரக் காலம் அல்ல. அதனால் நீ கவலைப்படுவதைவிட்டுத் தைரியத்துடன் செயற்படு. குருக்கள் சொன்னதைப் பற்றிநினைக்காதே. சோதிடம் ஒருவனைப் பலசாலியாகவும் மாற்றும்; பலவீனனாகவும் மாற்றும். அதனால் நடந்ததை நினைத்தாயேயானால் உனது ஊக்கம் குறைந்துவிடும்'' என்றார் கதிரேசன்.

''சரி அப்பு. இதற்கு என்ன செய்யலாம்?''.

ஏர் உழுவதைவிட எரு இடுதல் மிகவும் முக்கியம். களை எடுத்தபின் நீர் பாய்ச்சுவதைவிடப் பயிரை நன்றாகப் பாதுகாத்தல் மிகமுக்கியம். வயலைப்பார் காட்டுப்பன்றிகள் மேய்ந்திருக்கு. அதனால் காவலுக்கு ஆட்களை நியமி. இப்போது பசளையிட வேண்டும். எரு மண்ணோடு சேர்ந்து புழுதியானால் தான் அதனால் பயன் ஏற்படும். நெல் நான்கு மாதப்பயிராகையால் எரு புழுதியாக வரும்வரை உழுதல் வேண்டும். கட்டியான எரு மண்ணோடு சேராது. பார் நீரில் மிதந்துகொண்டிருக்கிறது. நீரில் மிதக்கும் எருக்கட்டிகள் மழை வெள்ளமாகப் பெய்தால் வெள்ளத்துடன் சென்றுவிடும். அதற்காகத்தான் பெரியவர்கள் வயல் மண் புழுதியாகும் வரை உழச்சொல்வது'' என்றார் கதிரேசன்.

இராசகோபாலின் முகம் கவலையால் கறுத்தது. அதைக்கவனித்த கதிரேசன் சொன்னார்; ''இராசகோபால் மனஞ் சோர்ந்தால் எதுவும் செய்ய முடியாது. தற்போது பயிருக்குப் பசளை

தேவையாகவுள்ளது. இராசனப் பசளை வாங்கி வந்து விசிறு. வயல் செழிக்கும்'' என்றார்.

**1038. ஏரினும் நன்றால் எருஇடுதல்; கட்டபின்**
**நீரினும் நன்று அதன் காப்பு.**

ஏர் உழுதலை விட எருஇடுதல் நல்லது; உழுது எருவிட்டுக்களை நீக்கிய பிறகு, நீர் பாய்ச்சுதலை விட காவல் காப்பதே முக்கியமானது.

மனைவியைப் போல

இராசகோபால் கவலையுடன் வயலைப் பார்த்தான் அவனுக்குக் குருக்கள் சொன்ன வார்த்தைகள் காதில் ஒலித்தன. ''வள்ளியம்மை என்னைவிட அறிவுள்ளவள். அவள் திருப்பித் திருப்பிச் சொல்லியும் நான் கேட்கவில்லை. அதனால் தான் எனக்குத் துன்பம் நேர்ந்தது'' என்று நினைத்தான்.

''முதலில் உனக்கு வயலைப் பற்றிய முழுமையான அறிவு வேண்டும். அவற்றை நன்கு அறிந்த பின்பே வயலில் இறங்கவேண்டும். அப்படி அறிந்த பின் நீ செயற்பட்டால், நீ வாழ்வின் உயர்ந்த நிலைக்குச் செல்லலாம். இலாபம் வரவேண்டுமானால் தொழிலை அக்கறையுடன் செய்தல் வேண்டும். மனம் சலிக்காமல் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும். ஒரு வழி பிழைத்தால் இன்னொரு வழியைக் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் மேலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளால் தான் வருமானத்தை மேலும் மேலும்

அதிகரிக்க முடியும். காலம் உனக்கு உதவி செய்யாது; கிரகங்கள் எதுவும் உனக்கு உதவி செய்ய வானத்தை விட்டுக் கீழே இறங்கி வரமாட்டாது. நீ தான் உனது வயலுக்கு மூலகர்த்தா. பல தொழில்களைச் செய்யும் நீ, அவற்றை ஒழுங்காகச் செய்ய நினைக்கவேண்டும். வரம்பைப் பார் புல் முளைத்து வளர்ந்துள்ளது. இப்புல்லை விதைப்பதற்கு முன்பே அழித்திருத்தல் வேண்டும். நீ அவசரப்பட்டமையால் அவை ஒழுங்கான முறையில் அழிக்கப்படவில்லை. வயலில் கூலியாட்கள் வேலைசெய்யும் காலங்களில் நீ அவர்களுடன் கூட இருந்து, அவர்கள் செய்யும் வேலைகளைக் கவனித்தல் வேண்டும். வரம்புகளிலுள்ள புற்களை வேரோடு அகற்றாது பல இடங்களில் புற்களுக்கு மேல் மண்ணை அள்ளிப்போட்டு முடியிருக்கிறார்கள். வயலில் காட்டு மிருகங்கள் உலாவுகின்றன. அதை நீ கவனிக்கவில்லை. காவலுக்கு ஆட்களை நியமித்தாலும் தினமும் வயலைச் சுற்றிப் பார்த்தல் வேண்டும். இதோ பார் இந்த நெற்பயிரின் தாழ் சுருண்டிருக்கு'' என்று கூறிய கதிரேசன் அத்தாளை அறுத்துப் பிரித்தார். அதற்குள் ஒரு பச்சைப் புழு இருந்தது. அதை நவராசாவுக்குக் காட்டினார்.

புழு தாளில் இருந்து நெளிந்தது. இந்தப் புழுத்தாக்கினால் நெற்பயிர் நாசமடைந்துவிடும். கிருமி நாசினி தெளிக்கவில்லையா.....?'' என்று கேட்டார் கதிரேசன்.

‘‘நேற்றுக் கூலியாட்களைக் கொண்டு கிருமி நாசினி தெளிப்பித்தேன்'' என்றான் இராசகோபால்.

“நீ வந்தாயா…?”

“இல்லை.” என்று தலையாட்டினான் நவராசா.

“மகனே, வயலில் கூலியாட்கள் வேலைசெய்யும் போது நீ அருகில் இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் கிருமி நாசினியைத் தெளிக்காது விட்டுவிடுவார்கள் பின் தெளிக்காத கிருமி நாசினியைக் கொண்டு சென்று விடுவார்கள்” கதிரேசனை ஆச்சரியத்துடன் பார்த்தான் இராசகோபால். அவர் கூறுவதை நினைக்க அவனுக்குத் தலை சுற்றியது. முதல் நாள் பதினைந்தாயிரம் ரூபா பெறுமதியான கிருமி நாசினியை அவன் வாங்கிக் கொடுத்தான். அவர்கள் கூலியாக எண்ணாயிரம் ரூபா பெற்றனர்.

“முடிந்த விஷயங்களைப் பற்றிக் கவலைப்படாதே. நிலத்துக்குரியவன் நாள்தோறும் நிலத்தைச் சென்று பார்த்து வேண்டியவற்றைச் செய்யாது வேறு செயல்களில் ஈடுபட்டால் அந்நிலம் அவனது மனைவியைப் போல வெறுத்து அவனை ஒதுக்கி விடும். நிலத்தைக் கவனித்து அதற்குத் தேவையானவற்றைச் செய்யாவிட்டால் நிலம் பிணங்கிவிடும். அதைப்போல மனைவியையும் தினமும் திருப்திப்படுத்த வேண்டும். அவளின் தேவைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்ய வேண்டும். உனது மனைவிக்கு ஒரு சேலை மீது அல்லது ஓர் ஆபரணத்தின் மீது ஆசையிருந்தால் அதை வாங்கிக் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவளுக்குச் சமாதானம்

கூறவேண்டும். நீ அவளது ஆசையைப் பூர்த்தியாக்காவிட்டால் அவள் தனது தேவையை இன்னொருவனைக் கொண்டு நிறைவேற்றப் பார்ப்பாள். இது பொருளுக்கு மட்டுமல்ல பல்வேறுபட்ட விஷயங்களிலும் இருக்கிறது. உனது மனைவியுடன் நீ தினமும் மகிழ்வுடன் கலந்துரையாடாமல் விட்டாலும் இன்னொருவரை அவள் நாடுவாள். இது தான் உலகத்தில் நடைபெறும் விபச்சாரத்துக்கு மூல காரணம்' என்றார் கதிரேசன்.

இராசகோபால் சிரித்தான். "உண்மை தான். நான் வள்ளியம்மையை நேசிப்பது போல வயலையும் இன்று தொடக்கம் நேசிப்பேன்" என்றான் இராசகோபால்.

"முதலில் அதைச் செய். உனக்கு விளைச்சல் அதிகமாக இருக்கும். அதைவிட்டுவிட்டுக் காலத்தின் மீது பழி போடாதே" என்றார் கதிரேசன்.

**1039. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடி விடும்.**

நிலத்துக்குரியவன் தினமும் சென்று நிலத்தைப் பார்த்து வேண்டியவற்றைச் செய்யாதிருந்தால், அந்நிலம் அவனது மனைவியைப் போல அவனை வெறுத்து ஒதுக்கி விடும்.

## நல்லாளின் சிரிப்பு

இராசகோபாலும் கதிரேசனும் மோட்டார் வண்டியில் வயலில் இருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது வசந்தினியும் அவளின் வீட்டில் இருப்பவனும் உந்துருளியில் வந்தனர்.

“அந்த வாகனத்தில் செல்பவர்களைப் பார். புருஷன் வாகனத்தில் ஏற்றிச் செல்லாது இரவு பகலாகத் தான் வேலை செய்யும் நிறுவனத்தில் இருக்கிறான். வீட்டுக்கு வந்தாலும் அவன் அந்த நிறுவனத்தின் வேலைகளைச் செய்கின்றான். அவளுடன் அன்பாகக் கதைப்பதில்லை. அப்படிக் கதைக்க அவனுக்கு நேரமில்லை. அதனால் அவள் மாற்றானுடன் செல்கிறாள். ஊரவர்கள் அவளை எவ்வளவு கேவலமாகக் கதைக்கிறார்கள். வசந்தினி என்னுடன் அன்பாகப் பழகுவாள். ஒருநாள் நான் அவளுக்கு “உன்னைப்பற்றி ஊரில் தவறாகக் கதைக்கிறார்கள்” என்றேன். அதற்கு அவள் “யார் எதையும் கதைக்கட்டும்” என்றாள். அதன் பின் நான் எதுவும் பேசுவதில்லை. நவராசா ஒரு நாள் சொன்னான்; “அவை ஊருக்குள் செல்லும் போது தான் விலகி ஆளில் ஆள் முட்டாமல் இருப்பார்கள். ஊர் கழிந்தால் தோளில் கைபோட்டுக் கொண்டு திரிவார்கள்” ஆராய்ந்து பார்த்தால் அவள் அக்குற்றங்களைச் செய்யக் காரணமாக இருப்பது அவளது கணவன் தான்” என்றார் கதிரேசன்.

இராசகோபால் தனது வயலின் நினைவோடு வந்தமையால் கதிரேசன் கூறிய வார்த்தைகள் எவையும் அவனுக்கு விளங்கவில்லை. இராசகோபால், கதிரேசனை அவரது வீட்டில் இறக்கிவிட்டுச் சொன்னான். ‘‘ஒருவாரம் கழித்து நீங்கள் ஒரு முறை வந்து வயலைப் பாருங்கள்’’ என்றான்.

‘‘சரி’’ என்றார் கதிரேசர்.

இரண்டு வாரங்களின் பின் கதிரேசனும் இராசகோபாலும் மோட்டார் வண்டியில் வயலுக்குச் சென்றனர். வயல் பச்சைக் கடலைப் போலப் பசுமையாக இருந்தது. வரம்பால் இருவரும் நடந்து சென்றனர்.

‘‘நீங்கள் சொன்ன பின்பு நான் தினமும் காலையும் மாலையும் வயலைப் பார்வையிடுவேன். தொழிலாளர்கள் வேலை செய்யும் போது உடனிருந்து கண்காணிப்பேன். இப்பொழுது வயல் எப்படி இருக்கிறது?’’ என்று கேட்டான் இராசகோபால்.

‘‘மிகமிக நன்றாக இருக்கின்றது. நெல்லின் தாளை முன்பு புழுக்கள் சுருட்டி வைத்திருந்தன. இப்பொழுது அப்படியில்லை. வரம்புப் புற்கள் யாவும் அகற்றப்பட்டுள்ளன. பயிர்கள் பச்சைப் பசேலென நிற்கின்றன. பயிர் வளர்வதைப் பார்த்தால் இம்முறை உனக்கு பெரும் விளைச்சல் ஏற்படும்’’ என்றார் கதிரேசன்.

இராசகோபால் பூரிப்புடன் சிரித்தான். தானும் வள்ளியம்மையும் வயலில் வேலை செய்யும் போது அங்கிருந்த நாட்களை எண்ணிப் பார்த்தான்.

அன்று வயலில் காவலுக்காக அமைக்கப்பட்டிருந்த சிறு வீட்டில் இராசகோபாலும் வள்ளியம்மையும் இருந்தனர். பல நாட்களாக இராசகோபால் தொழில் ஈடுபட்டிருந்தமையால் அவன் வள்ளியம்மையுடன் அன்பாகப் பேசவில்லை. தொழிலாளர்கள் தூரத்தில் வேலை செய்துகொண்டிருந்தனர். அவர்கள் எக்காரணங் கொண்டும் அங்கு வரமாட்டார்கள்.

இராசகோபால் வள்ளியம்மைக்கு அருகே வந்து அவளது கன்னத்தைத் தட்டினாள். அவள் அவளை நிமிர்ந்து பார்த்தாள்; ''வெளியே கூலியாட்கள்....'' அதற்கு மேல் வள்ளியம்மையைப் பேச அவன் விடவில்லை. சில நிமிடங்களின் பின் ''நீங்கள் வயது போகப் போக பெரும் மோசம். திருமணமான புதிய தம்பதிகள் என்று நினைப்பு'' என்று சிணுங்கினாள்.

''வயது போனாலும் உமது வனப்புக் குறையவில்லை.... முன்பு நான் சோம்பலாக இருந்தேன். அதனால் உணர்வுகள் எழுந்தாலும் உமக்கு அருகில் வரப்பயம். அதனால் பேசாமல் இருந்தேன். தம்மிடம் ஒரு பொருளும் இல்லையென்று சோம்பியிருப்பவர்களைக் கண்டால் உழைத்தால் பெரும் வளத்தைத் தரக்காத்திருக்கும் நிலம் என்னும் நல்லாள். தன்னுள்ளே சிரிப்பாள் என்றும் தன்னைக் கட்டியவள் போலப். பிணங்குவாளென்றும் கதிரேசு அப்பு எனக்குச்

சொன்னவர். அது உண்மை. இப்பொழுது தான் அது எனக்குத் தெரிகிறது. இலட்சம் இலட்சமாக இந்த நிலம் என்ற நல்லவள் தற்பொழுது அள்ளித் தருகிறாள். நான் சோம்பியிருந்த காலத்தில் அவள் என்னைப் பார்த்துச் சிரித்திருப்பாள். அது எனக்குத் தெரியாது என்றான் இராசகோபால்.

“இப்பொழுதான் எனக்கு உங்கள் மீது காதல் அதிகரிக்கிறது” என்றாள் வள்ளியம்மை; “கதிரேசன் சொன்னது சரி” என்று நினைத்தான் இராசகோபால்.

---

**1040. இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம் என்னும் நல்லாள் நகும்.**

---

தன்னிடம் ஒரு பொருளும் இல்லை என்று எண்ணி வறுமையால் சோம்பி இருப்பவனைக் கண்டு, அள்ளிக் கொடுப்பவளான நிலம் என்ற நல்லவள் அவனைப் பார்த்துச் சிரிப்பாள்.

துன்பந் தருவது.

“இப்பொழுது தான் என்மீது உமக்குக் காதல் அதிகரிக்கிறதா...?” என்று கேட்டான் இரசகோபால்.

நளினமாகச் சிரித்தாள் வள்ளியம்மை. அவளது வெண்பற்கள் முத்தைப் போல ஒளிர்ந்தன. இரண்டு வருடங்களுக்கு முன்பு வள்ளியம்மை இருந்த கோலத்தை நினைத்துப் பார்த்தான் இராசகோபால். அவன் அப்பொழுது உழைக்கவில்லை. எந்த நேரமும் படுத்திருப்பான். சாப்பிடுவதற்காக மட்டும் எழும்புவான். அப்போது தான் அவன் இயற்கைக் கடன்களையும் கழிப்பான். அவன் எழும்பும் நேரங்களில் வள்ளியம்மை வீட்டில் இருக்கமாட்டாள். ஏதாவது அவள் சமைத்து வைத்திருக்கிறாளா என்று அடுப்படியிலுள்ள சகலவற்றையும் திறந்து பார்ப்பான். அதிகமான நாட்களில் முதல் நாள் சமைத்த சோற்றுக்குத் தண்ணீர் ஊற்றி வைத்திருப்பாள். சில சமயங்களில் தண்ணீருக்குப் பதிலாக தேங்காய்ப் பால் சிறிதளவு கலந்து இரண்டு வெங்காயமும் இரண்டு பச்சை மிளகாயும் நறுக்கிக் போட்டுச் சிறிதளவு உப்பும் போட்டிருப்பாள். ஆயிரத்தில் ஒரு நாளில் யாரிடமாவது ஊறுகாய் வாங்கி அதற்குள் போட்டுப் பிசைந்திருப்பாள். அவள் அப்படி ஒரு கலவை செய்து வைத்திருக்கும் போது அவனது தாயின் தகப்பனார் முருகன் கூறிய கதை ஒன்று அவனுக்கு ஞாபகம் வரும்.

‘‘நாங்கள் நாகநாத நயினாரின் வீட்டில் வேலை செய்தால் நாகநாதனின் தாய் முத்தாச்சி நாச்சியார் காலை உணவாகப் பழஞ்சோறு கரைத்துக்கொண்டு வருவார். அதற்குள் சோறு இருப்பது குறைவு. பத்துப்பேருக்கு அளவாக சோற்று கரைப்பதானால் ஐந்து அகப்பை சோறு தான் அதற்குள் இடுவாள். பெரியதொரு பானைக்குள் நாலைந்து அகப்பை பழய சோற்றைப்

போட்டு இரண்டு தேங்காயைப் பிளிந்து கொஞ்ச வெங்காயமும் பச்சை மிளகாயும் அறுத்துப் போட்டு ஊறுகாயும் சேர்த்திருப்பாள். வேலை செய்பவர்களுக்கு அப்பானத்தைக் கொடுப்பதற்காகப் பத்துப் பெரிய சிரட்டைகள் இருக்கும். வேலை செய்பவர்கள் தாம் தாம் முன்பு குடித்துவிட்டு வேலிக்குள் செருகி வைத்த சிரட்டைகளை எடுத்துவருவார்கள். சிலா் பனையோலையில் பிளாச் செய்து வைத்திருப்பார்கள். அவர்கள் அவற்றைக் கொண்டு வந்ததும் பெரியதொரு பாத்திரத்திரத்தால் பானையுள் இருக்கும் பானத்தை அள்ளி ஒவ்வொருவருக்கும் ஊற்றுவாள். இது தினமும் நடைபெறும் நிகழ்வு"

"அந்தப் பானைக்குள் சோறு இராது. அதனால் குடித்த சில மணித்தியாலத்திற்குள் அவர்களுக்குப் பசிக்கும். ஒரு நாள் முத்தாச்சி நாச்சியார் பெரியதொரு பானையைக் கொண்டு வந்து விட்டு வழமையான பொருட்களைப் போட்டு பானம் தயாரித்து விட்டு எல்லோரையும் குடிக்க வருமாறு அழைத்தார்.

அன்று நான் பானைக்கு அருகில் வந்து நான் கட்டியிருந்த வேட்டியைக் கழற்றினேன். அதைக்கண்ட முத்தாச்சி நாச்சியார்; "என்னடா முருகா வேட்டியைக் கழற்றுகிறாய்?" என்று கேட்டாள். அதற்கு நான் சொன்னேன்; "நாச்சியார் பானைக்குள் இருக்கிற சோற்றைச் சுழியோடி எடுக்கப் போகிறன்" அதன் பின் முத்தாச்சி நாச்சியார் முன்பு போடுவதை விடச் சற்றுக் கூடப்போட்டார்"

“ஏன் சிரிக்கிறியள்?” என்று கேட்டாள் வள்ளியம்மை.

இராசகோபால் பதில் கூறாது மீண்டும் சிரித்தான்.

“ஏன் சிரிக்கிறியள் என்று சொல்லிவிட்டுச் சிரியுங்கோ” என்றாள் வள்ளியம்மை.

மீண்டும் சில கணங்கள் சிரித்த இராசகோபால் சொன்னான்; “என்னுடைய அம்மாவின் தகப்பனார் மூத்தாச்சி நாச்சியாரின் பழஞ்சோற்றுப் பானைக்குள் சுழியோடிய கதை ஞாபகம் வந்தது. அது தான்....” என்று மீண்டும் சிரித்த இராசகோபால் சொன்னான்; “நீரும் இரண்டு வருடங்களுக்கு முன்பு அப்படித்தானே பழஞ்சோறு கரைத்தனீர்”

பெருமூச்சு விட்டாள் வள்ளியம்மை. அந்த வறுமை எமது எதிரிகளுக்குக் கூட வரக்கூடாது. எத்தனை நாட்கள் நானும் பிள்ளைகளும் பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டுப் படுத்திருப்போம். ஆடு, மாடுகளைப் போல இலை குலைகளைத் தின்றிருப்போம். எத்தனை நாட்கள் முருங்கை இலையைப் பச்சைத் தண்ணீரில் அவித்து உப்புப் போட்டுத் தின்றிருப்போம்” கண்கலங்கினாள் வள்ளியம்மை.

“வறுமையைப் போலத் துன்பமானது வேறு எது என்று கேட்டால், வறுமை மட்டுமே

வறுமையைப் போலத் துன்பமானது'' என்று பெரியவர்களும் வறியவர்களும் சொல்வார்கள். நான் காணி பூமியிருந்தும் சோம்போறியாக இருந்தமையால் தான் அந்த நிலை எமக்குஏற்பட்டது'' என்றான் இராசகோபால்.

**1041. இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது.**

வறுமையைப் போலத் துன்பமானது எது என்று கேட்டால், வறுமையைப் போலத் துன்பமானது வறுமை ஒன்று தான்.

## இன்பம் அடையாதவர்கள்.

"அதை ஏன் நினைக்கிறீர்கள்?. அது எங்களின் ஏழு பிறப்புக்களில் ஒரு பிறப்பு. அதை நான் மறக்க முயல்கிறேன். முடியவில்லை. அதை அடிக்கடி ஏன் நினைவுபடுத்துகிறீர்கள்?. என்று கேட்டாள் வள்ளியம்மை.

"அந்தத் துன்பமான காலத்தை அடிக்கடி நினைவுபடுத்துவதன் மூலம் தான் மீண்டும் எமக்கு அந்த நிலை உண்டாகாது நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். அத்துடன் அந்த நிலையை நினைத்துப் பணம் சம்பாதிக்கலாம்''

"வேண்டாம். இனி நமக்கு அந்த நிலை வராது. நீங்கள் அதை நினைவுபடுத்தும் போது நான் உங்களை ஏசிய நினைவு வந்து எனது மனதைக் கொல்கிறது. நான் பிள்ளைகளைத்

தூக்கிக் கிணற்றில் போட எத்தனித்த செயல் நினைவுக்கு வந்து என்னைக் கொல்கிறது. அதனால் தயவு செய்து அவற்றை நினைவுபடுத்ததாதீர்கள்'' விம்மினாள் வள்ளியம்மை.

''சரி... சரி.... நான் இனி அவற்றை உமக்கு நினைவூட்ட மாட்டேன்'' என்றான் இராசகோபால். அப்பொழுது பண்டிதர் அங்கு வந்தார்.

அவரைக் கண்டதும் பதறியபடி வெளியே வந்தான் இராசகோபால். ''என்ன ஐயா....? என்ன வேண்டும்? நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்?'' என்று பதறினான் இராசகோபால்.

''சத்திர சிகிச்சை செய்து சில மாதங்கள் கூட ஆகவில்லை. இந்த வயல் வரம்பால் எப்படி நடந்து வந்தீர்கள்?'' என்றாள் வள்ளியம்மை.

''என்ன செய்வது? வறுமையின் கொடுமை. மூத்த மகளின் பிள்ளைக்குச் சரியான காய்ச்சல். வைத்தியரிடம் சென்று மருந்து எடுத்தனான். அவருக்கு எனது வறுமையைப் பற்றித் தெரிந்ததால் அவா் பணம் எடுக்கவில்லை. மருந்துக்கடையில் சில மாத்திரைகளை வாங்குமாறு துண்டு எழுதித் தந்தார். அத்துடன் பிள்ளைக்குச் சத்தான உணவுப் பொருட்களை வாங்கிக் கொடுக்குமாறு சொன்னார். நான் மருந்து வாங்கவே கஷ்ரப்படுகிறேன். சத்துள்ள உணவுப் பொருட்களை வாங்க எங்கே போவேன்?. இன்று காலை

அவனுக்கு வலி வந்துவிட்டது'' விம்மி விம்மி அழுதார் பண்டிதர்.

''ஐயா, அழாதீர்கள். நீங்கள் தான் எனது குரு. அத்துடன் தற்பொழுது எனது பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறீர்கள். உங்களுக்குத் தேவையானவற்றை என்னிடம் கேட்கலாம் தானே. என்னிடம் கேட்க என்ன வெட்கம்'' என்றான் இராசகோபால்.

''பெற்ற பிள்ளைகளிடம் கூட அளவுக்கு அதிகமாகக் கடன் படக்கூடாது. அதனால் பிள்ளைகளுக்கே பெற்றோர் மீது வெறுப்பு உண்டாகும். அப்படியிருக்க எனது மாணவனான உன்னிடம் நான் எப்படி அடிக்கடி கேட்பது?''

''ஐயா, வறுமையின் கோரத்தைப் பற்றி எனக்கு முழுமையாகத் தெரியும். நானும் மனைவியும் பிள்ளைகளும் வறுமை காரணமாகப் பட்ட கஷ்டங்களைச் சொல்லி முடிக்க முடியாது. பாடசாலையில் எனது மகன் அடிக்கடி தன்னுடன் கல்வி கற்கும் மாணவர்கள் கொண்டுவரும் உணவுகளைத் திருடித் தின்றுவிடுவான். பசிவந்தால் பத்தும் பறந்துவிடுமென்பார்கள். பசி வந்தால் எதையும் செய்யத் தூண்டும். வள்ளியம்மை ஒரு முறை சொல்லக் கூடாதவொன்றைச் சொல்லிவிட்டாள்...'' என்றவன் தடுமாறிபடி வள்ளியம்மையைப் பார்த்தான். வள்ளியம்மை தலை குனிந்தாள். அவள் கூறிய வார்த்தைகள் அவனது காதில் ஒலித்தன; ''என்னால், எனது பிள்ளைகள் படும் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நீ உழைக்காமல்

படுத்திருந்தாயானால் நான் விபச்சாரம் செய்து தான் எனது பிள்ளைகளைக் காப்பாற்றுவேன்'' இராசகோபால் தனது இரு கைகளாலும் தனது காதுகளைப் பொத்தினான்; ''ஐயா வறுமை என்று சொல்லப்படும் பெரும்பாவி ஒருவனைப் பற்றிப் பிடித்துவிட்டால், அவன் இப்பிறப்பிலும் இன்பமடையமாட்டான்; மறுபிறப்பில் இன்பமடையமாட்டான். இப் பிறப்பில் தான தர்மம் செய்பவன் தான் மறுபிறப்பிலும் இன்பமடைவான்'' விம்மினான் இராசகோபால்.

''இராசகோபால், எனது மகள் இன்று விபச்சாரம் செய்தாவது தனது பிள்ளைகளைக் காப்பாற்றப் போகிறேன்'' என்றாள். மேலே பேசமுடியாது விம்மி விம்மி அழுதார் பண்டிதர்.

''ஐயா, பெற்ற பிள்ளை பசியால் துடித்தால், தாயின் மனம் எவ்வளவு வேதனைப்படும். அப்படித்தான் முன்பு வள்ளியம்மையும் சொன்னவள். அதனால் கவலைப்படாதீர்கள். உங்களுக்குத் தேவையான பணம் முழுவதையும் நான் தருகிறேன்'' என்ற இராசகோபால் வள்ளியம்மையின் பக்கம் திரும்பிச் சொன்னான்; ''நான் பண்டிதர் ஐயாவுடன் சென்று ஆகவேண்டியவற்றைக் கவனிக்கிறேன். நீர் வயலில் வேலை செய்யும் தொழிலாளர்களைக் கவனியும்'' என்றவன் அவளது பதிலை எதிர்பாராது சென்றான். அவனின் பின்னால் பண்டிதர் சென்றார்.

---

**1042. இன்மை எனஒரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்.**

---

வறுமை என்று சொல்லப்படும் பாவி ஒருவனைப் பற்றிப் பிடித்தால், அவனுக்கு இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் இன்பம் இல்லாமல் போய்விடும்.

## ஒரு சேரக்கெடுப்பது

இராசகோபால் தான் முன்பு வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்த்தான். தனக்கு நடந்த அந்தக் கொடுமையான நிகழ்வுகள் தான் பண்டிதருக்கும் நடந்திருக்கும் என்பதை நினைக்க அவனுக்கு வேதனையாக இருந்தது. ஒருமுறை அவனது தந்தையார் சொன்னார்; “நீ இளைஞனாக இருக்கும் போது எந்தத் தொழிலையும் செய்யவில்லை. சோம்பல்பட்டுப் படுத்திருப்பாய். இந்த நிலையில் ஒரு பெண்ணையும் காதலித்துக் கூட்டி வந்துவிட்டாய். இரண்டு பிள்ளைகளும் பிறந்துவிட்டன. இப்போதென்றாலும் உனக்குக் குடும்பப் பொறுப்பு இருக்கா...? குடிகாரர்களுடனும் சூதாடிகளுடனும் சேர்ந்து திரிகிறாய். அவர்களுக்குக் கள்ளு வாங்கிவந்து கொடுத்துவிட்டு அவர்கள் உண்டு விட்டுத் தரும் தீன்பண்டங்களைத் தின்று வயிறு வளர்க்கிறாய். இப்படி நீ வாழ்வதிலும் பார்க்க இறந்துவிடுவது மேலானது. எமது குடிப்பிறப்பும் குலப் பெருமையும் உன்னால் கெட்டுவிட்டது”

“இராசகோபால் வறுமை எனப்படும் அழிவு நிலை ஒருவனுக்கு வந்தால், அவனது பழைமையான குடிப்பிறப்பையும் புகழையும் அது

கெடுத்துவிடும். எனது மகள் அப்படிச் சொன்னதன் மூலம் எனது குலப்பெருமையும், நான் கற்ற கல்வியின் பெருமையும் அழிந்து விட்டது. நான் இனி வாழ்வதில் அர்த்தமில்லை. அவள் பலமாகக் கத்தி அழ அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என்னவோ, ஏதோ என்று நினைத்து ஓடிவந்தனர். அவள் அவர்கள் வந்ததையும் கவனியாது குழறி அழுது, "நான் விபச்சாரம் செய்தென்றாலும் எனது பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும்" என்றாள். வந்தவர்கள் அனைவரும் திகைத்துவிட்டனர். அவர்களால் எதுவும் பேசமுடியவில்லை. அங்கிருந்து ஒவ்வொருவராகச் சென்றுவிட்டனர். அத்துடன் அயலர்கள், நண்பர்கள், இனத்தவர்கள் எல்லோரிடமும் நான் கடமைப்பட்டு விட்டேன். அவர்கள் எத்தனை நாட்களுக்கென்று கொடுப்பார்கள்" விம்மினார் பண்டிதர்.

இராசகோபாலுக்குக் கவலையாக இருந்தது. தான் முன்பு பட்ட கஷ்டங்களை எண்ணிப்பார்த்தான். அவனது தந்தையிடம் ஏராளமான தோட்ட நிலம் இருந்தது. வயல் இருந்தது. ஆனால், அவன் உழைக்காததால் வறுமையுற்றான். ஆனால், பண்டிதரிடம் குடியிருக்கும் காணியைத் தவிர வேறு எதுவும் இல்லை. அதனால் அவரால் முன்னேற முடியாது. அவருக்கு ஆண்பிள்ளைகள் இல்லை. மூத்த மகளின் கணவனும் இறந்துவிட்டான். பாவம் பண்டிதர்" என்று நினைத்தான் இராசகோபால்.

"நான் ஏழையென்றபடியால் என்னுடைய பிள்ளைகளைத் திருமணஞ் செய்ய எமது சாதிக்காரர் யாரும் முன்வருகிறார்கள்

இல்லை. சாதி குறைந்த எனது மாணவனான ஆரூரன், நான் வறுமைப்பட்டவனென்பதால் எனது பெண்ணைத் திருமணஞ் செய்ய விரும்பி ஆள் விடுகிறான். இது எனக்கு எவ்வளவு அவமானம். நான் ஏழை என்பதால் தான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டது'' விம்மினார் பண்டிதர்.

''ஐயா, நான் உங்கள் இனத்தவன். நான் உங்களுக்கு எந்த உதவியும் செய்யலாம். தயவு செய்து உங்கள் குல மானமும் புகழும் போய்விடுமென்று கருதி என்னிடம் உதவி கேட்காமல் விட்டுவிடாதீர்கள்'' என்றான் இராசகோபால்.

''கோபால், ஒருவன் ஏழையாகப் பிறக்கக் கூடாது.'' பண்டிதர் சொல்லும் போது இராச கோபால் சொன்னான். ''நீங்கள் ஏழையாகவே பிறந்தீர்கள்?. நல்ல குடும்பத்தில் பிறந்து கல்வி கற்று ஆசிரியராகக் கடமையாற்றினீர்கள். கேட்டவர்களுக்கெல்லாம் கொடுத்தீர்கள். இனப்பிரச்சினை காரணமாக இடம்பெயர்வு ஏற்பட்ட போது உங்கள் சொத்துக்க ளெல்லாம் அழித்து விட்டன. அது இயற்கையின் அழிவு. நீங்கள் குடித்து அல்லது சூதாடி உங்கள் சொத்தை அழித்திருந்தால் தான் அது அவமானமான வறுமை. அதனால் கவலை கொள்ளாதீர்கள். மகா கணபதி உங்களுக்குக் கட்டாயம் உதவுவார்''

''மகா கணபதியால் என்ன செய்ய முடியும்? என்னுடைய வறுமையைப் போக்கச் சொல்லி நான் எத்தனை ஆண்டுகளாக அழுகிறேன். மூத்தவளின்

கணவன் இறந்து விட்டான்'' பண்டிதர் சொல்லிக் கொண்டிருக்கும் போது இராச கோபால் குறுக்கிட்டான்; ''செல்லையாக்கு மூன்று பெண்பிள்ளைகள். மூத்தவளுக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. இளையவளை வெளிநாட்டுக்காரன் ஒருவன் விரும்பிச் செய்து கொண்டு வெளிநாட்டுக்குப் போய் விட்டான். மூத்தவளை ஓர் ஆசிரியர் விரும்பித் திருமணம் செய்து விட்டார். நடுவிலாள் இப்ப வெளிநாட்டுக்குப் போகப் போகிறாளாம். அப்படி உங்களுக்கும் ஒரு காலம் வரும்'' என்றான் இராசகோபால்.

''கேட்க நன்றாகத் தான் இருக்கிறது. மகா கணபதி கண் திறப்பார் என்ற நம்பிக்கையில் தான் நான் இப்போதும் இருக்கிறேன்'' என்றார் பண்டிதர்.

நவராசா பண்டிதரின் முகத்தைப் பார்த்தான். அது சற்றுப் பிரகாசமாக இருந்தது.

**1043. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக**
**நல்குரவு என்னும் நசை.**

வறுமை என்று சொல்லப்படுகின்ற துன்ப நிலை ஒருவனைப் பற்றினால், அவனது பழைமையான குடிப்பண்பையும் புகழையும் அது கெடுத்து விடும்.

## இழிவான சொல்லின் பிறப்பு

''ஐயா, நீங்கள் கற்றவர். பெரிய அறிவாளி. உங்களுக்கு நான் எதையும் சொல்ல வேண்டியதில்லை. நான் எனது வாழ்க்கையை வைத்துத்தான் மற்றவர்களுடைய வாழ்க்கையைக்

கணிப்பது. நான் வறுமையுற்றிருந்த காலத்தில், நான் காதலித்துத் திருமணஞ் செய்த எனது அன்பு மனைவி வறுமை காரணமாக என்னை வெறுத்து ஒதுக்கி விட்டாள். அவளுக்கு நான் பாரமாக இருக்கிறேன் என்று நினைத்துத் தினமும் என்னை ஏசுவாள். அந்த ஏச்சில் தகா வார்த்தைகள் தான் இருக்கும். என்னை 'முட்டாள்' என்றாள்; 'சோம்பேறி' என்றாள்; 'ஒன்றுக்கும் உதவாதவன்' என்றாள்; 'கைகாலாகாதவன்' என்றாள். இது மட்டுமா சொன்னாள்? இன்னும் ஏதேதோ சொன்னாள். பணம் தான் ஐயா வாழ்க்கை. ஒருவன் வறுமைப்பட்டு விட்டால், அவனை ஈன்ற தாய் கூட வெறுத்தொதுக்கி விடுவாள் என்று நீங்கள் கற்கவிலையா…? உலகத்தில் உள்ள எல்லாம் பணத்திற்கு பின்புதான் என்று கவிஞர் ஒருவர் பாடியுள்ளார்; "தேசம் ஞானம் கல்வி ஈசன் பூசையெல்லாம் காசுக்குப் பின்னாலே" என்று ஒரு கவிஞனும் "பணம் பந்தியிலே குணம் குப்பையிலே" என்று இன்னொரு கவிஞனும் பாடியதை நீங்கள் கேட்கவில்லையா…? வரலாற்று ரீதியாக எடுத்துப் பார்த்தால் கற்றவர்களில் அதிகமானோர் வறியவர்களாகத்தான் இருக்கிறார்கள். எம்மைப் போன்ற ஏமாற்று வேலைகள் செய்யும் வியாபாரிகள் தான் நல்ல நிலையில் இருக்கிறார்கள்" என்றான் இராசகோபால்.

"உண்மைதான். ஆனால் உண்மை நிலையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லையே" அழுதார் பண்டிதர்.

“உண்மைதான். உங்களது மகள் இன்று கூறிய வார்த்தைகளை எந்தத் தந்தையாலும் பொறுத்துக் கொள்ள முடியாது தான். வறுமை என்பது, நல்ல குடியில் பிறந்தவர்களிடத்திலும் இழிவு தரும் சொற்கள் பிறப்பதற்குக் காரணமாகி விடும். அதனால் அப்படியானவர்கள் தமது வறுமையை எண்ணித் துன்பத்தால் கலங்கும் போது தாம் பேசுவது என்னவென்பதை உணரத் தவறிவிடுகிறார்கள். இது வறுமையின் குரலே தவிர மனச்சாட்சியின் குரலல்ல. எனது மனைவி முன்பு என்னைக் காண விரும்புவதில்லை. இப்பொழுது நான் பணக்காரனானதும் என்னை விடடுப் பிரிய விரும்புகிறாளில்லை. முன்பு ஆசையாக அருகில் இருந்து ஏதாவது கதைத்தால் எரிந்து விழுவாள். இப்போது தன்னுடன் நான் கதைப்பதில்லை என்று அழுகிறாள். இது அவர்களது உள் உணர்வல்ல. அதை நினைத்துக் கவலைப்படாதீர்கள்” என்றான் இராசகோபால்.

“எப்படிக் கவலைப்படாமல் இருப்பது? அவள்தான் அப்படிக் கூறுகிறாள் என்றால் பரவாயில்லை. அயலவர்கள் என்னை வாழத் தெரியாதவன்’ என்கிறார்கள். நான் பாடசாலையில் கற்பிக்கும் போது பாடசாலைக்காக உயிரைக் கொடுத்தேன். மாணவர்களின் நலனுக்காக உழைத்தேன்; நான் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பித்திருந்தால் இலட்சாதிபதியாகியிருப்பேன். ஆனால் நான் அதை விரும்பவில்லை. கற்ற கல்வியை விற்பது பாவம் என்று நினைத்தேன். அதை மக்கள் தவறாகப் புரிந்து கொண்டு என்னைக் கேலி செய்கின்றனர். அதை நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது. மக்களின்

மனநிலையும் வியாபார நோக்கிலேயே அமைத்துள்ளதைக் கண்டு எனது மனம் நோகிறது''

''இப்போது சமூகம் முற்றாக மாறிவிட்டது. ஒற்றுமையில் வேற்றுமையைக் கண்டு பிடிப்போர் தான் அனேகர். இதனால் தான் கற்றவர்களை அவர்கள் மதிக்கிறார்கள் இல்லை. மனிதன் நல்லவர்களை மதிக்கும் போதுதான் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் உண்டாகும். மனிதர்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக்கொள்வதோடு, மற்றவர்களை மதிக்கவும் கற்றுக் கொள்ளல் வேண்டும். மற்றவர்களின் பிரச்சினைகளில் தேவையில்லாமல் தலையிட்டு அவர்களின் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் சிதறடித்து, அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் இழிந்த நிலை மாற வேண்டும். அப்படி மாறினால் தான் வறியவர்களின் மனதில் மகிழ்ச்சி பிறக்கும்'' என்றான் இராசகோபால்.

''இப்பொழுது நீ நன்றாகக் கதைக்கப் பழகிவிட்டாய்'' என்று சிரித்தார் பண்டிதர்.

''எல்லாம் வறுமை தந்த பாடம். நான் வீட்டிலும் வெளியிலும் பல பாடங்களை அனுபவமூலமாகப் பெற்றுவிட்டேன். அவற்றால் எனது மனம் பண்பட்டு விட்டது. உலகில் யாரையும் நம்ப முடியாது. ஒவ்வொருவரும் தத்தம் காரியங்களுக்காகத்தான் மற்றவர்களை நாடி வருகிறார்கள். தமது காரியங்கள் முடிவடைந்ததும் அவர்களுக்கு எம்மைப் பற்றிய ஞாபகம் இராது. உங்களைப் போன்ற சிலர்தான் கொள்கைக்காக

வாழ்கிறார்கள். அவர்களுக்குத் துன்பம் ஒருபோதும் நீங்காது'' என்றான் இராசகோபால்.

---

**1044. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்.**

---

வறுமை வந்தால் நல்ல குடியில் பிறந்தவனும் இழிவான சொற்களைப் பேசும் நிலைக்கு ஆளாவான்.

## விளையும் துன்பம்

துளசியின் மகன் கோவலனை இராசகோபால் தனது மோட்டார் வண்டியில் ஏற்றினான். துளசியியும் பண்டிதரும் அவனுடன் மோட்டார் வண்டியில் சென்றனர்.

கோவலனைச் சிகிச்சை அளிக்கும் அறைக்குள் விட்டு விட்டுத் துளசி வெளியே நின்றாள். இராசகோபல் அவளுக்கு அருகே நின்றான். பண்டிதர் தனக்குக் களைப்பாக இருக்கிறதென்று கூறி இராசகோபாலினது மோட்டார் வண்டியின் பின் இருக்கையில் படுத்து விட்டார்.

இராசகோபால் துளசியைப் பார்த்தான். அவள் சிறு பிள்ளையாக இருக்கும் போதே அவளை அவனுக்குத் தெரியும். அவள் நல்ல அழகி. அவளின் அழகில் மயங்கித தான் அவனது மாமன் மகன் அவளைத் திருமணஞ் செய்தவன். திருமணஞ் செய்த புதிதில் அவர்கள் ஓகோவென்று

வாழ்ந்தனர். அவன் இறந்த பின்பு அவள் உருக்குலைந்து போனாள். முக எலும்புகள் யாவும் வெளியே தள்ளிக் கொண்டிருந்தன. கண்கள் தாண்டு குழி விழுந்திருந்தன. அவளது நீண்ட தலை முடி உதிர்ந்து விட்டது. அவளைப் பார்க்க இராச கோபாலனுக்குத் துக்கமாக இருந்தது. முன்பு வள்ளியம்மை இருந்ததைப் போல இருந்தாள் அவள்.

“இராசகோபாலண்ணை எனக்கு தலையைச் சுற்றுகிறது” என்று கூறியவாறு நிலத்தில் அமர்ந்தாள் துளசி.

“காலையில் சாப்பிட்டாயா….?”

“இல்லை” என்று தலையசைத்தாள்.

“நேற்று இரவு” அதற்கும் அதே தலையசைப்பு

“கடவுளே” நெஞ்சில் கையை வைத்தவாறு வைத்தியசாலைக்கு முன் இருந்த சாப்பாட்டுக் கடைக்குச் சென்று உணவுப் பண்டங்களை வாங்கி வந்தான் இராசகோபால். துளசி நிலத்தில் சுருண்டு படுத்திருந்தாள்.

“எழும்பிச் சாப்பிடு” என்றான் இராசகோபால்.

துளசி எழும்பவில்லை. இராசகோபல் பரிதாபத்துடன் பார்த்தான்; “துளசி முன்பு நானும் பிள்ளைகளும் உங்களைப் போலத்தான் இருந்தோம். அதனால் வெட்கத்தைப் பாராது

எழுந்து சாப்பிடு... எழும்பு'' என்றான் இராசகோபால்.

துளசி எழுந்ததும் உணவுப் பொட்டலத்தை அவளது கையில் கொடுத்து விட்டுக் கேட்டான்; ``பண்டிதர் ஐயா காலையில் சாப்பிட்டவரே?''

``இல்லை'' என்றாள் துளசி.

இராசகோபால் அவருக்கென்று வாங்கிவந்த உணவுப் பொதியுடன் மோட்டார் வண்டியருகே சென்றான். பண்டிதர் மோட்டார் வண்டிக்குள் சுருண்டு படுத்திருந்தார். அவரை மெல்லத் தட்டினான் இராசகோபால்.

மெல்ல எழுந்து உட்கார்ந்தார் பண்டிதர். இராசகோபால் கொண்டு வந்த தண்ணீர்ப் போத்தலைக் கொடுத்து விட்டு; ``கைகழுவி விட்டுச் சாப்பிடுங்கோ'' என்று கூறி விட்டுச் சாப்பாட்டுப் பொதியை மோட்டார் வண்டியின் இருக்கையில் வைத்தான். பண்டிதர் எதுவும் பேசாமல் கையை கழுவி விட்டுச் சாப்பிட்டார். அவருக்குக் கடுமையாகப் பசித்தது.

இராசகோபால் துளசியின் அருகே வந்தபோது அவள் சாப்பிட்டு விட்டுக் கையைக் கழுவிக் கொண்டிருந்தாள். இராசகோபாலை அவள் நன்றியுடன் பார்த்தாள்.

``நானும் முன்பு உழைக்காததால் பெருங் கஷ்டப்பட்டனான். ஆனால் உங்களது கஷ்டம் வித்தியாசமானது'' என்றவாறு தனது சட்டைப்

பைக்குள் கையை வைத்து ஆயிரம் ரூபாத்தாள்கள் இரண்டை எழுத்து நீட்டினான். துளசி எதுவும் பேசாது அதைப் பெற்றுக் கொண்டாள். அவளது கண்களால் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அப்போது வைத்தியசாலையில் பணிபுரியும் சேவகன் ஒருவன் வந்து அவளை உள்ளே அழைத்துச் சென்றான். அவளின் பின்னால் இராசகோபாலும் சென்றான்.

“வாம்மா இப்படி இரு” என்றார் வைத்தியர்.

துளசி வைத்தியர் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தாள்; “உங்களுடைய மகனுக்கு நெருப்புக் காய்ச்சல் வந்துள்ளது. அசுத்தமான தண்ணீரைக் குடித்துள்ளான். அத்துடன் அவனது உடலில் நல்லிரத்தம் இல்லை. உடம்பு மிகவும் பலவீனமாக இருக்கிறது. நல்ல உணவு வகைகள் கொடுக்க வேண்டும். நீங்கள் அவனை நன்றாகக் கவனிக்காவிட்டால் ஆபத்து” என்றார் வைத்தியர்

துளசியின் கண்கள் கலங்கின. அவளால் பேச முடியவில்லை; “ஒன்றுக்கும் யோசிக்காதை துளசி. நான் இருக்கிறேன்” என்றான் இராசகோபால்.

அவர்கள் வீட்டுக்கு வந்த போது பண்டிதரின் இளைய மகள் நிவேதிகா கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு ஆரூரனுடன் சென்று விட்டாள். பண்டிதர் இடிந்து போனார். அவரால் பேச முடியவில்லை. அவருக்குத் தலை சுற்றியது. மெல்ல நிலத்தில் இருந்தார். அவருக்கு மயக்கம் வந்தது.

சுயநினைவிழந்த பண்டிதரை இராசகோபால் மோட்டார் வண்டியில் ஏற்றினான். துளசி அவருடன் கூடச் செல்வதற்காக மோட்டார் வண்டியில் ஏறினான்.

“துளசி, நீ உனது மகனது உடல் நிலையைக் கவனி. நான் தணிகாசலமண் ணையை ஏற்றிச் செல்கிறேன்” என்றான் இராசகோபால்.

துளசி விம்மினாள்; “துளசி அழாதை. வறுமை என்று சொல்லப்படும் நிலை ஒருவனுக்கு வந்துவிட்டால், பலவகையான வேறுபட்ட துன்பங்கள் பல அவனை வந்து சேர்ந்து வாட்டும். அதனால் நீ கவலை கொள்ளாதே” என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் இராசகோபால்.

**1045. நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.**

வறுமை என்று சொல்லப்படும் துன்ப நிலை வந்தால், பல்வேறு வகைப்பட்ட துன்பங்கள் அவனை வந்தடையும்.

## பயனற்ற கல்வி

வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சை பெற்ற பண்டிதரைப் பார்த்து சுகம் விசாரிக்கத் தணிகாசலமும் விக்னேஸ்வரமூர்த்தியும் வேலாயுதபிள்ளையும் வைத்திய சாலைக்கு வந்தனர்.

அவர்களைக் கண்டதும் பண்டிதர் தான் படுத்திருந்த கட்டிலால் எழுந்து பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

“நீங்கள் நோயாளி. படுத்திருங்கோ” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி. எனினும் அதைக் கேளாது பண்டிதர் நாற்காலியிலேயே அமர்ந்திருந்தார்.

“நாளைக்கு இலக்கியப் பேரவையில்; “இராமாயணத்தில் பகைவர்களிடமும் பண்புடன் நடந்து கொள்ளும் தன்மை மேலோங்கிக் காணப்படுகிறது” என்பதைப் பற்றி வித்துவ சிரோன்மணி பேசப்போகிறாராம். அவர் பேசும் போது சபையோரைக் கவரக் கூடியதாகப் பேசுவாரே தவிர நல்ல கருத்துக்கள் இராது. இராவணன் சீதையை அடைய வழி சொல்லுமாறு மந்திரி பிரதானிகளைக் கேட்க அவர்கள் இராவணனை இராமன் வேஷமிட்டுச் செல்லுமாறு கூறுகின்றனர். அப்போது இராவணன் இராமனைப் புகழ்கிறான். அந்தப் பாடலலைப் பார்த்து நன்றாக படித்து வந்து வித்துவசிரோன்மணியை பேசச் சொல்லுங்கள். அத்துடன் இராவணன் ஆயுதங்களை இழந்த பின்பு இராமன் அவனை; “இன்று போய் நாளை ஆயுதங்களுடன் வா” என்று கூறிய போது கம்பர் இராவணனது மனநிலையைப் பற்றிக் கூறிய பகுதியைப் பார்க்கச் சொல்லுங்கள். இராவணன் இறந்த பின் விபீஷனனை, இராமன் இராவணனது இறுதிக் கடன்களைச் செய்யுமாறு கூற விபூஷனன் அதை மறுக்கிறான். அதனால் கோபமடைந்த இராமன் இராவனனது இறுதிக் கிரியைகளைத் தான் செய்யப் போவதாகக் கூறுகிறான். அந்தப்

பகுதியையும் பார்க்கச் சொல்லுங்கள். அவற்றுடன் வாலி வதை செய்யப்படும் படலத்தையும் பார்க்கச் சொல்லுங்கள்'' என்றார் பண்டிதர்.

''இப்ப உங்களுக்கு வருத்தம், பேசாமல் படுத்து ஓய்வெடுங்கள்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''எனக்கு எல்லா வருத்தமும் மாறிவிட்டது. இன்று வீட்டுக்குச் செல்லுமாறு வைத்தியர் கூறியுள்ளார்'' என்றார் பண்டிதர்.

''வருத்தம் மாறினாலும் ஓய்வெடுங்கள். நீங்கள் இப்போதுள்ள நிலையில் உங்களுக்கு இலக்கியப் பிரச்சினை தேவையா...?'' என்றார் தணிகாசலம்.

பண்டிதர் எதையோ சொல்லவாயெடுத்தார்; ''பண்டிதர், பேசாமல் படுங்கள். நாங்கள் உங்களது நோயைப் பற்றித் தெரிந்து கொள்ள வந்தோமே தவிர உங்களோடு, இலக்கியம் பேச வரவில்லை'' என்று சற்றுக் கோபமாகச் சொன்னர் வேலாயுதபிள்ளை.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசாமல் இருந்தார்.

''நன்றாக ஓய்வெடுங்கள். வருத்தம் மாறிய பின்பு மற்றவற்றைக் கதைக்கலாம்'' என்றார் தணிகாசலம்.

வந்த நேரம் முதல்பேசாமல் இருந்த விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; ‘‘மனதை அலையவிடாது ஓய்வெடுங்கள்’’ என்றார்.

பண்டிதரின் மனம் வாடிச் சோர்ந்துவிட்டது. ‘‘வறுமைக்கு ஆளானவன் நல்ல நூல்களின் உயர்ந்த பொருள்களை நன்றாக எடுத்துச் சொன்னாலும், அவை கேட்பாரில்லாமல் பயனற்றுப் போகும் என்பார்கள்’’ என்று நினைத்துப் பெருமூச்சு விட்டார் பண்டிதர்.

‘‘நாங்கள் வரப்போறம் நீங்கள் இலக்கியத்தைப் பற்றி யோசிக்காமல் ஓய்வெடுங்கள். நேரந்தவறாது மருந்தைச் சாப்பிடுங்கள்’’ என்றார் வேலாயுதபிள்ளை.

பண்டிதர் ‘‘சரி’’ என்று தலையசைத்தார். தான் சொன்ன கருத்தை அவர்கள் கேளாததால் அவருக்கு மனவருத்தமாக இருந்தது.

வைத்தியசாலைக்கு வெளியே வந்த வேலாயுதபிள்ளை சொன்னார்; ‘‘எந்த நூலைப் படித்தென்ன; எந்த அறிவைப் பெற்றென்ன; வாழத் தெரியாத மனிதன். கற்ற கல்வியை மேடை ஏறிப் பேசத் தெரியுமே தவிர அதன்படி நடந்து பயன் பெறத் தெரியாது. பிறகு எப்படி இவரைக் கல்விமான் என்று சொல்வது. அன்றைக்குப் பெற்ற மகள் விபச்சாரம் செய்யப் போகிறேன் என்கிறாள். அதைக் கேட்ட பின்பும் இலக்கியம் பேசுகிறார். வறுமைப்பட்டவன் உழைப்பதை விட்டு விட்டு மேடையேறி பேசுவதால் எந்தப் பயனும் வராது. விசர் மனிசன்’’

“தேவையில்லாத கதைகளைக் கதைக்காதை. உன்னுடைய கதையைக் கேட்டுக் கொண்டு போய் யாராவது பண்டிதருக்குச் சொன்னால் அவர் வருத்தப்படுவார்” என்றார் தணிகாசலம்.

“யார் ஏன் சொல்ல வேண்டும்? நான் நேரே சென்று சொல்லப் போகிறேன். படித்த படிப்புக்கேற்ற மாதிரி நடக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் படித்த படிப்பால் என்ன பயன்?” கோபப்பட்டார் வேலாயுதபிள்ளை.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசவில்லை. ஆனால் அவர் சொல்வது நியாயமாக அவருக்குத் தெரிந்தது.

---

**1046.நற்பொருள் நன்குஉணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்**
**சொற்பொருள் சோர்வு படும்.**

---

வறியவர் நல்ல நூல்களில் பொருளை நன்றாகக் கற்றுணர்ந்து எடுத்துச் சொன்னாலும் அதைக் கேட்பதற்கு யாரும் இரார். அதனால் அவர் சொன்ன அந் நூற் பொருள் பயனற்றுப் போகும்.

## அயலவனைப் போல.....

வீட்டுக்கு வந்த பண்டிதர் திடீரென மயங்கி விழுந்து விட்டார். துளசி இராசகோபாலின் வீட்டுக்குச் சென்று அவனை அழைத்து வந்த போது அவர் இறந்து கிடந்தார். துளசி பெரிதாக அழுது குழறவில்லை. மௌனமாக அழுது

கொண்டிருந்தாள். அவளது கண்களில் கண்ணீர் வற்றிவிட்டது.

அயலவர்கள் நண்பர்கள் இனத்தவர்கள் கூடி விட்டனர். ஆரூரனும் பண்டிதரின் இளைய மகள் நிவேதிகாவும் பண்டிதரின் வீட்டுக்கு வந்தனர். நிவேதிகா ஆரூரனுடன் சென்றதால் அவளைத் தனது மகளில்லை என்றும் தான் இறந்தால் கூட அவள் தனது வீட்டுக்கு வரக்கூடாதென்றுப் பண்டிதர் கூறியிருந்தார்.

ஆரூரனும் நிவேதிகாவும் வீட்டினுள்ச் செல்லாது வெளியே நின்றனர். வேலாயுதபிள்ளை அவர்களின் அருகே வந்தார். "ஏன் வெளியே நிற்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"அப்பா என்னைத் தன்னுடைய பிள்ளை இல்லையென்று கூறிவிட்டார். அத்துடன் தனது இறுதிக் கிரிகைகளில் கலந்து கொள்ளக் கூடாதென்றும் கூறிவிட்டார். அதனால் நாம் எப்படி உள்ளே வருவது? கடைசி அக்காவாவது "உள்ளே வா" என்று அழைக்கலாம் தானே" என்றாள் நிவேதிகா.

துளசி அதைக் கேட்டுக் கொண்டிருந்தாளே தவிர எதுவும் பேசவில்லை. அதனால் நிவேதிகா சொன்னாள்; "நான் நன்கு ஆராய்ந்த பின்புதான் இந்த முடிவை எடுத்தேன்.. நான் பண்டிதருக்கு மகளாகப் பிறந்து எதை அனுபவித்தனான்? ஒரு நல்ல சட்டை போட்டிருப்பனா...? நல்ல உணவு உண்டிருப்பனா...? ஒரு தங்க நகை அணிந்திருப்பனா...? அதைத் தான் விடுங்கள்.

இன்று இவர் இறந்து விட்டார். இனியார் எம்மைக் கவனிப்பது? எனது கணவர் வசதியானவர். அக்காவின் மகன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது நான் எத்தனை தடவைகள் அக்காவிடம் சென்றிருப்பேன். அவா நான் கொடுத்த பணத்தை வாங்க மறுத்து விட்டா. அப்பா; "நான் செய்தாலும் சாவேனே தவிர உன்னிடம் கைநீட்டிப் பணம் வாங்கமாட்டேன்" என்று கூறிவிட்டார். பிறகு எப்படி நான் உள்ளே வருவது"

வேலாயுதபிள்ளை நிவேதிகாவையும் துளசியையும் மாறி மாறிப் பார்த்தார். பின்பு துளசியின் அருகே சென்றார்; "நிவேதிகா சொன்னதை நீ கேட்டுக் கொண்டிருந்தனி. அவளை உள்ளே வரச்சொல்லு"

துளசி வேலாயுதபிள்ளையை நிமிர்ந்து பார்த்தாள்; பின் "வேலாயுதண்ணை அவள் விரும்பினால் வரட்டும்." என்றாள்

"இது பண்டிதர் உனக்குச் சீதனமாகத் தந்த வீடு. நீ கூப்பிடலாம் தானே"

"அப்பா இவள் தன்னைப் பார்க்க வரக் கூடாதென்றவர். அவள் சொன்னதைப் போல அப்பா வாழத் தெரியமால் வாழ்ந்ததால் தான் இப்படியான நிலைமை ஏற்பட்டது. எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. அவள் விரும்பினால் வந்து பார்க்கட்டும். இல்லாவிட்டால் போகட்டும்" என்றாள் துளசி.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த இராசகோபாலுக்குக் கவலையாக இருந்தது; “ஒருவன் வறுமையடைந்ததால் பெற்ற பிள்ளைகள் கூட மதிக்காது” என்று நினைத்தான்.

முன்பு அவன் வறுமைப்பட்டிருந்த போது ஒருநாள் தாயிடம் சென்று “பசிக்கிறது” என்று கேட்டான்.

“இராசகோபால் ஒருவன், நோய், துன்பம், கால மாற்றம், ஊழ் என்பவற்றால் வறுமைப்பட்டால் அவனுக்குக் கட்டாயம் உதவி செய்தல் வேண்டும்; பரிதாபப்படல் வேண்டும்; அக்கறை கொள்ளல் வேண்டும். ஆனால் உனக்கு வறுமை உனது சோம்பேறித்தனத்தால் வந்தது. நீ உழைத்து எனக்கும் அப்பாவுக்கும் உணவு தரவேண்டிய நேரத்தில் நீ வந்து உணவு கேட்டால் எப்படித்தருவது? உனது தந்தை வயோதிப காலத்திலும் ஏதோ உழைக்கிறார். அவரைக் காப்பாற்ற வேண்டியவன் நீ. ஆனால் அவர் உன்னைக் காப்பாற்ற வேண்டியிருக்கு. “அறத்தோடு பொருந்தாத வறுமை ஒருவனைச் சேர்ந்தால் பெற்றதாயும் அவனை அயலானைப் போலப் புறக்கணிப்பாள்.” என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் நான் உனக்கு உணவு தரமாட்டேன் போ” என்று சொன்ன வார்த்தைகள் அவனது காதில் ஒலித்தன.

“அப்படி நீ சொல்லக்கூடாது. போய்க் கட்டிப் பிடித்து அழு” என்றார் வேலாயுதபிள்ளை. துளசி எதுவும் பேசாமல் இருந்த இடத்திலேயே இருந்தாள்.

“அவள்தான் பேசாமலிருக்கிறாள். நீ போய்க் கொப்பாவைப்பார்” என்றார் வேலாயுதபிள்ளை.

நிவேதிகா உள்ளே செல்லவில்லை. ஒரு பணக்கட்டை எடுத்து வேலாயுத பிள்ளையிடம் கொடுத்தாள். “என்னிடம் தரவேண்டாம். கொண்டு போய் கொக்காவிடம் கொடு” என்றார் வேலாயுதபிள்ளை.

“முன்பு நான் கொடுத்த போது அவா வாங்கவில்லை. இப்போது நான் எப்படிக் கொடுப்பது?” என்று கேட்டாள் நிவேதிகா.

“கொடுக்க விருப்பமில்லாவிட்டால் திருப்பக் கொண்டு போ” என்றார் வேலாயுதபிள்ளை.

---

**1047. அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.**

---

அறத்தோடு பொருந்தாத வறுமை ஒருவனைச் சோந்தால், பெற்ற தாயும் அவனை அன்னியனாகக் கருதிப் புறக்கணிப்பாள்.

## தினந்தோறும்

மீண்டும் சில கணங்கள் வேலாயுதபிள்ளையைப் பார்த்தாள் நிவேதிகா. அவளுக்கு ஏற்கனவே பண்டிதரைப் பிடிக்காது; “ஒவ்வொருவரும் எப்படி எப்படித் தன் குடும்ப முன்னேற்றத்திற்காக

உழைக்கிறார்கள். இவர்தான் பெரிய படிப்புப் படித்தவர் என்று நினைத்துக் கற்ற கல்விக் கொள்கையின்படி நடப்பதாக எண்ணி நடந்ததால் குடும்பந்தான் கஷ்டப்பட்டது. மூன்று பெண்பிள்ளைகளில் மூத்தவள் தனது மாமன் மகளை விரும்பித் திருமணம் செய்தாள். அம்மாவின் தாய்க்குப் பெற்றோர் கொடுத்த காணியையும் வீட்டையும் அம்மாவின் தாய் தனது மகளான அம்மாவுக்குக் கொடுக்க, அதை அம்மா அக்காவுக்குக் கொடுத்தார். அந்த வீட்டையும் வளவையும் தவிர அப்பா அக்காவுக்கு எவையும் கொடுக்கவில்லை. முப்பது முப்பத்தைந்து வருடங்களாக இவர் என்ன செய்தவர்? மற்றைய ஆசிரியர்களைப் போலத் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பித்திருந்தால் இன்று முன்னேறி இருக்கலாம். தானும் தனியார் நிறுவனங்களில் கற்பிக்காது தனியார் நிறுவனங்களில், கற்பிக்கும் ஆசிரியர்களைத்தான் பேசும் மேடைகளில் பகிரங்கமாகக் கண்டித்துக் குறைகள் கேட்டது தான் மிச்சம். அதனால் கோபங் கொண்ட பலர் எமது வீட்டில் நடைபெறும் நன்மை தீமைகளுக்குக் கூட வருவதில்லை. அப்பாவின் திமிர் முழுவதும் அக்காவிடம் இருக்கு. சாப்பிட வழியில்லாத அவர்களுக்கு இவ்வளவு திமிர் இருந்தால் எனக்கு எவ்வளவு இருக்கும்?" என்று நினைத்தவாறு திரும்பித் தனது வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் நிவேதிகா. அவள் வீட்டுக்குச் செல்கிறாள் என்று உணர்ந்து கொண்ட ஆரூரன் எழுந்து அவளின் பின்னே சென்றான்.

வேலாயுதபிள்ளை துளசியின் அருகே வந்தார். அவரால் பேசமுடியவில்லை; “நீ அவளை உள்ளே வா என்றிருக்கலாம்” என்றார்.

துளசி அவரை நிமிர்ந்து பார்த்தாள்; “அண்ணை, அப்பாவின் விருப்பத்தைக் கடைசி வரையும் காப்பாற்ற வேண்டும். ஆரூரன் என்னைத் திருமணம் செய்து தரும்படி கேட்டவன். அதற்கு அவர் மறுத்து விட்டார். அவன் குறைந்த சாதிக்காரன் என்பதால் தான் தனக்கு அவனை விருப்பமில்லை என்று எனக்கும் அவளுக்கும் சொன்னவர். அப்படியிருக்க இவள் எப்படி ஆரூரனுடன் செல்லலாம்? அவர் நோயுற்ற போது அவளை எதிர்பார்த்தவர். அப்போது வந்திருந்தாவாவது பரவாயில்லை. இன்று வந்தவள் உள்ளே வந்து உடலைத் தரிசித்திருக்கலாம். நான் அவளை வரவேண்டாமென்று கூறினால் தான் அவள் வரக்கூடாது. இது என்னுடைய வீடு. இங்கு பலகாலம் இருந்துவிட்டு எனக்குச் சொல்லாமற் சென்றவளை நான் எப்படி வரவேற்பது. இவ்வளவு காலமும் என்னைக் கொலை செய்வது போலத் துன்புறுத்திய வறுமை இன்றும் வரும் நாளையும் வரும். தொடர்ந்தும் வரும். அதற்காக அவளை நான் வரவேற்க முடியாது” என்றாள் துளசி.

“ஒருவராவது விட்டுக் கொடுத்தால் தான் காரியம் நடைபெறும். இருவரும் விட்டுக் கொடுக்காது தான் பிடித்ததே சரியென்றால் காரியம் நல்ல முறையில் நடைபெறாது. பண்டிதருக்கு உள்ள திமிரும் செருக்கும் பிள்ளைகளிடமும் இருக்கு. நாம் எதுவும் செய்ய முடியாது” என்று நினைத்தார் வேலாயுதபிள்ளை.

பண்டிதரின் இறுதிக் கிரிகைகள் நடைபெற்றன. இராசகோபாலும் நவராசாவும் வேலாயுதபிள்ளையும் தணிகாசலமும் முன்நின்று செய்தனர். விக்னேஸ்வரமூர்த்தி அவர்களை நெறிப்படுத்தினார்.

பிரேதத்தை எடுத்துச் சென்று மயானத்தில் தகனஞ் செய்து விட்டுப் பத்துப் பதினைந்து பேர் பண்டிதரின் வீட்டிற்கு வந்தனர். பண்டிதரின் வீட்டில் துர்க்காவும் வள்ளியம்மையும் இருந்து, மயானத்தால் வந்தவர்களைக் கட்டிப் பிடித்து அழுது வரவேற்றனர்.

அன்று இரவு துளசிக்கு வள்ளியம்மை துணையாக இருந்தாள். கோவலனுக்கு அன்றிரவு மீண்டும் காய்ச்சல் வந்தது. அவன் படுக்கையால் எழுந்திருந்து அழுதான். அவனது உடல் நெருப்பாகக் கொதித்தது; "நேற்றுக் கொலை செய்து போலத் துன்புறுத்திய வறுமை இன்றும் வந்து வாட்டுமோ...?" என்று வறுமை அடைந்தவன் நாள் தோறும் எண்ணித் துன்பப்படுவான்" என்று அவளது தந்தை தினமும் கூறும் வார்த்தைகள் அவளின் காதுகளில் ஒலித்தன; "கோவலனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல் வேண்டும். அதற்காகக் தினமும் இராசகோபாலைக் கேட்க முடியுமா...?" என்று நினைத்தாள் துளசி. அவளது மனதுள் பல்வேறு நினைவுகள் புகுந்து கொண்டன.

---

**1048. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு.**

---

‘நேற்று கொலை செய்தது போலத் துன்புறுத்திய வறுமை இன்னும் என்னிடம் வருமோ;’ என்று வறியவன் நாள் தோறும் கலங்கித் துன்புறுவான்.

## தூங்க முடியாதவர்கள்

கோவலனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு விம்மினாள் துளசி. அதைக் கண்டு மனம் வருந்திய வள்ளியம்மை சொன்னாள்; “துளசி வறுமையின் கோரப்பறகள் என்னைக் குத்திக் குதறி வேதனைப்படுத்தியது உனக்குத் தெரியும். அத்துடன் வறுமையைப் பற்றி முழுமையாக எனக்குத் தெரியும். ஆதலால் நீ உனது வறுமையை எண்ணிக் கவலைப்படாதே. நீ எனது இரத்த உறவினள். அதனால் உனக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் நான் செய்வேன். அதற்கு எனக்கு உரிமை இருக்கு. இப்போது நீ படுத்து உறங்கு. உன்னால் நிம்மதியாகப் படுத்துறங்க முடியாது என்று எனக்குத் தெரியும். ஒருவன் நெருப்பின் மீது கூடப் படுத்து உறங்கலாம். ஆனால் வறுமை வந்துவிட்டால் அவனால் ஒருபோதும் தூங்க முடியாது. நான் எத்தனை வருடங்கள் இரவில் தூக்கம் வராமல் கிழிந்த பாயிலும் வெறுந்தரையிலும் படுத்து உருண்டிருப்பேன். தெரியுமா…? அந்த மாதிரித்தான் உனக்கும் உறக்கம் வரமாட்டாது என்று எனக்குத் தெரியும். உலகில் கொடியது வறுமைதான்” என்றாள் வள்ளியம்மை.

துளசி வள்ளியம்மையை நிமிர்ந்து பார்த்தாள். பிரகாசமாக எரியும் மூடப்பட்ட

கண்ணாடி விளக்கின் வெளிச்சம் வள்ளியம்மையின் முகத்தில் பரவியிருந்ததால் அவளது முகம் நன்றாகத் தெரிந்தது; “வள்ளியம்மை தன்னை நினைத்துத் துக்கப்படுகிறாள்” என்று நினைத்தாள் துளசி.

பண்டிதரின் வீட்டில் இரவில் ஒரு சிறிய கைவிளக்கு மட்டும் கொழுத்தப்படும். அதன் அருகில் இருந்து பண்டிதர் ஏதாவது படிப்பார். துளசியின் பிள்ளைகளும் படிப்பாரகள். பின் சாப்பாடு இருந்தால் சாப்பிட்டு விட்டு விளக்கை அணைத்தால், ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் தான் துளசி விளக்கைக் கொழுத்துவாள். இப்படிப் பிரகாசமான விளக்கு என்றும் கொழுத்தப்பட்டதில்லை. அந்த விளக்கை இரவு வள்ளியம்மை கொண்டு வந்திருந்தாள்.

“எவ்வளவு நேரமென்று விழித்திருக்கப் போகிறாய். படு” என்றாள் வள்ளியம்மை.’

“மகனின் உடல் நெருப்பாகக் கொதிக்கிறது. எனக்குப் பயமாக இருக்கிறது. முன்பும் இப்படித்தான் இருந்து பின் பெரிதாகிறயது” விம்மினாள் துளசி.

வள்ளியம்மை எழுந்து சென்று கோவலனது உடலைத் தொட்டுப் பார்த்தாள். அதில் பெரிய மாற்றத்தை அவளால் கண்டு கொள்ள முடியவில்லை; “நீ, உனது மகன் அழுததும் பாசத்துடனும் பயத்துடனும் தொட்டுப் பார்த்திருக்கிறாய். அதனால் தான் அவனது உடல் ‘நெருப்பாகக் கொதிக்கிறது’ என்று சொன்னாய்.

நான் தொட்டுப் பார்த்தேன். வித்தியாசம் தெரியவில்லை’’ என்றாள் வள்ளியம்மை.

மீண்டும் துளசி கோவலனது உடலைத் தொட்டுப் பார்த்தாள். வள்ளியம்மை கூறியது போல அவனது உடல் குளிர்ந்தது; ‘‘வள்ளியம்மை சொல்வது போல நான் பயத்துடனும் பாசத்துடனும் தொட்டுப் பார்த்ததால் தான் அவனது உடல் வித்தியாசமாகத் தெரிந்தது’’ என்று நினைத்தாள்.

அப்போது கோவலன் எழுந்து பலமாக அழுதான். துளசி பரபரப்புடன் கோவலனைத் தூக்கினாள்.

‘‘பண்டிதர் இறந்தமையால் அவன் பயப்பட்டிருப்பன். அதுதான் அவன் அடிக்கடி எழுந்து அலறுகிறான். நீ பயப்படாதை. திருநீறு கொண்டு வந்து பூசிவிடு’’ என்றாள் வள்ளியம்மை.

விளக்கைத் தூக்கிக் கொண்டு அறையுள்ச் சென்ற துளசி திருநீறு கொண்டு வந்து அவனது நெற்றியில் பூசிவிட்டுச் சொன்னாள்; ‘‘நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி எம்மைக் காப்பாற்றுவார். அவர் இருக்கும்வரை எமக்கு எந்தக் கஷ்டமும் வராது’’ என்றாள். கோவலன் அவளது மடியில் படுத்தான்.

எங்கோ சாமக்கோழி கூவியது. துளசி நித்திரை வராமல் பாயில் புரண்டாள். மற்றைய நாட்களில் இரவு முழுவதும் தூங்கப் பசி விடாது. ஆனால் இன்று பண்டிதர் இறந்தமையால் தணிகாசலம் பகல் சோறு கொண்டு வந்து

கொடுத்திருந்தார். பகலும் சாப்பிட்டு இரவும் சாப்பிட்டு மிஞ்சியிருந்தது. அதனால் அதற்குள் தண்ணீர் விட்டிருந்தாள். இப்படி அவளது வீட்டில் ஒரு போதும் சோறு மிஞ்சியது கிடையாது. இன்று தேவைக்கதிகமானளவு உணவு வீட்டில் இருக்கிறது. இனிமேல் சாப்பாட்டிற்கு என்ன செய்வது? இவ்வளவு நாளும் அப்பாவின் ஓய்வூதியமாவது இருந்தது. இனி என்ன செய்வது?'' என்பதை நினைக்க அவளுக்குப் பயமாக இருந்தது. அதன் பின் அவள் தூங்கவில்லை.

---

**1049. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதுஒன்றும் கண்பாடு அரிது.**

---

ஒருவன் நெருப்பினுள்ளே தூங்க முடியும். ஆனால் வறுமைப்பட்டால் ஒருநாளாவது கண்மூடித் தூங்க முடியாது.

## ஆசைகளே காரணம்

விடிந்ததும் வள்ளியம்மை சென்றுவிட்டாள். துளசிக்கு அதிகாலை நான்கு மணிக்குத்தான் நித்திரை வந்தது. ‘‘துளசி இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்திருந்தவள்; உறங்கிவிட்டாள். எழுப்பக் கூடாது'' என்று நினைத்தவாறு சென்றாள் வள்ளியம்மை.

ஆறுமணிக்கு கோவலன் எழுந்து துளசியை எழுப்பினான். அதனால் துளசி எழுந்து முகங் கழுவி விட்டுத் தேநீர் வைப்பதற்காக அடுப்பை

மூட்டினாள். அப்பொழுது வேலாயுதபிள்ளை பனையோலையால் இளைக்கப்பட்ட பெட்டியில் காலைச் சாப்பாடு கொண்டு வந்தார்.

“நேற்றுத் தணிகாசலம் அண்ணை தந்த சோறு மிஞ்சியிருக்கிறது. இதையும் கொண்டு வந்து விட்டீர்கள்” என்றாள்.

“காய்ச்சல் காரப்பிள்ளைக்குப் பழஞ்சோறு கொடுக்கப் போறியா…?” என்று கேட்டவாறு பெட்டியை அவளிடம் கொடுத்தார் வேலாயுதபிள்ளை.

மரணவீட்டுக்கு உணவு கொடுப்போர், தாம் கொண்டு வந்த உணவைத் துடக்குக் காரருடன் பங்கிட்டு உண்பது அந்த ஊர் வழக்கம்; “துளசி நான் மகா கணபதி கோயிலுக்குத் தினமும் தொண்டு துரவு செய்கிறனான் என்று உனக்குத் தெரியும். அதனால் எனக்குத் தராதை” என்றார்.

அப்பொழுது அங்கே பண்டிதரின் சகோதரியும் அயல் வீட்டுக்கார விசாலாட்சிப் பாட்டியும் வந்தனர். விசாலாட்சிப் பாட்டி படலையில் வரும்போதே பெரிதாக ஒப்பாரிவைத்தபடி வந்தாள்; “நான் பெறாதராசா, நீ நல்ல தமிழ்ப் படித்து நாட்டை உயர்த்தினாய்…. என்ரை செல்லம் நீ ஏணியாய் நிற்க ஏறியவர்களெல்லாம் பூவுலகை ஆழ நீ மேலுலகம் சென்றனையோ….? என்ரை ராசா நீ பெத்த குஞ்சுதான் பெற்ற குஞ்சுகளோடு ஆலாய்ப் பறக்குதடா….” என்றவாறு முற்றத்தில் அவள் குந்தியழ பண்டிதரின் சகோதரி பாட்டியைக்

கட்டிப் பிடித்து அழுதாள். துளசிக்கு ஒப்பாரி வைக்கத் தெரியாது. அதனால் அவர்களிருவரையம் கட்டிப் பிடித்தவாறு தலைகுனிந்தபடி இருந்தாள்.

பத்துநிமிடங்கள் வரை இருவரும் முற்றத்தில் குந்தியிருந்து ஒப்பாரி வைத்தனர். பின் பண்டிதரின் சகோதரி சொன்னாள்; "விசாலாட்சிப் பாட்டி முப்பத்தொன்று முடியும் வரையும் காலையும் மாலையும் ஒப்பாரி வைத்து அழவேண்டும். வந்திடு"

"வர்றத்திலை பிரச்சினை இல்லை. என்ரை மருமகள் இங்கு வந்தால் தோயாமல் வீட்டுக்குள் விட மாட்டாள். பண்டிதருக்குப் பல வழிகளிலும் எங்கடை குடும்பம் கடமைப் பட்டது. என்ரை பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அவற்ரை வீட்டை வந்து படிச்சதுகள். பேமனிதன். படிப்பிக்கிற பிள்ளைகளிடம் சிறிதாவது பணம் பெற்றிருக்கலாம்." என்றாள் விசாலாட்சி

'என்ரை தம்பி ஒரு கொள்கைவாதி. அவன்தான் நினைத்தபடி வாழ்ந்து ஒரு சரித்திரம் படைத்து விட்டான். அவனுக்குப் பிறந்த பிள்ளைகள் தான் வாய்க்கவில்லை" என்றாள் பண்டிதரின் சகோதரி.

துளசிக்கு அதைக் கேட்டதும் பெரும் கோபம் வந்தது. அதை அவள் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். வீணாக மரண வீட்டில் கதைத்துப் பிரச்சினையைக் கிளப்ப அவள் விரும்பவில்லை. அவர் உயிரோடு இருந்த காலங்களில் அவளை வீட்டில் அண்டுவதில்லை. அத்துடன் அவளின் வீட்டுக்கும் சென்றதில்லை.

“உங்கள் இரண்டு பேருக்கும் உள்ள பாசத்தைப் பற்றி எனக்குத் தெரியும். நீ வீணாகக் கதையாதை” என்று சொன்ன விசாலாட்சிப் பாட்டி அவளின் பதிலை எதிர்பாராது உள்ளே சென்றாள்.

“சாப்பிடுங்கோ பாட்டி” என்று துளசி ஒரு தட்டில் வேலாயுதபிள்ளை கொண்டு வந்த இட்டலியை வைத்து சட்டிணியையும் ஊற்றிக் கொடுத்தாள். சட்டிணியின் வாசம் கமகமத்தது.

“மாமிக்கும் குடன்”

“அவா சாப்பிர்றாவோ தெரியாது” என்று கூறியபடி இன்னொரு தட்டில் மூன்று இட்டலிகளை வைத்து எடுத்துச் சென்றாள் துளசி.

“இன்றைக்கு நான் அமாவாசை விரதம்” என்றாள் பண்டிதரின் சகோதரி.

எட்டு மணிக்கு விசாலாட்சிப் பாட்டியும் பண்டிதரின் சகோதரியும் சென்று விட்டனர். துளசி ஒரு தட்டை எடுத்து இரண்டு இட்டலிகளை எடுத்து வைத்து விட்டுச் சட்டினியை ஊற்றிச் சாப்பிட்டாள். இட்டலி மல்லிகைப் பூவைப் போல இருந்தது. சட்டினி மிகவும் சுவையாக இருந்தது; அப்படியான சுவையுள்ள உணவை அவள் தனது வாழ்நாளில் சாப்பிட்டதில்லை. “செத்துத் தொலைந்து போகலாம், இல்லாவிட்டால் பிள்ளைகளை அனாதை இல்லமொன்றில் விட்டு விட்டு ஏதாவது ஒரு கோயிலிலோ அல்லது ஆச்சிரமத்திலோ சென்று தங்கலாம். ஆனால் அங்கு சுவையான உணவு

கிடையாது. உப்புச் சப்பில்லாத உணவுகள்தான் கிடைக்கும்'' என்று எண்ணினாள் துளசி.

“உண்ண உணவுகள் எதுவும் இல்லாத வறியவர்கள் முற்றும் துறக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம், மற்றவர்களுடைய உப்புக்கும் கஞ்சிக்கும் எமனாக இருப்பதே ஆகும்'' ஆரூரனுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும் போது பண்டிதா் கூறிய வார்த்தைகள் துளசியின் காதில் ஒலித்தன.; “உண்மைதான். அதை நான் இப்போது தான் புரிந்து கொண்டேன்'' என்று நினைத்தாள் துளசி.

**1050. துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.**

உண்பதற்கு ஏதும் இல்லாத வறியவர்கள் முற்றும் துறக்கக் கூடியவராக இருந்தும் துறக்காததற்குக் காரணம், அவர்கள் உப்புக்கும் கஞ்சிக்கும் ஆசைப் படுதலே ஆகும்.

## பழியுடையவர்கள்

அன்று கெங்காதரன் துளசியின் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டதும் ஒப்புக்குக் கண்கலங்கினாள் துளசி.

“நேற்று நான் வெளியூருக்குச் சென்றதால் செத்த வீட்டுக்கு வரமுடியாமல் போய் விட்டது.

இன்று காலைதான் வெளியூரில் இருந்து வந்தேன். பண்டிதர் சிறந்த அறிவாளி. அவர் இறந்தது இந்த ஊருக்கு பெரும் நட்டம். நான் அவரிடம் படித்தனான்...'' கெங்காதரன் கூறிக் கொண்டிருந்தான்.

சில வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவமொன்று அவளது மனத்திரையில் அசைந்தது.

அன்று சமைப்பதற்கு வீட்டில் பொருட்களில்லை. அத்துடன் பண்டிதர் சுகவீன முற்றிருந்தார். அதனால் அவர் கெங்காதரனுக்குத் தனது தேவையை விளக்கி ஒரு கடிதம் எழுதித் துளசியிடம் கொடுத்து, அதைக் கெங்காதரனிடம் கொடுக்கச் சொன்னார்.

துளசி தயங்கினாள். அதை உணர்ந்த பண்டிதர் சொன்னார்; ''அவன் எனது மாணவன். கட்டாயம் உதவி செய்வான். நீ போய்க் கேள்.''

துளசி கெங்காதரனின் வர்த்தக நிலையத்திற்குச் சென்றாள். அப்போது அவன் வர்த்தக நிலையத்தின் உள்ளே இருந்தான். சிப்பந்தி ஒருவன் பண்டிதரின் மகள் துளசி வந்திருப்பதாக அவனிடஞ் சென்று சொன்னான். அதற்கு அவன் அவளை உள்ளே வரும்படி சொன்னான்.

துளசி உள்ளே சென்றாள். அந்த அறையில் ஒரு மேசை இருந்தது. அதில் சாராயப் போத்தல் ஒன்றும் கண்ணாடிக் குவளையொன்றும் இருந்தது.

கண்ணாடிக் குவளையில் அரைவாசிக்குச் சாராயம் ஊற்றப்பட்டிருந்தது. அதைக் கண்ட துளசி அஞ்சினாள்; “வா துளசி, நீ எனது ஆசிரியரின் மகள். பாவம் இளம் வயதில் கணவனை இழந்து விட்டாய். அவன் என்னுடைய நண்பன். நல்ல உழைப்பாளி. அவன் இருந்தால் நீ மகாராணி மாதிரி இருந்திருப்பாய்” என்றவாறு எழுந்தான்.

துளசிக்குப் பயமாக இருந்தது. பண்டிதர் கொடுத்த கடிதத்தை நீட்டினாள். கடிதத்துடன் அவளது கையையும் சேர்த்துப் பிடித்தான் கெங்காதரன். துளசி பதறியபடி கையை உதற, அவன் அவளது கையை விட்டான்.

“ஏன் பயப்படுகிறாய்? இதெல்லாம் உலகத்திலை நடக்காததா…? வசந்தனியைப் பார். அவள் பகிரங்கமாக மோட்டார் வாகனத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரோடு செல்கிறாள்.”

துளசிக்குக் கோபம் வந்தது; “துட்டனான உன்னை நல்லவனென்றும், தன்னுடைய மாணவனென்றும் நம்பியிருக்கும் எனது தந்தைக்குச் செருப்பால் அடிக்க வேண்டும்” என்று கூறிவிட்டு வந்தாள்.

அவள் வந்ததும் பண்டிதர் சொன்னார்; “கெங்காதரன் நல்லவன். இப்போ உனக்கு அது புரிந்திருக்கும்”

துளசிக்குச் சிரிப்பு வந்தது; பின் கோபம் வந்தது. அதை வெளிக் காட்டிக் கொள்ளாது

சொன்னாள்; ‘‘அவர் வெளியூருக்குச் சென்று விட்டாராம். வர இரண்டு மூன்று தினங்கள் செல்லுமாம்.’’

‘‘அவன் வந்தபின் போய்க் கேளம்மா. கேட்கத் தக்கவர்கள் யாரென அறிந்தே வறியவர்கள் கேட்க வேண்டும். அதனால் தான் நான் உன்னை அனுப்பினேன். செல்வந்தரிடம் கேட்கும் போது இல்லையென்று மறுத்தார்களானால் அது அவர்களுக்குத்தான் பழியே தவிரக் கேட்பவர்களுக்கல்ல’’ என்றார் பண்டிதர்.

அதன்பின் அவள் அவனை இன்றுதான் காண்கிறாள்; ‘‘பண்டிதர் உழைக்கும் காலத்தில் தேடிய பணத்தை மிச்சம் பிடித்து வைக்கவில்லை. அதனால் நீதான் துன்பப்படுகிறாய். உனக்கு உதவிகள் ஏதாவது தேவையானால் கேள்’’ என்றவாறு தனது சட்டைப் பைக்குள் கையை வைத்து அதிலிருந்து பணநோட்டுக்கள் சிலவற்றை எடுத்து நீட்டினான். கெங்காதரன்.

‘‘எனக்கு வேண்டாம். அப்பா இதுவரை யாருக்கும் கடமைப்பட்டதில்லை. நான் கடமைப்பட்டு அவரின் புகழுக்கு இழுக்குத் தேடவிரும்பவில்லை’’ என்றாள் துளசி.

கெங்காதரன் எதுவும் பேசாது சில கணங்கள் இருந்தான். பின் எழுந்து; ‘‘நான் வருகிறேன்’’ என்று கூறிவிட்டு நடந்தான்.

அவன் சென்ற பின்பு இராசகோபால் வந்தான். "வேலாயுதபிள்ளை அண்ணை இட்டலி கொண்டு வந்தவர். நல்ல சுவையாக இருக்கிறது. கொண்டு வரட்டா...?" என்று கேட்டாள் துளசி.

"நான் காலையில் சாப்பிட்டு விட்டேன்." என்றான் இராகசோபால்.

"இரண்டு இட்டலியாவது சாப்பிடுங்கள்" என்றவாறு உள்ளே சென்ற துளசி ஒரு தட்டில் இரண்டு இட்டலிகளை வைத்துக் கொண்டு வந்து நீட்டினாள்.

அதை வாங்கி உண்ட இராசகோபால் சொன்னான்; "நல்லாய் இருக்கு. வேலாண்ணை கொடுத்து வைத்தவர். நல்ல உணவு உண்பவன் தான் பாக்கியசாலி" அதைக் கேட்ட துளசியின் முகம் வாடியது.

**1051. இரக்க இரத்தக்கார்க் காணின்; கரப்பின் அவர்பழிதம்பழி அன்று.**

இரக்கத் தக்கவர் யார் என்று அறிந்த பின்பே இரக்க வேண்டும். அவர் இல்லை என்று சொல்வாரேயானால், அது அவருக்கே பழியை உண்டாக்கும். இரப்பவருக்குப் பழி ஏற்படாது.

## இன்பமான பிச்சை

துளசியைப் பார்த்தான் இராசகோபால். அவளது முகம் தான் வந்த போது மகிழ்வுடன் இருந்தது போலவும், தற்பொழுது வாடி விட்டதைப் போலவும் இருந்தது; "நான் வரும் போது சற்று மகிழ்வைக் காட்டியிருப்பாள். தகப்பன் இறந்தது கவலையாகத் தானே இருக்கும்" என்று நினைத்தவாறு இரவு முழுவதும் நீயும் உனது மகனும் நித்திரை கொள்ளவில்லை என்று வள்ளியம்மை சொன்னாள்" என்றவாறு எழுந்து சென்று கோபலனைத் தொட்டுப் பார்த்து விட்டுச் சொன்னான்; "மேல் சுடவில்லை. நீ அவன் இரவு எழுந்து அழ அவனுக்கு மீண்டும் வருத்தம் வந்துவிட்டது என்று நினைத்துப் பயந்து விட்டாய். வைத்தியர் பத்து நாட்கள் கழிய வரச் சொன்னவர். நாளைக்குச் சென்று வைத்தியரிடம் காட்டுவோம்" என்றான் இராசகோபால்.

"நான் உங்களைக் கேட்க நினைத்தனான். அதற்கு முன் நீங்கள் சொல்லி விட்டீர்கள். அத்துடன் போனவருடம் வீடு வேய்ந்திருக்க வேண்டும். வேயவில்லை. ஒவ்வொரு வருடமும் வீடு வேய கனகாசு வேண்டும். ஓடு போட்டுத் தந்தீர்களானால் நல்லது" என்றார் துளசி.

"நீ நம்புகிறாயோ தெரியவில்லை. காலையில் வள்ளியம்மை வீட்டுக்கு வந்தவுடன்; "பாவம் துளசி, கூரை சரியாக உக்கி விட்டது. காற்றடித்தால் கஞ்சல் கொட்டுகிறது. அதனால் அவளது வீட்டுக் கூரைக்கு ஓடு போட்டுக் கொடுங்கோ" என்றவள் இந்தக் கிழமை ஓட்டால்

வேய்ந்து தருகிறேன். பிறகு மழைக்காலம் வந்தால் கரைச்சல்'' என்றான் இராசகோபால்.

பண்டிதர் அடிக்கடி சொல்வார்; ''ஒரு செல்வந்தரிடம் இரந்து கேட்டும் பொருட்கள் துன்பமில்லாமல் மகிழ்வுடன் கிடைக்குமானால், அவ்வாறு இரப்பது இன்பத்தையே தரும்'' பண்டிதர் தனக்கு முன்னால் வந்து சொல்வதைப் போலத் துளசிக்கு இருந்தது.

மறுநாள் தச்சுத் தொழிலாளிகள் மூவர் துளசியின் வீட்டுக்கு வந்து கூரை வேலை செய்தனர். கூரை வேலை முடிந்ததும் கூரை ஓட்டால் வேயப்பட்டது. கூரை வேலை தொடங்கிய அன்று இராசகோபால் வெளியூருக்குச் சென்றமையால் வள்ளியம்மை துளசியின் வீட்டில் பொறுப்பாக நின்று கூரை வேலைகளைச் செய்வித்தாள்.

''எனக்கு வறுமையால் வரும் துன்பங்களைப் பற்றித் தெரியும். முன்பு நாம் வாழ்ந்த வீட்டுக் கூரை பழுதடைந்திருந்தமையால் காற்றுக் காலத்திலும் மாரி காலத்திலும் நான் பாய்விரித்துப் படுப்பதில்லை. மாமா நாம்படும் துன்பத்தைக் கண்டு வேதனைப் பட்டு எங்களை மாரி காலத்தில் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுவார்'' என்றாள் வள்ளியம்மை.

அன்று மாலை துளசியின் வீட்டுக்கு வள்ளியம்மையோடு வந்தான் இராசகோபால்; ''நேற்று கோவலனை வைத்தியரிடம் அழைத்துச் செல்வதாகக் கூறினீர்கள்'' என்றாள் துளசி.

“சொன்னனான் தான். அதற்கிடையில் அவசரமாக ஒரு காரியம் பார்க்க வெளியூ ருக்குச் செல்ல வேண்டியதாயிற்று. இப்போது போவோம்” என்றான் இராசகோபால்.

இராசகோபாலும் துளசியும் கோவலனும் வைத்தியசாலைக்குச் சென்றனர். வைத்தியர் கோவலனின் உடல் நிலையைப் பரீட்சித்தார்; “கோவலனது நோய் முற்றாக மாறிவிட்டது. அவனுக்கு நல்ல சத்தான உணவு வகைகளைக் கொடுங்கள்” என்றார் வைத்தியர்.

துளசி இராச கோபாலைப் பார்த்தாள். அவளின் கண்கள் அவனை யாசித்தன. வைத்தியருக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு வெளியே வந்தான் இராசசோபால். துளசி கோவலனுக்கு மருந்து வாங்கிக் கொண்டு வந்தாள். இராசகோபால் மோட்டார் வண்டியுள் இருந்தான். துளசியும் கோவலனும் மோட்டார் வண்டியில் ஏறியதும் அது புறப்பட்டது.

“கோவலன் சரியான கெட்டிக்காரனென்று கனகலிங்கம் வாத்தியார் நெடுகச் சொல்லுறவர். அத்துடன் அவனை நல்ல முறையில் கவனித்து ஒழுங்காகப் பாடசலைக்கு அனுப்பினால் அவன் பெரிய உத்தியோகத்தனாக வருவான்” என்றும் சொல்லுறவர். அவனை உங்களது பிள்ளையாக நினையுங்கள்” என்று விம்மினாள் துளசி.

“இப்போது ஏன் அழுகிறாய்? உன்னை நான் எனது சகோதரியாகவே நினைக்கிறேன். இனி மேல்

உன்னைக் கஷ்டமில்லாமல் காப்பாற்றுவது எனது கடமை'' என்றான் இராசகோபால்.

''மிகவும் நன்றி அண்ணா. நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி எனது விஷயத்தில் கல்லாகத்தான் இருக்கிறார் என்று நினைத்தேன். ஆனால்அவர் கருணையுள்ளவர் என்பதைக் காட்டியுள்ளார். உங்களை முன்பே நான் கேட்டிருக்கலாம்'' என்றாள் துளசி.

''எல்லாவற்றிற்கும் காலம் வரவேண்டும். பத்துப்பதினைந்து வருடங்களாக நான் சோம்பியிருந்தமையால் கஷ்டப்பட்டேன். முன்பே நான் உழைக்கலாமென நினைக்கக் கூடக் காலம் விடவில்லை'' என்றான் இராசகோபால்.

**1052. இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை<br>துன்பம் உறாஅ வரின்.**

இரந்து கேட்கும் பொருள்கள் துன்பமில்லாமல் கிடைத்தால், இரந்து கேட்பதும் இன்பத்தைத் தரும்.

## அழகான பிச்சை

அன்று காலை தணிகாசலம் துளசியின் வீட்டுக்கு வந்தார். தணிகாசலத்தின் மீது துளசிக்கு அளவு கடந்த அபிமானம் உண்டு. அவர் அங்கு எப்போது வந்தாலும் ஏதாவது ஒரு பொருள் கொண்டு வந்து பண்டிதருக்குக் கொடுக்காமல்

விடமாட்டார். அவர் நெல் அறுவடை செய்தால் நெல்லுக் கொடுப்பார். காய்கறிகள் பறித்துச் சந்தைக்குக் கொண்டு சென்றால் காய்கறிகள் கொடுப்பார். வெண்காயம் அறுவடை செய்தால் வெண்காயம் கொடுப்பார். பண்டிதரை அவர் குறை கூறுவதே கிடையாது.

ஒருநாள் துளசி பண்டிதரைப் பற்றித் தணிகாசலத்திற்குச் சொன்னாள்; “இந்த வீடு அம்மாவுக்குச் சீதனமாகக் கொடுத்தது. அப்பா இந்த வீட்டைக்கூட ஒழுங்காகத் திருத்த வில்லை. கொள்கை இலட்சியம் என்று கூறிக் கொண்டு வாழ்ந்தாரே தவிரத் தான் பெற்ற பிள்ளைகளுக்கென எதையும் செய்யவில்லை. மூன்று நேரமும் அரை வயிறு சாப்பாடு. நல்ல நாள்ப் பெரு நாளுக்குக் கூட ஒரு உடுதுணி வாங்கித் தருவதில்லை. அவரை நான் காதலித்தமையால் எனக்குத் திருமணத்தைத் நடத்தி வைத்தார். மற்ற இரு தங்கை கன்னி கழியாமல் கிழவியாக வேண்டிவது தான். பெற்ற பிள்ளைகளில் எந்த விதமான அக்கறையுமில்லை. ஊர்ப்பிள்ளைகளைப் பற்றியும் பாடசாலையைப் பற்றியும் தான் எந்த நேரமும் நினைப்பு. அந்த நிலைப்பில் சிறிதளவாவது குடும்பத்தின் மீது இருக்கக் கூடாதா..? நான் கூலி வேலைகளுக்குச் சென்று உழைப்பேன். அதற்கும் விடுகிறாரில்லை என்று விம்மினாள்.

“அழாதையம்மா. ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு விதமானவர்கள். பொதுவாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் மிகவும் குறைவு. ஊரில் உள்ள எல்லா ஆசிரியர்களும் கஷ்டப்படுகிறார்கள். ஆசிரியத்தொழிலுடன் கமம்

செய்தல் வேண்டும். தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிப்பவர்கள் தான் நன்றாக இருக்கிறார்கள். பண்டிதருக்கு அது தெரியாது. “முன் மாதிரியாக வாழ்வதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தான் மனிதனாகப் பிறந்தவனது கடமை” என்று நினைப்பவர்; “ஏழைகளுக்கும் பலவீனர்களுக்கும் உதவி செய்பவனே உண்மையான கடவுள் பக்தன். என்னால் பண உதவி செய்ய முடியாவிட்டாலும் என்றும் அழியாத கல்வியைக் கொடுக்கிறேன்” என்பார். அது அவரின் இலட்சியம்.” என்றார் தணிகாசலம்.

“அது அவரது இலட்சியம் என்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அவருக்கென்று சில கடமைகள் இருக்கின்றன. அவற்றை அவர் செய்தாரா...?” என்று கேட்டாள் துளசி.

“நீ பண்டிதரின் மகள். அதனால் நன்றாகப் பேசுகிறாய்”

விம்மினாள் துளசி; “இது பண்டிதரின் அறிவான பேச்சல்ல. வறுமையின் குரல். உங்களைப் போன்ற நல்லவர்கள் சிலரைத் தவிர மற்றவர்கள் தமது காரியங்களுக் காகத்தான் அப்பாவிடம் வருகிறார்கள். காரியம் முடிந்ததும் அவரைப் பற்றி நினைப்பதே இல்லை”

“அப்படிச் சொல்லாதை. உனது தகப்பனார் மற்றவர்கள் கொடுத்தால் அது பிச்சை என்று கருதி அதை வாங்க மாட்டார்.”

“அதைப் பிச்சை என்று ஏன் நினைப்பான். குருவுக்கான தட்சணை என்று ஏன் நினைக்கக் கூடாது” என்று அவள் சொன்னது தணிகாசலத்தின் காதில் ஒலித்தது.

“வாற கிழமை அந்தியேட்டிக் கிரியைகள் செய்ய வேண்டும். நீங்கள் தான் அதைச் செய்ய வேண்டும்” என்றாள் துளசி. அதைக் கேட்கும் போது அவளது குரல் தாழ்ந்திருந்தது. கண்கள் யாசித்தன.

“பிரச்சினை இல்லை. நான் செய்யிறன்.” என்றார் தணிகாசலம்.

நன்றிப் பெருக்குடன் அவரை நிமிர்ந்து பார்த்தாள் துளசி. அவரது முகம் பொங்கிப் பூரித்திருந்தது. பலர் “என்ன வேண்டும்?” என்று கேட்பார்கள். ஆனால் தேவையைச் சொன்னால் கேட்டுக் கொண்டு சென்று விடுவார்கள். பின் உதவி செய்ய மாட்டார்கள். சிவசுந்தரமூர்த்தி அப்பா உயிரோடு இருக்கும் போது ஒரு நாள் வந்து; “பண்டிதர் ஐயா நோயால் கஷ்டப்படுகிறீர்கள். உங்களுக்கு என்ன வேண்டுமென்று சொல்லுங்கோ. நானாகத் தருவது உங்களுக்கு உபயோகமில்லாமலும் இருக்கும்” என்றார்.

அப்பா; “எனக்கு எதுவும் வேண்டாம்” என்றார்.

“இல்லை. உங்களுக்குச் சரியாக கஷ்டம் தேவையைச் சொல்லுங்கோ” என்று வற்புறுத்தினார்.

“அப்படியானால் ஐயாயிரம் ரூபா பணம் தாருங்கள்” என்றார் அப்பா.

“சரி இப்போது நான் கொண்டு வரவில்லை. பின் கொண்டு வந்து தருகிறேன்” என்று கூறிவிட்டுச் சென்றவர் சென்றவர்தான். இரண்டு மூன்று மாதகாலம் வரவில்லை. அப்பாவின் வேண்டுகோளுக்காக நான் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு ஒரு முறை சென்றேன். அவரது மனைவி, “அவர் இல்லை” என்று சொன்னாள்.

“அப்பா வந்து சந்திக்கச் சொன்னவர்” என்று கூறிவிட்டு வந்தேன். எனினும் அவர் வரவில்லை. அப்படிப்பட்டவர்கள் வாழும் இவ்வுலகில் தணிகாசலம் வித்தியாசமானவர். மறைக்காமல் கொடுக்கும் உள்ளமும் கடமை உணர்ச்சியும் உள்ளவர். அப்படியான வர்களிடம் பிச்சை கேட்பது கூட ஓர் அழகு” என்று நினைத்தாள் துளசி.

“பண்டிதரைக் குறைசொல்லாதை அம்மா. நான் கேட்டவர்களுக்கு என்னாலானதைக் கொடுப்பேன். அதை எனது வீட்டார் தடுத்தால் நான் கொடுக்க முடியுமா…? எல்லாம் ஊழ்வினை. “எப்போதோ முடிந்த காரியம்” என்று கீதை சொல்கிறது. நீ கவலைப்படாதை உனக்கு நல்ல வாழ்வு கிடைக்கும்” என்றார் தணிகாசலம்.

---

**1053. கரப்புஇலா நெஞ்சின் கடன்அறிவார் முன்நின்று**
**இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து.**

---

மறைக்காமல் கொடுக்கும் உள்ளமும் கடமை உணர்ச்சியும் உள்ள ஒருவனிடம் இரந்து பொருள் கேட்பதும் ஓர் அழகு ஆகும்.

## சிறப்பான பிச்சை

‘‘மிகவும் நன்றி அண்ணா, உங்களைப் போன்ற பரோபகாரிகள் வாழ்வதால் தான் எம்மைப் போன்ற ஏழைகள் வாழ்கிறார்கள்; ‘‘உள்ளதை மறைத்துக் கூறும் தன்மையைக் கனவிலும் அறியாதவரிடத்தில் பிச்சை கேட்பதென்பது பிறருக்குக் கொடுப்பதைப் போன்ற சிறப்புடையது என்று அப்பா; ‘‘வெட்கமில்லாமல் மற்றவர்களிடம் இரக்க வேண்டியுள்ளது’’ என்று நான் கூறும் போது சொல்வார். அது உண்மையென்று இப்பொழுது தான் தெரிகிறது’’ என்றாள் துளசி.

‘‘மக்களில் பலர் வசதிகள் இருக்கும் போது எல்லாம் தன்னுடையது என்று நினைக்கின்றனர். தான் இல்லாவிட்டால் உலகில் எதுவும் நடக்காது என்றும் நினைக்கின்றனர். மனிதனையும் மனிதனையும் இணைக்கும் பாலம் அன்பு தான். அது மனிதனையும் மனிதனையும் இணைப்பதன் மூலம் கடவுளுடன் சங்கமமாகிறது. அன்பும் தயாள குணமுள்ளவர்களிடத்தில் மனித நேயம் இருக்கும். மனித நேயமுள்ளவர்களால் தான் பிறர் படும் துன்பங்களைப் புரிந்து கொள்ள முடியும். இவற்றை வெறும் வாயால் கூறினால் மட்டும் போதாது. செயலிலும் காட்டுதல் வேண்டும். மனிதப் பண்புகள் ஒவ்வொருவரிடமும் இயற்கையாக இருத்தல்

வேண்டும். இவற்றை உருவாக்குவது கஷ்டம். ஆயிரம் செயல்களைத் தாம் செய்வோம் என்று கூறுவதை விட ஒரு செயலைச் செய்வது தான் மேலானது. அந்தப் பண்பு சிலரிடமாவது இருப்பதால் தான் உலகம் வாழ்கிறது. அந்தப் பண்பு உனது தந்தையாரிடம் இருந்தது. அதனால் நீ நன்றாக வாழ்வாய்'' என்றார் தணிகாசலம்.

துளசிக்கு அவரின் பேச்சைக் கேட்க மகிழ்ச்சியாக இருந்தது; ''அப்பா சொல்வார்; 'உள்ளதை மறைத்துக் கூறும் தன்மையைக் கனவிலும் அறியாதவரிடத்தில் பிச்சை கேட்பது என்பது பிறருக்குக் கொடுப்பதைப் போன்ற சிறப்புடையது என்று'' அவர் நிறையப் படித்தவர். அதனால் அப்படிச் சொன்னார். நாம் படியாதவர்கள். அதனால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை''

''சரி நான் கிரிகைகள் முழுவதற்குமான செலவை ஏற்றுக் கொள்கிறேன்..'' என்று கூறிவிட்டுச் சென்றார் தணிகாசலம்.

அவர் சென்ற பின்பு சிவசுந்தரமூர்த்தியும் தனபாலனும் அங்கு வந்தனர். துளசி பாய் ஒன்றை எடுத்துத் திண்ணையில் விரித்து விட்டு; ''இருங்கோ'' என்றாள்.

''பண்டிதரின் அந்தியேட்டி வாறகிழமை வருகிறது. அதற்கான ஆயத்தங்களைச் செய்து விட்டாயா....?'' என்று கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

துளசி பேசாமல் நின்றாள். அதனால் அவர் சொன்னார்; "குருக்களுக்கு வேண்டிய பொருட்களெல்லாவற்றையும் நான் தருகிறேன்"

துளசி அவரை நிமிர்ந்து பார்த்தாள்; "நீ, ஆளடுக்கு இல்லாதனீ. தனபாலனிடம் கொடுத்து அனுப்புகிறேன்" என்றார் சிவசுந்தரமூர்த்தி.

"வேண்டாம் ஐயா. நான் பெரிதாக அதைச் செய்யவில்லை..." துளசி கூறும் போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டார்; "பிதிர்க்காரியம் ஒழுங்காகச் செய்ய வேண்டும். இல்லா விட்டால் உனக்குப் பிதிர்கள் கஷ்டத்தைக் கொடுக்கும். அத்துடன் பண்டிதரின் ஆத்மாவும் சாந்தியடையாது"

"அப்பாவுக்குக் கிரிகைகளில் ஒருபோதும் நம்பிக்கை இருந்ததில்லை. ஒரு மனிதன் உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையுள்ளவனாக இருந்தால் அவன் கடவுளைத் தேடிக் கோயிலுக்குச் செல்லத் தேவையில்லை. கடவுள் அவனைத் தேடி வீட்டிற்கு வருவார். உடலாலும் உள்ளத்தாலும் தூய்மை உடையவர்களின் பிரார்த்தனைகள் தான் இறைவனது பாதங்களைச் சென்றடையும். தூய்மையற்றவர்களாக இருந்து கொண்டு சமயப் பிரசாரம் செய்பவர்களும் கோயிலுக்குச் செல்பவர்களும் நரகத்தையே அடைவார்கள். நான் இறந்தன்றே சிவபெருமானிடஞ் சென்று விடுவேன்." என்று அப்பா சொல்பவர். அதனால் அவர் பிதிராக அலைய மாட்டார். அதனால் முப்பதொராவது நாள் எமது குலதெய்வமான நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் குருக்களைக் கொண்டு ஒரு

மோட்ச அர்ச்சனை செய்விக்கப் போகிறேன்'' என்றாள் துளசி.

''அப்படி நீ நினைத்தால் அதன்படி நட. பண்டிதர் உயிரோடு வாழ்ந்த காலத்திலும் கோயிலுக்குப் பெரிதாக வருவதில்லை. கோயில் நிர்வாக சபையில் உறுப்பினனாகவும் இருந்ததில்லை. அத்துடன் கோயில் நிர்வாக சபையைப் பற்றிக் கதைப்பதும் இல்லை. அவர் ஒரு வித்தியாசமான மனிதர்'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

துளசி எதுவும் பேசவில்லை; ''சிவசுந்தரமூர்த்தி புகழுக்காகவே எதையும் செய்பவர்; சொல்பவர்.'' என்று அவளுக்குத் தெரியும். அத்துடன் கொடுக்க மனமில்லாதவர்களிடம் பிச்சை கேட்பதை விடத் தற்கொலை செய்து கொள்ளலாம்'' என நினைத்தாள்.

**1054. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்**
**கனவிலும் தோற்றாதார் மாட்டு.**

உள்ளதை மறைத்துக் கூறும் தன்மையைக் கனவிலும் எண்ணாதவரிடத்தில் இரந்து கேட்பது பிறருக்குக் கொடுப்பதைப் போன்ற சிறப்புடையது.

## தொடர்ந்து செய்கிறான்

சுவாமியார் பண்டிதரின் வீட்டுக்கு வந்த போது அவருடன் பலர் கூட வந்தனர். ஊரில்

நடைபெறும் மங்கல, அமங்கல நிகழ்வுகளுக்குச் சுவாமியார் செல்வார். சில சமயம் சம்பவம் நடைபெறும் தினத்தன்று செல்வார்; சில சமயம் நாலைந்து நாட்களின் பின் செல்வார்; சில சமயம் அவர் செல்ல ஆறேழு மாதங்களும் செல்லும். பண்டிதரின் இறுதிக் கிரிகைகள் நடைபெற்ற அன்று சுவாமியார் சென்று இரங்கலுரையாற்றினார்; “ஒரு சமூகத்தின் முன்னேற்றமென்பது அந்தச் சமூகத்தின் கல்வி அறிவு பெற்றவர்களைப் பொறுத்தே அமைகிறது. மக்கள் முன்னேற வேண்டுமானால் அவர்கள் கற்கவேண்டும். இறக்கும் வரை கற்க வேண்டும். கற்றவர்கள் பாமரர்களுக்குக் கல்வியைப் போதித்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்ந்த உழைக்க வேண்டும். அதுதான் கற்றவனைச் சிறப்படையச் செய்யும். அதைத் தனது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர் பண்டிதர். அவர் அறிவைத் தேடியளவிற்குப் பணத்தைத் தேடாமையால் அவரும் அவரது குடும்பத்தினரும் மிகவும் கஷ்டப்பட்டே வாழ்ந்தனர். அவர் பணந்தேட நினைத்திருந்தால் பெரிய பணக்காரனாகியிருக்கலாம். அவர்கல்வியை விற்கவில்லை; கற்புள்ள பெண்ணைப் போல பொருட்களுக்கு ஆசைப்படாது கொள்கையுடன் வாழ்ந்தவர். அவரின் செயற்பாடுகளைப் புரிந்தவர்கள் தான் இன்று இங்கு கூடியுள்ளனர். அவர்கள் அவரை வாழ வைப்பார்கள்” அவ்வார்த்தைகள் துளசியின் காதில் ஒலித்தன.

“பண்டிதரின் மரணச் சடங்கில் கலந்து இரங்கலுரையாற்றிய சுவாமியார் இரண்டாவது முறையாக வந்திருக்கிறாரென்றால் அதில் ஓர்

அர்த்தமிருக்கிறது” என்று நினைத்தவாறு ஓடிச் சென்று அவரது பாதங்களைப் பற்றினாள் துளசி.

“எழுந்திரு மகளே, உன்னை மகாகணபதி கைவிடமாட்டார். இராசகோபால் உனது வீட்டைத் திருத்தித் தந்துள்ளான்; உனது மகனின் வைத்தியச் செலவையும் கல்விச் செலவையும் ஏற்றுள்ளான்; தணிகாசலம் பண்டிதரின் மரணச் சடங்கிற்கான செலவையும், அந்தியேட்டிக் கிரிகைகளுக்கான செலவையும் ஏற்றுள்ளார். நரவராசா எந்த உதவி தேவையென்றாலும் செய்யக் காத்திருப்பதாகச் சொல்கிறான். இவர்களை விட, வேலாயுதபிள்ளை, பரமேஸ்வரன், தனபாலசிங்கம் ஆகியோர் உதவி செய்யக் காத்திருக் கின்றனர். இவ்வளவு காலமும் பண்டிதர் ஓர் இலட்சிய புரிஷராக வாழ்ந்தமையால உதவி செய்யப் பலர் காத்திருந்தும் அவர் அதை ஏற்கவில்லை. அவரைப் பற்றி உனக்குத் தெரியாது. இந்தக் கிராமத்திற்கு ஒரு பேரிழப்பு வந்து விட்டது” என்றார் சுவாமியார்.

துளசி, தான் தனது தந்தையைத் தவறாக நினைத்துப் பலரிடம் குறைப்பட்டதை நினைத்துக் கவலைப்பட்டாள். அவளது கண்கள் கலங்கின.

“உள்ளதை இல்லை என்று மறைக்காமல் கொடுப்பவர்கள் உலகில் இருப்பதால் தான், ஒருவர் முன்நின்று யாசிப்பவன் அச்செயலைத் தொடர்ந்து செய்கிறான். அவர்கள் தொடர்ந்து கொடுப்பதால் தான் உலகத்தில் உள்ள ஏழைகளுக்கு உண்ண உணவும் உடுக்க உடைகளும் கிடைக்கின்றன. ஏழை மக்களுக்கு உதவி செய்து அவர்களைத் துன்பத்தில் இருந்து விடுபடச் செய்பவனை மக்கள்

மறக்க மாட்டார்கள். அதனால் பண்டிதரை எந்நாளும் நினைப்பார்கள். பண்டிதர் பாடசாலைக்காக இரவும் பகலும் விக்னேஸ்வரமூர்த்தியுடன் சேர்ந்து உழைத்தவர். இலவசமாக இறக்கும் வரைக்கும் கல்வி கற்பித்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் வட மொழியிலும் அவரைப் போலப் புலமை உள்ளவர்கள் இங்கு யாரும் இல்லை. நானும் சில சந்தேகங்களை அவர் மூலமாகத் தான் தீர்த்துக் கொள்வேன். தற்பொழுது அப்படியான ஓர் அறிவுள்ள மனிதன் இல்லாமையால் மக்கள் கஷ்டப்படப் போகிறார்கள்'' என்றார் சுவாமியார்.

''இலக்கியப் பேரவையில் பண்டிதரது நிழற்பட மொன்றை அவரின் அந்தியேட்டியன்று வைக்கப் போகிறோம்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''அன்று சனசமூக நிலையத்திலும் வைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''பண்டிதருக்குச் செய்ய வேண்டியவற்றைச் சிறப்பாகச் செய்யுங்கள். அவர் வரலாற்றில் இடம்பெறப் போகும் மனிதன். முன்பு வாழ்ந்த சிறந்த அறிஞர்களைப் பற்றி நாம் கற்பது போலப் பண்டிதரது சைவப்பணியையும் தமிழ்ப்பணியையும் எதிர்காலத்தினர் படித்துப் போற்றுவார்கள்'' என்றார் சுவாமியார்.

அதைக் கேட்டுத் துளசி ஆச்சரியமடைந்தாள்.

**1055. கரப்பிலார் வையகத்து உண்மையால் கண்நின்று**
**இரப்பவர் மேற்கொள் வது.**

உள்ளதை இல்லை என்று மறைக்காமல் கொடுப்பவர்கள் உலகத்தில் இருப்பதால் தான் ஒருவரின் முன் நின்று இரப்பவன், அச் செயலைத் தொடர்ந்து செய்கிறான்.

## ஒழிந்திடும் வறுமை

துளசி விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்த போது தணிகாசலமும் வேலாயுத பிள்ளையும் அங்கு இருந்தனர்.

துளசியைக் கண்ட விக்னேஸ்வரமூர்த்தி பரபரப்புடன் எழுந்து வந்தார். அவரின் மனதில்; "கோவலனுக்கு ஏதாவது கடுஞ் சுகவீனமோ...?" என்ற கலக்கம் இருந்தது.

"ஐயா, எனது தந்தையாரின் அந்தியேட்டி புதன்கிழமை வருகிறது. அதற்குச் சொல்ல வந்தேன்." என்றாள் துளசி.

"இதற்கெல்லாம் நீ வருவதா...? வேறு யாரிடமாவது சொல்லியனுப்பியிருக்கலாம் தானே. நீ ஒரு பெண். அத்துடன் உனது தந்தை இறந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. வீட்டை விட்டு வெளியே செல்லக் கூடாது" என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

"உண்மைதான் ஐயா, ஆனால் எனக்கு யாரின் துணையும் இல்லை..." கலங்கினாள் துளசி.

“யார் யாருக்குச் சொல்ல வேண்டுமென்று சொல்லு நான் போய்ச் சொல்கிறேன்” என்றார் வேலாயுதபிள்ளை.

துளசி வேலாயுதபிள்ளையை நிமிர்ந்து பார்த்தாள். அவளது கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்ததால் அவரை அவளுக்குத் தெரியவில்லை. முந்தானையால் கண்களைத் துடைத்தாள்.

“பண்டிதர் ஊருக்கு எவ்வளவோ செய்தவர். அவருக்குத் தேவையான உதவிகளை நாங்கள் செய்வம். நீ பயப்படாமல் எம்மிடம் எந்த உதவியையும் கேட்கலாம்” என்றார் வேலாயுதபிள்ளை.

“நகுலன், கஜேந்திரன் எல்லோரும் உனது இனத்தவர்கள் தானே. அவர்களிடம் சொன்னால் செய்வார்கள்” என்றார் தணிகாசலம்.

“நீங்கள் பெரியவர்கள். உங்களுக்கு அவர்களைக் கொண்டு சொல்லுவிப்பது முறையல்ல என்று தான் நான் வந்தேன்.” என்றாள் துளசி.

“சரி சரி யார் யாருக்குச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறாயோ அவர்களின் பெயர்களைக் குறித்து வைத்திரு. நான் பின்நேரம் வருகிறேன். நீ எனது வீட்டுக்கு வரவேண்டாம். இதுவும் எனது வீடுதான். இங்கேயே சொல்” என்றார் வேலாயுதபிள்ளை.

“எனது வீட்டிற்கும் வரவேண்டாம். வேலாயுதபிள்ளை சொன்னது போல இது எனது வீடு. அதனால் எனக்கும் சொல்லத் தேவையில்லை” என்றார் தணிகாசலம்.

“மனதில் ஒன்றைத் வைத்துக் கொண்டு நேரில் காணும் போது சிரித்துக் கதைத்துப் பரிதாபம் பார்ப்பவர்கள் போல நடிப்பவர்கள் வெளியே பல தீய செயல்களைச் செய்வார்கள். ஆனால் நீங்கள் மூவரும் உள்ளதை மறைக்கின்றவர்கள் அல்லர். முகத்திற்கு நேரேயே யாவற்றையும் கூறும் பண்பாளர். உள்ளதை மறைக்கின்ற துன்பச் செயலைச் செய்யாதவர்களைக் கண்டால், பிச்சை கேட்க வருபவரின் உள்ளம் மகிழ்ந்து விடும்; அதனால் அவர்களுக்குத் துன்பங்கள் வராது; வறுமை முற்றாக ஒழிந்து விடும். இப்பொழுது எனக்கு வறுமை இல்லை ஐயா. எனது வறுமையை உணர்ந்தவர்கள் தம்மிடம் உள்ளவற்றை மறையாது எனது மனம் மகிழும்படி அள்ளித் தருகிறார்கள். இது அப்பா செய்த புண்ணியம்” என்றாள் துளசி.

“பண்டிதரை நினைத்தால் நெஞ்சு வலிக்கிறது. அவர் பாடசாலைக்காக எவ்வளவு தியாகஞ் செய்தவர். இங்குள்ள ஆசிரியர்கள் பலர் பதவிக்கு ஆசைப்படுவார்களே தவிர வேலைகள் செய்யமாட்டார்கள். அதிபர் என்றால் கையெழுத்து வைப்பது மட்டும் தான் தனது வேலை என்றும், ஆசிரியர்களென்றால் பாடசாலைக்கும் தனக்கும் தொடர்பில்லை என்றும் நினைக்கும் ஆசிரியர்கள் மத்தியில் பண்டிதர் வித்தியாசமானவர். எமது பாடசாலையில் உப அதிபராக இருக்கிறவர்

பாடசாலையின் எந்த ஒரு நிகழ்ச்சிக்காவது நேரத்திற்கு வந்ததில்லை. நிகழ்ச்சி முடியும் வரை நின்றதில்லை. ஆனால் பண்டிதர் இருபத்து நான்கு மணிநேரமும் பாடசாலைக்காக உழைத்தவர்; பதவியை எதிர்பாராதவர்; நான் எத்தனையோ முறை பதவிகள் பலகொடுத்தும், அவர் அதைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார். ஒப்புயர்வில்லாத மாமனிதர் அவர்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘இன்னுமொரு ஒப்புயர்வில்லாத பெரும் மனிதர் இருக்கிறார். அவரைப் பற்றி நீங்கள் நினைப்பதே இல்லை....?'' சிரித்தார் வேலாயுதபிள்ளை. முறாய்த்தார் தணிகாசலம்.

‘‘ஒப்புயர்வில்லாத மாமனிதன்.... எமது பாடசாலையின் பழைய மாணவன். பழைய அதிபர்; நாவலர் வித்தியாலயத்தின் முன்நாள் அதிபர் உள்ளதை மறைக்கின்ற துன்பச் செயலைச் செய்யும் கனகன். நீதிமன்றம் மூலம் பாடசாலைகுக் காணி வாங்கிய விஷயத்தில், நீதிமன்றச் செலவுக் காசைக் கட்டும்படி அனுப்பிய கட்டளைக்கு அமைவாகக் குற்றப்பணத்தைக் கட்ட முடியாது அதிபர் திண்டாடுகிறார். சனமும் கொடாது அவர் தன்னுடைய பணத்தில் தான் அதைக் கட்ட வேண்டும்'' சிரித்தார் வேலாயுதபிள்ளை.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசவில்லை. தணிகாசலம் கோபத்துடன் வேலாயுதபிள்ளையைப் பார்த்தார்.

‘‘பாவம் அவருக்கு உதவி செய்தல் வேண்டும். முன்பு வட்டிக்காசும் தனது பணத்தில் கட்டியவர்'' என்றார் வேலாயுதபிள்ளை.

“அது உனக்குத் தேவையில்லாத பிரச்சினை. பாடசாலைச் சமூகத்தினர் செய்ய வேண்டும். இல்லா விட்டால் அதிபர் செய்ய வேண்டும். ஆனால் அவர் செய்ய மாட்டார்.” என்றார் தணிகாசலம்.

“அவர் எப்படிச் செய்வார். காணி வாங்கும் போது விக்னேஸ்வரமூர்த்திக்கு நம்பிக்கை உள்ளவர் போல நடித்துக் கொண்டு, விக்னேஸ்வரமூர்த்தி செய்பவற்றை உடனுக்குடன் போய்க் கனகனிடம் சொன்னவர்” என்றார் வேலாயுதபிள்ளை.

**1056.கரப்புஇடும்பை இல்லாரைக் காணின் நிரப்பி இடும்பை எல்லாம் ஒருங்கு கெடும்.**

உள்ளதை மறைக்கின்ற துன்பநிலை இல்லாதவரைக் கண்டால், இரப்பவரின் வறுமையும் துன்பமும் இல்லாமல் போய்விடும்.

## பெருமகிழ்ச்சி

துளசி இராசகோபாலின் வீட்டுக்கு வந்தபோது இராசகோபால் வீட்டில் இருந்தான். முன்பு பலமுறை அவள் அங்கு வந்தபோது இராசகோபால் அங்கு இருப்பதில்லை. வள்ளியம்மைதான் இருப்பாள். அவளையும் வீட்டில் எந்நேரமும் காண முடியாது. அவள் பெரும்பாலும் வயலில் உள்ள வீட்டில் இருப்பாள். அல்லது வாழைத் தோப்பில் இருப்பாள். அன்று இருவரும் இருந்தது துளசிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இராசகோபாலோ அல்லது வள்ளியம்மையோ இதுவரை அவள் கேட்டதை இல்லையென்று சொன்னதில்லை. அத்துடன் அவளை இழிவாகப் பேசியதும் இல்லை.

இரண்டு தினங்களுக்கு முன் இராசகோபால் அவளது வீட்டுக்கு வந்தான். அவள் இராசகோபாலைப் பலநாட்களாகக் காணாமையால் தனது தேவைகளை நிறைவேற்றக் கஷ்டப்பட்டாள். கோவலனுக்குப் பாடசாலைத் தேவைக்காகப் பணம்தேவைப்பட்டது. அத்துடன் அவனது வகுப்பு மாணவர்கள் சுற்றுலாவுக்குச் செல்ல விருந்தனர். கோவலன் அவர்களுடன் செல்ல விரும்பினான். ஆனால் துளசி பணமின்மையால் அவனை விடவில்லை. அவனுக்கு; ‘‘சுற்றுலாவுக்குச் சென்றால் திரும்பவும் காய்ச்சல் வந்து விடும்’’ என்று கூறினாள். அதனால் முன்பு அழுது பிடிவாதம் பிடித்த அவன் பின்பு சமாதானமாகி விட்டான்.

இராசகோபாலைக் கண்டதும் கோவலனது பாடாசலைத் தேவைகளைச் சொன்னாள்; ‘‘எவ்வளவு பணம் வேண்டும்’’ என்று கேட்டான் இராசகோபால்.

‘‘அறுநூறு ரூபா’’ என்றாள் துளசி.

அவன் ஆயிரம் ரூபா கொடுத்து விட்டுச் சொன்னான்; ‘‘கோவலனது வகுப்பு மாணவர்கள் சுற்றுலாவுக்குச் செல்லப் போகிறார்கறார்களென்று எனது மகள் உமாதேவி சொன்னவள். கோவலன் செல்லவில்லையா…?’’

“இல்லை..” தலை குனிந்தாள் துளசி.

“ஏன்?”

“அவனுக்குத் திரும்பவும் காய்ச்சல் வந்து விடும்”

இராசகோபால் சிரித்தான்; “இனிக் கடைசிவரையும் காய்ச்சல் வராதென்று வைத்தியர் சொன்னவர். அதனால் அவனைப் போக விடு” என்று கூறிவிட்டு இரண்டாயிரம் ரூபா எடுத்துக் கொடுத்தான் இராசகோபால்.

அவள் அவனிடம் தனது தேவைகளைக் குறைத்துத்தான் சொல்வாள். ஆனால் அவன் ஒருபோதும் அவள் கேட்பதை விட அதிகமாகவே கொடுப்பான். அதைப்பற்றிக் குறை சொல்லவும் மாட்டான்.

பண்டிதர் இறப்பதற்கு முன் ஒருநாள் சிவசுந்தரமூர்த்தி பண்டிதரின் வீட்டிற்கு வந்தார். அப்பொழுது பண்டிதர் வீட்டில் இருக்கவில்லை. அவர் செல்லும் போது சிவசுந்தரமூர்த்தி வீட்டுக்கு வந்தால், “இலக்கியப் பேரவையில் வித்துவசிரோண்மணிக்கு விழா எடுப்பதற்கான செலவு முழுவதையும் சிவசுந்தரமூர்த்தி தருவதாகச் சொன்னவர் மூவாயிரம் ரூபா தேவையென்று சொல்” என்று கூறிவிட்டுச் சென்றார். அதனால் துளசி தந்தை கூறியவற்றைச் சொன்னாள்.

“இவர்களுக்கு வேறு வேலைகள் எதுவும் இல்லை. ஒவ்வொரு வரிடமும் பிச்சையெடுத்து

விழாச் செய்ய வேண்டுமா….? பண்டிதர் கடன்காரன் மாதிரி இரண்டு மூன்று நாட்களாக வீட்டுக்கு வந்தாராம். தெருக்களிலும் திண்ணைகளிலும் காண்போரிடம் என்னைப் பற்றி விசாரித்திருக்கிறார். இதில் இரண்டாயிரம் ரூபா இருக்கிறது. இதுக்குள் செலவைக் கட்டுப்படுத்திச் செய்யச் சொல்'' என்று கூறிவிட்டு இரண்டாயிரம் ரூபாவைக் கொடுத்து விட்டுச் சென்றார் சிவசுந்தரமூர்த்தி.

அதை நினைக்கத் துளசிக்கு அருவருப்பாக இருந்தது. அவள் சிவசுந்தரமூர்த்தி சொன்னதைச் சொன்னாள்; ‘‘அவன் அப்படித்தானம்மா. அவன்ரை இயல்பான குணத்தை மாற்றவே முடியாது. உலகத்தில் ஒருவரைப் போல இன்னொருவர் இருப்பதில்லை. அதை மனதில் கொள்ளாதை'' என்றார்.

அதை நினைத்து விட்டு இராசகோபாலைப் பார்த்தாள். மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு அவளுக்குத் தெரிந்தது.

‘‘என்ன துளசி?'' என்று கேட்டான் இராசகோபால்.

‘‘பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்ற பின்பு நான் வேலைகள் எதுவும் இல்லாமல் வீட்டில் இருக்கிறேன். ஏதாவது வேலைக்குச் செல்லலாமென நினைக்கிறேன்'' என்றாள்.

வேண்டாம் துளசி. உனது தகப்பனார் காலமாகி இன்னும் ஒரு மாதம் கூட முடியவில்லை.

அதற்குள் நீ வேலைக்குச் செல்வது சரியில்லை'' என்றான் இராசகோபால்.

''சரி. நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். அந்தியேட்டி முடிய உங்களது சேனையில் அல்லது தோப்பில் ஏதாவது ஒரு வேலை தாருங்கள்'' என்றாள் துளசி.

**1057.இகழ்ந்துஎள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்து உள்ளம்
உள்ளுள் உடைப்பது உடைத்து.**

அவமதித்துக் குற்றஞ் சொல்லாது பொருள் கொடுப்பவர்களைக் கண்டால் இரப்பவரின் உள்ளம் பெருமகிழ்வு கொள்ளும்.

## பொம்மை வாழ்வு

''பண்டிதர் கௌரவமாக வாழ்ந்தவர்; கற்றவர். அதனால் அவரை நாம் மதிக்க வேண்டும். அத்துடன் அவரிடம் நான் கற்றேன்.இறக்கும் வரை அவர் எனது பிள்ளைகளுக்கு கற்பித்தவர். அதனால் அவருக்கு உதவவேண்டிய கடமை எனக்கிருக்கிறது. அவர் உயிரோடு இருக்கும் வரை என்னிடமல்ல வேறு யாரிடமும் அவர் உதவியைப் பெற்றதில்லை. அவருக்குச் செய்யும் உதவியாக நினைத்துத் தான் நான் உனக்கு இவ் உதவியைச் செய்கிறேன்'' என்றான் இராசகோபால்.

''கால்களும் கைகளும் உறுதியாக உள்ளவரை உழைத்துச் சாப்பிட வேண்டும் என்று அப்பா சொல்வார்'' துளசி அப்படிச் சொல்லிக்

கொண்டிருக்கும் போது இராசகோபால் சொன்னான்; ‘‘பொருளைப் பிச்சையாகக் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வறியவர்கள் இல்லையென்றால், இவ்வுலகில் மக்களின் வாழ்க்கை, மரத்தினால் செய்யப்பட்ட பொம்மைகளைக் கயிற்றினால் இயக்குவது போலத்தான் இருக்கும். வறியவர்கள் இருந்தால் தான் செல்வர்கள் மதிக்கப்படுவார்கள்’’ என்று உங்களது தந்தையார் இலக்கியப் பேரவையில் பேசியதை நான் கேட்டுள்ளேன்’’ என்றான் இராசகோபால்

துளசி சிரித்தாள். பின்பு; ‘‘அன்னம் இட்டுண்’’ என்று பாடிய ஔவையார்; ‘‘ஏற்பது இகழ்ச்சி’’ என்றும் பாடியுள்ளார். இதற்கு என்ன கருத்து? என்று நான் அப்பாவைக் கேட்டேன். அவர் பல கருத்துக்களைக் கூறினார். அவர் கற்றவர். அவர் சொல்லும் சொற்களில் பல அர்த்தங்கள் இருக்கும். அப்பாவின் அந்தியேட்டி முடிய எனக்கு வேலை ஒன்று தாருங்கள்’’ என்றார் துளசி.

அப்போது பரமேஸ்வரனும் தணிகாசலமும் இரசாகோபாலின் வீட்டுக்கு வந்தனர். துளசியைக் கண்ட தணிகாசலம் கேட்டார்; ‘‘அப்பாவின் அந்தியேட்டிக்குச் சொல்ல வந்திருக்கிறாயா...? இராசகோபால்தானே அதைச் செய்கிறான். அவன்தான் எமக்குச் சொல்ல வேண்டும்’’ என்றார்தணிகாசலம்.

‘‘இல்லை... இல்லை நான் அந்தியேட்டிக்குச் சொல்லவரவில்லை’’ என்று தடுமாறினாள் துளசி.

“அவாவுக்கு வேலை வேண்டுமாம். அந்தியேட்டி முடியத் தனக்கு எனது தோப்பில் அல்லது சேனையில் ஒரு வேலை தரட்டாம்” என்றான் இராசகோபால்.

தணிகாசலம் துளசியைப் பார்த்தார். அவள் தலைகுனிந்தாள். அவள் பண்டிதர் உயிரோடு இருக்கும் காலத்தில் ‘வேலைக்குச் செல்லப் போகிறேன்’ என்று அடிக்கடி சொல்வாள். அதைப் பண்டிதர் விரும்பியதில்லை. ஒருநாள் தணிகாசலம் பண்டிதரோடு கதைத்துக் கொண்டு இருக்கும் போது துளசி வந்து தணிகாசலத்திடம் சொன்னாள்; “அண்ணை களவெடுப்பது பொய் சொல்வது தான் பாவம். நேர்மையான முறையில் உழைத்து உண்பதில் என்ன தவறு இருக்கிறது? வீட்டில் வறுமைதாண்டவமாடுகிறது. உழைத்தால் கொஞ்சமாவது குறையும். எனது மூத்த மகனுக்கு நல்ல சட்டை இல்லை. சத்தான உணவு கொடுக்க முடியவில்லை. நான் உழைத்தால் அவற்றைக் கவனிக்கலாம். ஆனால் அப்பா விடுகிறாரில்லை. நீங்கள் சொல்லுங்கோ” என்றாள்.

தணிகாசலத்திற்குத் தர்மசடங்கமாக இருந்தது. அவர் ஒருபோதும் தனது மனைவியைத் தோட்ட வேலைகள் செய்ய அனுமதிப்பதில்லை. பெண்கள் மெதுமையான வர்கள். அவர்களை வைத்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஆண்களுக்குரியது.” என்று நினைப்பவர். அதனால்; “அப்பாவுக்கு விருப்பமில்லாதவற்றை நீ செய்யக் கூடாது” என்று மட்டும் சொன்னார்.

“பெண்கள் வேலை செய்யக் கூடாது என்று கீழைத்தேச மக்கள் விரும்புகிறார்கள். அது எவ்வளவு மடைமை என்று தெரியுமா…? பெண்கள் வேலை செய்யும் நாடுகள் தான் இன்று முன்னேறியுள்ளன. அதனால் நீ வேலைக்குப் போ துளசி. எத்தனை நாட்களுக்கு உனக்குப் பிறர் உதவப் போகிறார்கள்” என்றார் பரமேஸ்வரன்.

“பெண்கள் வேலைக்குச் செல்வதில் தப்பில்லை. எமது கிராமத்தில் கூடப் பல பெண்கள் வேலைகளுக்குச் செல்கிறார்கள். பாடசாலைகளில் ஆசிரியர்களாக உள்ளனர். வைத்தியசாலைகளில் தாதிகளாக உள்ளனர். அது பெண்களுக்குரிய வேலைகள். துளசி படிக்கவில்லை. தகப்பனுடன் வாழும் காலத்தில் நன்றாகப் படித்திருக்கலாம். ஆனால் அவள் படிக்கவில்லை. அவளால் கூலி வேலை செய்ய முடியாது. பொருள்களைப் பிச்சையாகக் கேட்டுப் பெற்றுக் கொள்பவர்கள் இல்லையென்றால் உலக நடைமுறை மரத்தினால் செய்த பொம்மையைக் கயிற்றினால் இயக்குவது போன்றதாகும். அதனால் விதவைகள் ஏழைகள் நோயாளிகள், பலவீனர்கள், அங்கவீனர்களுக்கு உதவ வேண்டும். அப்படி உதவுவதனால் இன்பமும் மகிழ்ச்சியும் கிடைக்கும்” என்றார் தணிகாசலம். அவர் சொன்னதைப் பரமேஸ்வரனின் மனம் ஒப்புக் கொள்ள மறுத்தது.

**1058. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்**
**மரப்பாவை சென்றுவந் தற்று.**

இரப்பவர்கள் எவரும் இல்லையானால், இப்பெரிய உலகின் இயக்கம் மரத்தால்

செய்யப்பட்ட பாவையை கயிற்றால் இயக்குவது போன்றதாகும்.

## புகழ் இல்லாது போய் விடும்

“நீங்கள் எதைச் சொன்னாலும் அதை நான் ஏற்கமாட்டன். வேலை செய்ய முடியாதவர்களைத் தவிர மற்றவர்கள் வேலை செய்ய வேண்டும். தவறான வழியில் பொருளைத் தேடாது நல்ல வழியில் பொருளைத் தேடலாம். அதற்காகக் கூலி வேலை செய்யக் கூடாதென்றில்லை. அங்கவீனர்களும் நோயாளர்களும் தான் இரக்கலாம். மற்றவர்கள் பெண்ணாக இருந்தாலும் இரக்கக் கூடாது. இரக்கச் செல்லும் பெண்களைச் சிலர் தமது இச்சையைத் தீர்க்கவும் பயன்படுத்துவர். சில பெண்கள் பின் அதைத் தொழிலாகவே கொண்டு விடுவார்கள். அதனால் பெண்கள் கூலி வேலை செய்வதில் தவறில்லை” என்றார் பரமேஸ்வரன்.

“இதில் நாம் வீணாக முரண்பட வேண்டுமா? நீங்கள் சரியென்று நினைப்பதைச் சரியென்றே நினையுங்கள். நான் நினைப்பதை நான் சரியென்று நினைக்கிறேன்” என்றார் தணிகாசலம்.

பரமேஸ்வரனுக்குத் தணிகாசலம் சொன்னது பிடிக்கவில்லை; “ஒரு செயலைச் சரியென்றால் சரி என்று ஏற்றுக் கொள்ளல் வேண்டும். அதைப் பிழையென்றாலும் ஒத்துக் கொள்ளல் வேண்டும். அதை விட்டு விட்டு சமாளிக்கக் கூடாது” என்று

நினைப்பவர் அவர். அதைப் புரிந்து கொண்டார் தணிகாசலம்.

“மச்சான் நமக்குள் ஏன் முரண்பாடு? உங்களது வாழ்க்கைக்கும் எனது வாழ்க்கைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. கிராமத்தவர்கள் பெண்களை உயர்வாக மதிப்பவர்கள். என்னை எடுத்துப் பாருங்கள். நான் ஒரு நாளாவது பாக்கியலட்சுமியை தோட்டத்திற்கு அழைத்துச் சென்றேனா….? நான் கஷ்டப்பட்ட காலத்தில் அவள் எனது கஷ்டத்தை உணர்ந்து தோட்டங்களில் கூலி வேலைகள் செய்யப் புறப்பட்டாள். நான் அவளை விடவில்லை. ஏனென்றால் காலையிலிருந்து மாலைவரை அவளை எரிக்கும் வெயிலில் விட எனது மனம் விரும்பவில்லை. ஒருபெண்ணைத் திருமணம் செய்பவன், அவளை வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்ற கொள்கையை உடையவன் நான்” என்றார் தணிகாசலம்.

ஒருநாள் பாக்கியலட்சுமி கூறிய வார்த்தைகள் பரமேஸ்வரனின் காதில் ஒலித்தன; “அவர் ஒரு வித்தியாசமான மனிதர். அபூர்வமான பல குணங்களையுடையவர். அவருக்குக் கோபமே வராது. அத்துடன் யார் எதைக் கேட்டாலும் அதைக் கொடுக்காது விடமாட்டார். என்மீதும் பிள்ளைகள் மீதும் அளவில்லாத பற்றும் பாசமும் கொண்டவர். அவர் ஒரு விவசாயியாக இருந்த போதும் வயல் வேலைகள் எதையும் செய்ய என்னை அனுமதிப்பதில்லை. அவர் ஆசைகள் இல்லாதவர்; பற்றில்லாதவர்; அவா இல்லாதவர்; அடுத்தவரைக் குறை சொல்லாதவர்; அடுத்தவர்களின்

பொருட்களில் ஆசைப்படாதவர்; பொறாமைப்படாதவர்; பிற பெண்களைச் சகோதரிகளாக நினைப்பவர்''

பரமேஸ்வரன் தணிகாசலத்தைப் பார்த்தார். தணிகாசலம் சிரித்தார்; ''மனிதன் புகழுடன் வாழவேண்டும். புகழ் பல வழிகளில் வரும். கற்பதால் வரும்; சேவை செய்வதால் வரும்; புதியவற்றைக் கண்டு பிடிப்பதால் வரும்; அதைவிட ஏழை எளியவர்களுக்குப் பிச்சையிடுவதாலும் வரும். பசி என்பது அக்கினியை விட மோசமானது. அது வயிற்றை எரிக்கத் தொடங்கினால் பெரும் துன்பத்தைக் கொடுக்கும். மக்கள் எல்லோரும் பணக்காரர்களாக இருக்க முடியாது. கூலித் தொழில் செய்பவன் முயற்சியால் பெரும் தனவந்தனாகலாம். தனவந்தனின் மகன் கூலித் தொழிலாளியாகலாம். இதெல்லாம் அவரவரின் திறமையைப் பொறுத்தது. உலகில் வாழ்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகள். அவர்களுக்கு உதவி செய்பவன் இறைவனுக்கு உதவி செய்பவனாகக் கருதப்படுவான். 'ஒருபிடி சோற்றைப் பசியால் வாடும் ஒருவனுக்கிட்டால் அது இறைவனது வயிற்றை நிரப்பும்' என்று சைவ சமயம் கூறுகிறது. திக்கற்றவர்கள், ஏழைகள், நோயாளிகள், விதவைகள் அங்கவீனர்கள் ஆகியோருக்குக் கொடுப்பதே சைவ சமயி ஒருவனின் வாழ்க்கைத் தத்துவமாகும். இல்வாழ்வான் என்பவன் உலகில் உள்ள உயிர்களுக்கும் கொடுப்பதோடு நில்லாது கடவுளுக்கும் தேவர்களுக்கும் பிதிர்களுக்கும் கொடுத்தல் வேண்டும். இப்படிக் கொடுப்பதால் வரும் புகழ் அழியாது. பொருளைப் பிச்சையாகக்

கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வறியவர்கள் இல்லையென்றால் கொடுப்பவர்களுக்கு அதனால் உண்டாகும் புகழ் இல்லாமற் போய்விடும்'' என்றார் தணிகாசலம்.

"எப்பொழுதும் நீ கொடுக்கக் கூடியவனாகவே வாழ வேண்டும். உன்னிடமுள்ள அத்தனையையும் கொடுக்க நீ சித்தமாக இருத்தல் வேண்டும். உன்னிடம் உள்ளதைக் கொடுத்தாயானால் உனக்குத் தேவையானவை அனைத்தும் உன்னை வந்தடையும். பொருளைக் கொடுத்தால் தான் புகழும் புண்ணியமும் வரும் என்றில்லை. உன்னுள்ளத்தில் விழையும் அன்பைக் கொடு; உதவியைக் கொடு; ஆதரவைக் கொடு'' சுவாமியார் நிகழ்த்திய அருளுரை பரமேஸ்வரனின் காதில் ஒலித்தது.

**1059. ஈவார்கண் என்உண்டாம் தோற்றம் இரந்துகோள்**
**மேவார் இலாஅக் கடை?**

பொருள் இல்லாமையால் இரந்து அதைப் பெற்றுக் கொள்வோர் இல்லாது விட்டால், பொருள் கொடுத்துப் புகழ்பெறுவோரும் இல்லாது போவர்.

சான்றாக உள்ளது.

"நீ போ துளசி. அவர்கள் வேலை இல்லாவிட்டால் கூடியிருந்து கதைப்பார்கள். உனக்கு வீட்டில் ஆயிரம் வேலைகள் இருக்கு'' என்றாள் வள்ளியம்மை.'

“பரமேஸ்வரனின் கதையைக் கேட்டால் கோபம் வருகிறது. பெண்கள் இரக்கக் கூடாதாம். இரக்குமிடங்களில் அவர்கள் தமது கற்பை இழப்பார்கள்” என்கிறார். அதை என்னால் சகிக்க முடியவில்லை” என்றான் இராசகோபால்

“மனிதர்களுக்குக் கோபமே வரக்கூடாது. கோபம் எல்லா நன்மைகளையும் கெடுத்து விடும். ஏழைகளுக்குக் கோபமே வரக்கூடாது. ஏனென்றால் அவனை வருத்தும் வறுமையே அவனுக்கு அதை உணர்த்தும் சான்றாக விளங்கும். எனக்கு ஒரு சித்தப்பா இருந்தார். அவரின் மனைவி என்மீது இரக்கப்பட்டு ஏதாவது தருவார். அது அவருக்குப் பிடிப்பதில்லை. அதனால் இவரைக் காணுமிடங்களில் கண்டபடி பேசுவார். சில சமயம் அடித்தும் விடுவார். அதனால் இவருக்குச் சில சமயங்களில் அளவுக்கதிகமான கோபம் வந்துவிடும். அதனால் அவருடன் சண்டைக்குப் போய்விடுவார். அதனால் சித்தி எமக்கு எந்தப் பொருட்களையும் தரமாட்டா. அதைவிட இவரின் தகப்பனார் இவர் வேலை செய்யாமல் இருக்கும் போது ஏசுவார். அதுவும் இவருக்குக் கோபத்தை வரவழைக்கும். அதனால் நான் அவரின் வீட்டில் சமையல் செய்துவிட்டு வரும் போது எதையும் எடுத்து வரவிடமாட்டார். என்னைச் சாப்பிட்டு விட்டுப் போகும்படி சொல்வார். பிள்ளைகளைத் தனது வீட்டிற்கு வந்து சாப்பிடும் படி கூறுவார். அதனால் இவர் பல நாட்கள் பட்டினி கிடந்தவர். அதனால் இரப்பவர்கள் கோபங் கொள்ளக் கூடாது. பரமேஸ்வரன் மிகவும் நல்லவர். அவர் பண்டிதருடன் பழகாவிட்டாலும் அவரின் புகழைக் கேட்டு அவரின்

மீது அன்பு வைத்தவர். அதனால் உனது பெண்பிள்ளையின் பெயரில் ஒரு தொகைப் பணத்தை வங்கியில் நிரந்தர வைப்பிலிடப் போவதாகச் சொன்னவர்'' என்றாள் வள்ளியம்மை.

துளசி எதுவும் பேசவில்லை. சிறிது நேரத்தின் பின் சொன்னாள்; ‘‘பரமேஸ்வரன் ஐயா சொல்வதும் சரிதான். பெண்கள் தீய வழியில் சம்பாதிக்காது தமது உடலை வருத்திச் சம்பாதிப்பதில் எந்தத் தவறும் இல்லை'' என்றவர். அதைத்தான் நானும் விரும்புகிறேன். அதனால் அந்தியேட்டி முடிவடைந்ததும் ஏதாவது ஒருவேலையை எனக்குக் கொடுக்கச் சொல். அது பணம் சம்பாதிப்பதற்காக அல்ல. எனக்கு நேரம் போவதற்காக.'' என்றாள் துளசி.

‘‘சரிசரி நீபோ, பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்'' என்றாள் வள்ளியம்மை.

‘‘எந்த வேலையையும் குறைவாக நாம் கருதக்கூடாது. அப்பா படி படி என்று வற்புறுத்திக் கூறிய போதெல்லாம் நான் அதைக் கவனத்தில் கொள்ளவில்லை.. படித்திருந்தால் இன்று எனது நிலை மாறி இருந்திருக்கும். அப்பாவிடம் படித்த பலர் பெரும்பெரும் உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அப்பாவின் பிள்ளைகள் தான் படிக்கவில்லை...'' விம்மினாள் துளசி.

‘‘யார் கூலி வேலைகளைக் குறைவாக நினைத்தது. கூலி வேலை செய்பவனை ஏன் குறைவாகக் கருதல் வேண்டும்? கூலி வேலை செய்பவன் என்ன தாழ்ந்தவனா...? உலகில் உள்ள

பலர் கூலிக்குத் தானே வேலை செய்கிறார்கள். ஒருவன் எந்த வேலை செய்கிறான் என்பதை விட, அவன் எப்படி வாழ்கிறான் என்றுதான் பெரியவர்கள் அவதானிப்பார்கள். ஒருவன் தன்னுடைய நல்ல நடத்தை மூலம் தன்னைத் தூய்மைப்படுத்த வேண்டும்'' என்றாள் வள்ளியம்மை.

வள்ளியம்மையிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்த துளசியின் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. அவளின் காதுகளில் சுவாமியாரின் அருளுரை ஒலித்தது.

``நீ உன்னையும் உனது மனதையும் வலிமையுள்ளதாக மாற்றினால், உனது தேவைகளை நீயே பூர்த்தி செய்வாய். எதற்கும் மற்றவர்களை எதிர்பார்ப்பது நல்லதல்ல. பெற்றோர்கள் தம்பிள்ளைகளை வலிமையுள்ளவர்களாக வளர்த்தல் வேண்டும். பலவீனமான எவற்றையும் அவர்களுடன் விளையாட்டுக்குக் கூடக் கதைக்கக்கூடாது. அப்போதுதான் அவர்கள் தமது செயற்பாடுகளுக்கு மற்றவர்களை எதிர்பார்க்க மாட்டார்கள். எந்தச் செயலையும் செய்து முடிப்பேன் என்ற மனவலிமை உள்ளவன்தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான். அவன் தான் வாழ்க்கையை மகிழ்வுடையதாக்கித் தானும் அனுபவித்து மற்றவர்களையும் அனுபவிக்கப் பண்ணுகிறான்''

``அந்தியேட்டி முடிந்ததும் நான் வேலைக்குச் செல்ல வேண்டும். யார் தடுத்தாலும் நிற்கக் கூடாது'' என்று நினைத்தாள் துளசி.

**1060. இரப்பான் வெகுளாமை வேண்டும்; நிரப்புஇடும்பை தானேயும் சாலும் கரி.**

இரப்பவன் எவரிடத்திலும் கோபம் கொள்ளாதிருத்தல் வேண்டும்; அவன் அடைந்துள்ள வறுமைத் துன்பமே அவனுக்கு அறிவு புகட்டும் சான்றாக உள்ளது.

## கோடி மடங்கு நன்று

ஒருநாள் பண்டிதரிடம் கற்று வழக்கறிஞராகப் பணிபுரியும் அர்ச்சுனன் என்பவன் பண்டிதரைத் தேடி வந்தான்.

“வாத்தியார், உங்களை என்னால் மறக்க முடியாது. கடமை உணர்வுடன் நீங்கள் ஒருவர்தான் எமது ஊரில் கற்பித்தனீங்கள். இருபத்து நான்கு மணி நேரமும் பாடசாலையின் நினைவைத் தவிர வேறு எந்த நினைவும்உங்கள் மனதில் இருந்ததில்லை. நான் கற்கும் போது பல்வேறுவிதமான குழப்படிகள் செய்வேன். ஒருநாள் நான் பாடசாலைக்கு வராமல் சினிமாப்படம் பார்ப்பதற்காக எனது நண்பர்களுடன் சென்று விட்டேன். அன்று அதிபராக இருந்த நவரட்ணராஜா அவர்கள் சினிமாக் கொட்டகைக்கு வந்து எம்மைக் கையுங் களவுமாகப் பிடித்துவிட்டார். அந்த நேரம் நாம் மதுவும் அருந்தியிருந்தோம். நவரட்ணராசா அதிபர் மிகவும் கண்டிப்பானவர். அவர் எமது பெற்றோருக்கு அதை அறிவிக்க விரும்பினார். ஆனால் நீங்கள் விடவில்லை. அன்று நீங்கள் அதிபருக்குக் கூறிய வார்த்தைகள் இன்னும் எனது மனதில் உள்ளன”

“ஐயா, மாணவர்கள் செய்தது மகா பிழை என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அதை நீங்கள் தயவு செய்து அவர்களின் பெற்றோருக்கு அறியச் செய்ய வேண்டாம். அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. நான் செய்யும் தீய செயல்கள் பெற்றோருக்குத் தெரிந்து விட்டன. இனிப் பயப்படத் தேவையில்லை என்ற நினைவு மாணவர்களுக்கு வரும். அதனால் தொடர்ந்து தீய செயல்களைப் பயமின்றிச் செய்வார்கள். அதைவிடப் பெற்றோர் இவர்களை எவ்வளவு கரிசனையுடனும் நம்பிக்கையுடனும் வளர்க்கிறார்கள். அவர்கள் இதை அறிந்தால் மனம் வருந்துவதோடு பிள்ளை களைத் தவறாகவும் நினைப்பார்கள். அப்படியானதொரு நிலையை உண்டாக்காதீர்கள். தயவு செய்து இந்த மாணவர்களை எனது பொறுப்பில் விடுங்கள். அதன்பின் தவறு செய்தால் பெற்றோருக்கு அறிவியுங்கள்” என்றீர்கள். அதன்படி அதிபர் எம்மை உங்களின் பொறுப்பில் விட்டுவிட்டார்”

“அதற்கு இப்போ என்ன?” என்று கேட்டார் பண்டிதர்.

“உங்களால் தான் நாம் திருந்தினோம். நீங்கள் அன்று அன்பாக எம்மை அரவணைத்து ஆறுதல் வார்த்தைகள் கூறினீர்கள்; “பிள்ளைகளே மனிதர்கள் செய்யக் கூடாத மிகப் பெருந்தவறை நீங்கள் செய்துள்ளீர்கள். மதுபானம் அருந்துவது மகா பாவம். அந்தப் பாவமான செயலை மாணவர்கள் ஒருபோதும் செய்ய்க கூடாது. தயவு செய்து இனிமேல் மதுபானம் அருந்தாதீர்கள்.

நீங்கள் உங்களைப் பலவீனர்கள் என்று ஒருபோதும் நினைக்கக் கூடாது. நீங்கள் வீரர்கள்; எதிர்காலத்தின் சிற்பிகள். அதனால் தைரியத்துடனும் வலிமையுடனும் தீர்மானங்களை எடுங்கள். இன்றுமுதல் நாங்கள் குடிக்கமாட்டோமென்றும் பாடசாலையின் ஒழுங்குமுறைகளை மீறமாட்டோமென்றும் சத்தியஞ் செய்யுங்கள். உங்களுக்குத் தேவையான மனத்திடமும் தைரியமும் உங்களின் மனதில் இருக்கிறது. அதை வெளிக் கொண்டு வாருங்கள்'' என்றீர்கள். அதனால் தான் நான் இன்று நாட்டில் பிரபல சட்டத்தரணியாக இருக்கிறேன். தயவு செய்து இந்தப் பணத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான். அதைப் பண்டிதர் ஏற்கவில்லை.

அதனால் கோபமடைந்த துளசி தகப்பனிடம் சென்று நியாயம் கேட்டாள்.

``மகளே, யாரோ ஒருவன் தருகிறான் என்பதற்காக நாம் அவனிடம் கைநீட்டி எம்மைக் களங்கப்படுத்திக் கொள்ளலாகாது. நீதியான முறையில் உழைத்துப் பெற்ற பணம் என்பதை அறிந்த பின்புதான் நாம் அதைப் பிச்சையாகத்தன்னும் ஏற்றல் வேண்டும். பலர் தாம் தீயவழியில் தேடிய சொத்துக்களை தான தர்மஞ் செய்து புண்ணியமும் புகழும் சேர்க்கப்பார்க்கிறார்கள். அர்ச்சுனன் சட்டத்தரணி. அவனது தந்தையும் சட்டத்தரணி. இருவரும் தீய செயல்களைச் செய்வதில் வல்லவர்கள். கள்ள உறுதி முடித்தல்; பொய் வழக்குப் பேசுதல்; திருகுதாளங்கள் செய்தல் போன்றவற்றில் வல்லவர்கள். அவர்கள் உண்மையைப்

பொய்யாக்குவார்கள்; பொய்யை உண்மை யாக்குவார்கள். எனக்குத் தெரிந்தவரை அம்மன் கோயில் வழக்கில் குருக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. பாடசாலைக் காணி விஷயத்திலும் பல திருகுதாளங்களைத் தகப்பனும் மகனும் செய்துள்ளனர். அப்படிப் பாவம் செய்பவர்களின் பணத்தை வாங்கி நான் பாவத்தைச் சேர்க்க விரும்பவில்லை. பிச்சை எடுப்பவர்களுக்கு இருப்பதை ஒளிக்காமல் கொடுக்கும் கண்ணுக்கொப்பானவர்களிடத்திலும் கூட கேட்காமல் இருப்பது கோடி மடங்கு சிறப்புடையது'' என்ற வார்த்தைகள் துளசியின் காதில் ஒலித்தனர். ``அந்தியேட்டி முடிய வேலைக்குச் செல்ல வேண்டும்'' என்று முடிவெடுத்தாள் துளசி.

---

**1061. கவராது உவந்துஈயும் கண்ணன்னார் கண்ணும்**
**இரவாமை கோடி யுறும்.**

---

உள்ளதை ஒளிக்காமல் மனமகிழ்வுடன் கொடுக்கும் கண்களைப் போலச் சிறந்த பண்புடையவர்களிடத்திலும் சென்று இரவாமல் இருப்பது கோடி மடங்கு நல்லதாகும்.

## அலைந்து திரியட்டும்

அன்று அப்படித் தனது தந்தை கூறியதும் கொதித்தெழுந்து தான் கூறிய வார்த்தைகள் அவளின் மனதில் வலம் வந்தன.

‘‘நீதி, நியாயம், தர்மம் இதெல்லாம் பார்க்கும் உங்களுக்குத்தான் வருடம் பூராகவும் கஷ்டம், கவலை, துன்பம் பிரச்சினைகள் யாவும் வருகின்றன. நீங்கள் கூறியது போலக் கள்ள உறுதி எழுதியும் திருகுதாளங்கள் செய்தும் நீதிக்குப் புறம்பாகவும் நடந்தும் கொள்கின்ற அர்ச்சுனனும் தந்தையும் தான் இன்று இந்த நாட்டில் பிரபல்யமானவர்கள். அவர்களில்லாமல் எந்த நிகழ்ச்சிகளும் நடப்பதில்லை. எவ்வளவு சொத்தைக் கள்ள வழியில் சேகரித்து வைத்துள்ளார்கள். ஊரில் பத்து ரூபாப் பொருளைத் திருடியவனைக் கள்ளன் என்கிறார்கள். அர்ச்சுனனனும் தகப்பனும் கள்ள உறுதிகள் எழுதியும் நேர்மைக்குப் பிறம்பான காரியங்கள் பலவற்றைச் செய்த போதும் மக்கள் அவர்களைத் தானே மதிக்கிறார்கள். அவர்கள் சந்தோமாகத்தானே வாழ்கிறார்கள்’’

பண்டிதர் சிரித்தார்; ‘‘மகளே, நீ வயதில் குறைந்தவள்; அனுபவம் இல்லாதவள். அதனால் தான் இப்படிப் பேசுகிறாய். மாடி வீட்டு வாழ்க்கையும், சொகுசான வண்டிப் பிரயாணங்களும், மாலைகளும் வரவேற்புகளும் தான் உண்மையான வாழ்க்கையென நீ நினைக்கிறாய். மாடி வீட்டுக்குள் எத்தனை பேர் மகிழ்வுடன் வாழ்கிறார்கள் என்று உனக்குத் தெரியாது. அன்பில்லாத குடும்ப வாழ்க்கை நரக வாழ்க்கை. கர்மயோக விதிப்படி ஒருவன் செய்த ஒரு செயல் அது தனக்குரிய பயனைக் கொடுக்கும் வரும்வரை உயிருடன் இருக்கும். வலிமையுள்ள போது நோயில்லாமல் இருக்கும் மனிதர்களைப் போல நல்ல காலமிருக்கும் போது அவனுக்குத்

துன்பங்கள் வராது. அவனுக்குக் கெட்ட காலம் வரும் போது எல்லாம் சேர்ந்து ஒன்றாகத் தாக்கும். அதை இறைவனால் கூடத் தடுத்து நிறுத்த முடியாது. இதனால்தான் கோயிலுக்குத் தினமும் செல்வோரும், விரதம் அனுட்டிப்போரும் தமக்குக் கடவுள் அருள் புரியவில்லை என்று புலம்புகின்றனர். கூலிக்காரனான தணிகாசலத்தின் பிள்ளைகள் நல்ல முறையில் வாழ்கிறாாகள். அதிபராக இருந்த கனகனின் பிள்ளைகள் குடித்துக் கொண்டு திரிகிறார்கள். அவனது குடும்பத்தைப் பார். பிள்ளைகள் உருப்படியாகவா இருக்கின்றன…? சட்டத்தரணி அர்ச்சுனனின் குடும்பத்தைப்பார். அவனது சகோதரர்கள் நல்லபடி வாழவில்லை. அவர்களது பிள்ளைகள் வலது குறைந்தவர்களாகவும் பித்துப் பிடித்தவர்களாகவும் இருக்கிறார்கள். அந்தக் குடும்பத்திற்கு எவ்வளவு துன்பம். ஒரு மனிதன் சொல்லாலும் செயலாலும் தூய்மை யுடையவனாக இருந்தாலன்றி அவனால் மகிழ்ச்சியாக வாழ முடியாது. குடும்பமும் உருப்படாது''

''இது கைகாலாகாதவரின் பேச்சு. ஒருவன் எப்படிச் சம்பாதிக்கிறான் என்று நீங்கள் ஏன் ஆராய்ச்சி செய்கிறீர்கள்? ''நாய் விற்ற காசு குரைக்குமா..?'' என்றொரு முதுமொழியுண்டு. நீங்கள் சொல்வீர்கள் கங்கையாறு அழுக்குகளைச் சுமந்து கொண்டு வந்தாலும் அது புனிதநீர். சுவாமிக்கு அபிஷேகம் செய்யக் கூடிய புனிதத்தன்மை உள்ளது'' என்று. அதுபோல திருடன் திருடும் பணத்தையும் கோயில் உண்டியலில் போட்டால் அது திருப்பணி வேலைகளுக்கு உதவுகிறது தானே''

“மகளே, பணத்தை ஒருவன் நல்ல வழியில் சம்பாதிக்க முடியாது. அதற்காகத் தீய நடைமுறைகளைக் கைக்கொள்ளுதல் கூடாது. விபச்சாரம் செய்தால் அதிக பணம் சம்பாதிக்கலாம். குலமகள் அதைச் செய்யலாமா....?” என்று கேட்டார் பண்டிதர்.

அதைக் கேட்டதும் துளசிக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது; “நீங்கள் பண்டிதர். சபையில் அடுக்குமொழி பேசுவீர்கள்; தர்மத்தைப் போதிப்பீர்கள். இவையெல்லாம் வாழ்க்கைக்கு உதவுமா...? இப்பொழுது எனக்குப் பசிக்கிறது. உங்கள் உபதேசம் எனது வயிற்றுப் பசியைப் போக்குமா...?” பெருங்குரலெடுத்து அழுதாள்.

பண்டிதருக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. அதனால் அவர் தன்னை மறந்து உணர்ச்சிப் பிழம்பானார்.

“நீ எப்படியும் நட, விபச்சாரம் செய்யப் போகிறாயா...? செய். இனிமேல் நான் உனது விஷயங்களில் தலையிட மாட்டேன். பிச்சை எடுத்துத்தான் உயிர்வாழ வேண்டும் என்று சில உயிர்களை இறைவன் படைத்திருந்தால், அவர்களைப் படைத்த இறைவன் பிச்சை எடுப்பவர்களைப் போல உணவுக்கும் உடைக்கும் அலைந்து திரிந்து நாசமாகப் போகட்டும்” என்று சபித்தார். அவரின் இதயம் வேகமாக அடித்தது; வியர்த்துக் கொட்டியது; அதை அப்போது அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இப்போது

நினைத்தால் அவர் கூறியது சரியெனப்பட்டது; ‘‘அப்பா அறியாமையால் அப்படிக் கூறிவிட்டேன். என்னை மன்னியுங்கள்’’ என்று அழுதாள்.

---

**1062. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகுஇயற்றி யான்!.**

---

உலகத்தைப் படைத்தவன் இரந்து தான் உயிர்கள் வாழ வேண்டும். என்ற நிலையில் சில உயிர்களைப் படைத்திருந்தால், அப்படிப் படைத்தவன் இரப்பவர்களைப் போல எங்கும் அலைந்து திரிந்து கெட்டுப் போகட்டும்.

## பெருங்கொடுமை

அந்தியேட்டி முடிந்து விட்டது. அந்தியேட்டிக்குத் துளசி தனது சகோதரியான நிவேதிகாவுக்குச் சொல்லவில்லை. பலர் அவளுக்குச் சொல்லும்படி கூறிய போதும் துளசி கூறவில்லை. இராசகோபால் அதைப்பற்றி ஏதாவது கதைப்பான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவன் அவளது வீட்டுக்கு வந்தால் அவள் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்வான். அவளுக்கு ஏதாவது தேவைகள் இருக்கிறதா என்று கேட்பான். அதனால் அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. தனக்கு ஒரு சகோதரனின் ஸ்தானத்தில் இருந்து ஆறுதல் வார்த்தைகள் கூறவேண்டுமென்றும் ஆலோசனைகள் சொல்ல வேண்டுமென்றும் அவள் எதிர்பார்த்தாள். ஆனால் இரசாகோபால் ஓர் ஏழைக்குதவி செய்கிறோம் என்ற நிலையில் இருந்தானே தவிர அக்குடும்பத்தில் அக்கறை

உள்ள வனாக இருக்கவில்லை. அதை அவனது போக்கில் இருந்து உணர்ந்து கொண்டாள் அவள்.

அன்று இரவு கோவலன் துளசியின் மடியில் படுத்திருந்தான். பாடசாலையில் நடைபெற்ற சம்பவங்கள்; ஆசிரியர் வகுப்பில் கேட்ட கேள்விகள்; தான் சொன்ன பதில்கள் யாவற்றையும் கூறிய கோவலன் கேட்டான்; ‘‘இராசகோபால் மாமா இரவில் உங்கள் வீட்டுக்கு வருகிறவரா…?’’ என்று காமாட்சிப் பாட்டி கேட்டவா’’

‘‘நீ அங்கு போனனியா…?’’

‘‘இல்லை பாடசாலையால் வரும் போது அவா பூபாலசிங்கண்ணையின் கடையில் பொருட்கள் வாங்கிக் கொண்டு நின்றவா. பொருட்கள் அதிகமென்றபடியால் சிலபொருட்களை என்னிடம் தந்து அவற்றை தனது வீட்டில் கொண்டு வந்து தரச்சொன்னார்வா. அதைக் கொண்டு சென்று கொடுத்த போது தான் கேட்டவா..’’

‘‘வேறு என்ன கேட்டவா…?’’

‘‘இராசகோபால் மாமா உன்னில் சரியான பாசம் வைத்துள்ளார். உனக்கு என்னென்ன வாங்கித் தந்தவர்?’’ என்றும் கேட்டவா. நான் ‘‘புத்தகங்களும் புதுச் சட்டையும் வாங்கித் தந்தவர்’’ என்று சொன்னனான்.’’

‘‘சரி… சரி நீபடு…’’ என்றாள் துளசி. பண்டிதர் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பு

கூறிய வார்த்தைகள் அவளின் நினைவுக்கு வந்தன; “துளசி, நான் நெடுநாள் வாழ மாட்டன். நான் தேடியது எதுவும் இல்லை. நீ நன்றாக வாழ வேண்டியவள். விதியின் பயனால் உனது வாழ்க்கை அழிந்து விட்டது. யாவும் எழுதிய எழுத்தின்படிதான் நடக்கும். பிச்சை தருவோரிடம் வாங்க எனக்கு விருப்பமில்லாமைக்குக் காரணம் பழி வரும். அப்பழியை நீக்க முடியாது. ஆரூரன் எனது மாணவன் என்ற வகையில் உதவி செய்வதாகக் கூறினான். ஆனால் உன்னை அவன் தனக்குத் திருமணம் செய்து தரும்படி கேட்டான். ஆனால் அவனது உள்நோக்கம் உன்னைத் திருமணம் செய்வது போலச் செய்து நிவேதிகாவையும் சேர்த்து வைத்திருப்பது. ஒருநாள் இருவரும் நெருக்கமாக இருப்பதைக் கண்டேன். தன்நலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்கள் மிகக் குறைந்தவர்களே உலகில் வாழ்கிறார்கள். இப்படியானவர்கள் எந்த நலனையும் எதிர்பார்க்க மாட்டார்கள். இவர்களிடமும் நாம் பிச்சை கேட்கக் கூடாது. வறுமையால் வரும் துன்பத்தைப் போக்கிக் கொள்ள ஒரே ஒரு வழி உழைப்புத்தான். இது கிராமம். இங்கு வேலைகள் எதுவும் இல்லை. கூலி வேலைதான் செய்யலாம். கூலி வேலைகளைச் செய்வதற்காவா’ நான் உன்னைப் பெற்றேன்…?” அழுதார் பண்டிதர். “உன்னைப் படிக்கச் சொல்லி எவ்வளவு தூரம் வற்புறுத்தினேன். நீ கேட்கவில்லை. இளமையில் காதல் கொண்டு படிப்பை அலட்சியம் செய்தாய். அதனால் தான் இத்தகைய துன்பங்கள் உன்னை வந்தடைந்து வாட்டுகின்றன. நீ அடிக்கடி என்னிடம் வருவோர் தரும் பிச்சையை நான் வாங்கவில்லை என்று குறைப்படுகிறாய். வறுமைத் துன்பத்தைப் போக்கிக்

கொள்வதற்குப் பிச்சை எடுப்பதுதான் ஒரே வழி என்றெண்ணி உழைப்பை மதிக்காமல் இருப்பதைப் போலக் கொடுமை வேறு எதுவும் இல்லை. அதனால் நான் இல்லாத காலம் உழைத்துச் சாப்பிடு. தணிகாசலத்திடம் சொல்லியிருக்கிறேன். அவர் எனக்காகப் பரமேஸ்வரனிடம் பரிந்து பேசி அவரது தொழிற்சாலையில் நல்லதொரு தொழிலைப் பெற்றுத் தருவார்.''

அதை நினைக்கத் துளசிக்கு அழுகை வந்தது; ஒருநாள் ஆரூரன் அவளைச் சந்தித்த போது சொன்னான்; ''இப்படி எத்தனை நாட்களுக்கு இருக்கப் போகிறாய். உனக்கு விருப்பமென்றால் நான் உன்னைத் திருமணம் செய்கிறேன்''

அவளால், தனது கணவனுக்குத் துரோகஞ் செய்ய முடியவில்லை. என்னை எவ்வளவு தீவிரமாக நேசித்தவர். மகாராணி மாதிரி என்னை வைத்திருந்தவர். அவர் இருந்தால் இந்த நிலை எனக்கு வருமா...?'' என்று எண்ணினாள் துளசி. பண்டிதரின் சகோதரி அன்று காலையில் வந்த போது சொன்னாள்; ''இராசகோபால் நல்லவன். அவன் உனக்கு எல்லாம் செய்வான்'' அதை அவள் என்ன அர்த்தத்தில் சொன்னாள் என்று இப்போதுதான் புரிந்து கொண்டாள் துளசி.

---

**1063. இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்**
**வன்மையின் வன்பாட்டது இல்.**

---

வறுமைத் துன்பத்தை இரப்பதன் மூலம் தான் தீர்க்க முடியும் எனக் கருதி முயற்சியைக் கைவிடுவதைப் போன்ற கொடுமை வேறு இல்லை.

# கொள்ளாத பெருமை

அவளுக்கு வேதனையாக இருந்தது. பண்டிதரின் மீது கொண்டுள்ள அபிமானத்தின் மிகுதியால் இராசகோபால் வீட்டுக்கு வந்து எமக்கு உதவி செய்கிறார். அதை அயலில் உள்ளவர்களும் இனத்தவர்களும் ஏன் தவறாக நினைக்கிறார்கள்? எல்லாம் பொறாமைதான். ''பொறாமை உள்ளவன் ஒருபோதும் ஒழுக்கமுள்ளவனாக இருக்க மாட்டான். அத்துடன் சுயநலமுஞ் சேர்ந்தால் அவன் சமூக விரோதச் செயல்களைத் துணிந்து செய்வான்''

''ஒழுக்கத்திற்காக எதையும் துறக்கலாம். ஆனால் எக்காரியத்திற்காகவும் நாம் குல கௌரவத்தைத் துறக்கக் கூடாது. ஆரூரன் எனது மாணவன். அவன் உன்னைத் திருமணம் செய்து தரும்படி கேட்ட போது நான் மறுத்துவிட்டேன். அதன்பின் அவன் எமக்கு உதவி செய்யப் பின் நின்றான். நான் யாரிடமும் உதவி பெறாமலே வாழ நினைத்தேன். அதற்கு எனது ஏழ்மை விடவில்லை. மனிதர்கள் உயர்ந்த இலட்சியங்களுடன் வாழவேண்டும். அப்படி உயர்ந்த இலட்சியங்களுடன் வாழ்பவன் தவறு செய்யமாட்டான்; உழைப்பையே நம்பியிருப்பான். இலட்சியமில்லாதவனின் உழைப்பின் பெரும்பகுதி வீணாக்கப்படுகிறது. அதனால் அவனுக்குப் பற்றாக் குறையும் பலவீனமும் ஏற்படுகிறது. அதைத் தீர்க்க அவன் ஒழுக்கமில்லாத வழிகளை நாடுகிறான். வாழ வழியில்லாத போதுங்கூட இரந்து வாழ

வேண்டுமென்ற எண்ணம் இல்லாத உயர்ந்த தன்மை, இந்த உலகத்தில் உள்ள இடங்கள் முழுவதையும் சேர்த்தாலும் கொள்ளாத அளவு பெருமை உடையது'' என்று தந்தை சொன்ன வார்த்தைகள் அவளது காதில் ஒலித்தன.

``அப்பா எல்லாவற்றையும் உணர்ந்தவர். அதனால்தான் அவரால் அப்படி வாழ முடிந்தது.'' என்று எண்ணியவாறு தூங்கிவிட்டாள்.

அவள் விழித்தபோது அதிகாலை நான்குமணி. காலை உணவைத் தயாரித்து விட்டு ஐந்தரை மணிக்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தாள். அந்த நேரம் தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் கோயிலைக் கூட்டிக் கொண்டு நிற்பார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

தனக்கெதிரே வந்து நின்ற துளசியை நிமிர்ந்து பார்த்தார் தணிகாசலம். அவளது கண்கள் கலங்கியிருந்தனர். பண்டிதரோடு வாழ்ந்த காலத்திலேயே அவர் அவளைப் பார்க்கும் போதெல்லாம் அளவு கடந்த துக்கத்துடன் தான் இருப்பாள். அவள் மகிழ்வுடன் இருந்தை அவர் கண்டதேயில்லை. அதனால் அதைப் பெரிதாக எடுக்காமல்; ``என்னம்மா...?'' என்றார்.

சில கணங்கள் அவள் பேசவில்லை. பின் சொன்னாள்; ``அப்பா தான் இறந்தபின்பு என்னைப் பிச்சை எடுத்து வாழக்கூடாதென்றவர். எனக்குப் பரமேஸ்வரனின் தொழிற்சாலையில் ஒரு வேலை பெற்றுக் கொடுக்கும்படி உங்களுக்குச்

சொன்னவராம். விரைவில் அதைப் பெற்றுத் தாருங்கள்'' என்றாள்.

''நான் பரமேஸ்வரனிடம் கதைத்துவிட்டேன். நீ எப்போது வேலைக்குச் செல்ல நினைக்கிறாயோ அப்போது செல்லலாம். நீ இராசகோபாலிடம் வேலை தரும்படி கேட்டதால் அதைப்பற்றி நான் உனக்குச் சொல்லவில்லை'' என்றார் தணிகாசலம்.

துளசி எதுவும் பேசாமல் சிலகணம் நின்றாள்; ''அப்பா இறந்தமையால், அளவுக்கதிகமான வேதனையால் அப்பா சொன்னதை மறந்து விட்டேன். இரவுதான் நினைவில் வந்தது. அதுதான் காலையில் எழுந்ததும் முதல் வேலையாக இங்கு வந்தேன்'' என்றாள் துளசி.

''பண்டிதர் மிகவும் நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் வாழ்ந்தவர். பிறரைப் பற்றி ஒரு போதும் குறை சொல்லாவர். தனக்குத் தீமைகள் செய்தவனுக்கும் நன்மைகள் செய்தவர். பண்டிதர் இறந்த பின்பு ஆரூரனின் விஷயத்தில் நீ நடந்து கொண்ட முறை சரி. ஒழுக்கமென்பது வெறும் வாய்ச்சொல் அல்ல; புறத்தூய்மையுமல்ல; புறத்தூய்மையுடன் அகத்தூய்மையையும் குறிக்கும். இராசகோபால் ஒழுக்கமானவன். அகத்தூய்மையும் கொண்டவன். இருந்தாலும் நீ அளவுக்கதிகமாக அவனிடம் கடன் படாதே'' என்றார் தணிகாசலம்.

''அதற்காகத்தான் இந்த விடியற்காலையில் உங்களைத் தேடி வந்தேன். நான் நாளை முதல் வேலைக்குச் செல்கிறேன். இனிமேல் நான்

யாரிடமும் உதவி பெற மாட்டேன். அப்பாவைப் போல வாழ்வேன்'' என்றாள் துளசி.

“நீ அப்படிச் சொல்லக்கூடாது. இராசகோபால் உனது பிள்ளைகளுக்குக் கல்வி சம்பந்தமான உதவிகள் செய்கிறான். நானும் வேலாயுதபிள்ளையும் உதவிகள் செய்வோம். உதவி செய்பவர்களின் மனம் நோகும்படியாக நடந்து கொள்வது தான் தவறு'' என்றார் தணிகாசலம்.

“உங்களை நான் எனது தந்தையாகவே நினைக்கிறேன் உங்களது விருப்பப்படி நடப்பேன்'' என்றாள் துளசி.

**1064. இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக் காலும் இரவுஒல்லாச் சால்பு.**

வாழ வழியில்லாத நிலை வந்த போதும் கூட இரந்து வாழ விரும்பாத உயர்ந்த பண்பு, இந்த உலகத்தில் உள்ள இடமெங்கும் கொள்ளாத பெருமை உடையதாகும்.

## இனிமையான சூழ்

துளசி வேலைக்குச் சென்று ஒருமாதம் கழிந்து விட்டது. அவளுக்கு வேலைக்குச் செல்வது மிகுந்த உற்சாகத்தை அளித்தது. காலையில் நேரத்துடன் எழுந்து காலைச் சமையலையும் பகல் சமையலையும் முடித்து விடுவாள். பின்

பிள்ளைகளுக்கு காலை உணவைக் கொடுத்துப் பாடசாலைக்கு அனுப்புவாள். பின்பு குளித்து விட்டு காலை உணவை உண்டு விட்டு மதிய உணவைக் கட்டிக் கொண்டு வேலைக்குச் செல்வாள். பாடசாலையில் மாணவர்கள் எல்லோருக்கும் மதிய உணவு கொடுக்கப்படும். அதைப் பிள்ளைகள் உண்பார்கள். மதிய உணவின் பின் பாடசாலை தொடங்கும். பாடசாலை விட்டதும் மேலதிக வகுப்புக்கள் பாடசாலையில் நடைபெறும். அவ்வகுப்புக்கள் முடிவடைய எப்படியும் நான்கு மணியாகும். நான்கு மணிக்குத் துளசி வேலை முடிந்து வீட்டுக்கு வந்து விடுவாள்.

அன்று தொழிற்சாலையில் சம்பளம் கொடுத்தார்கள். முதல்முதலாகப் பெருந்தொகைப் பணம் அவளது கையிற்கிடைத்தது. இது நாள் வரையில் அவளின் கையில் காசு பிழங்கியது குறைவு. ஏதாவது தேவையென்றால் தகப்பனிடம் கேட்பாள். அவள் கேட்டு நாலைந்து தினங்களின் பின் அவர் அவள் கேட்ட பொருட்களை வாங்கி வந்து கொடுப்பார். நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதிக்கு ஓர் அர்ச்சனை செய்ய அவளுக்கு வெகு நாட்களாக விருப்பம். அந்த விருப்பம் இதுவரை நிறைவேறவில்லை. அர்ச்சனைக்காகத் தேங்காய் பழம் பாக்கு கற்பூரம் போன்றவை வாங்கவும், குருக்களுக்குத் தட்சணையாக கொடுக்கவும் ஐம்பது ரூபாயாவது தேவை. அதற்கு அவள் எங்கே போவாள். அதனால் அவள் மகா கணபதிக்குக் கணவன் இறந்த பின்பு அர்ச்சனை செய்யவில்லை.

தனக்குக் கொடுத்த சம்பளத்தை மீண்டும் ஒருமுறை எண்ணிப் பார்த்தாள். பெருந்தொகையான

பணத்தைத் தொட அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது; ‘‘இன்று இரவு பிள்ளைகளையும் அழைத்துச் சென்று மகா கணபதிக்கு அர்ச்சனை செய்ய வேண்டுமென்று நினைத்தாள். தொழிற்சாலைக்கு வெளியே இருந்த பலசரக்குக் கடையில் பிள்ளைகளுக்குத் தீன்பண்டங்கள் வாங்கினாள். அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது; ‘‘உன்னால் எதையும் செய்ய முடியாதென்று நினைப்பதால் தான் நீ வறுமைக்குள்ளாகி யிருக்கிறாய். எதையும் என்னால் செய்ய முடியும் என்று தன்மீது அதீத நம்பிக்கை கொண்டவர்களின் வாழ்க்கை தான் உலக மக்களாற் போற்றப்படுகிறது. உன்னைவிட உயர்ந்தவர்கள் யாரும் இல்லை என்று நீ நினைத்தால், மற்றவர்களால் செய்ய முடியாத செயல்களையெல்லாம் நீ செய்து முடிப்பாய். அச்சம் கொள்ளாதே; பின்வாங்காதே; சோம்பியிராதே, உனது நல்வாழ்வு உனது கையில் தான் உள்ளதென்பதை நீ ஒருபோதும் மறக்கக் கூடாது. உனக்கு எந்நாளும் உதவுவதற்கு யாரும் இருக்க மாட்டார்கள். நீதான் மற்றவர்களுக்கு உதவுதல் வேண்டும்’’ சுவாமியாரின் அருளுரை அவளது காதில் ஒலித்தது.

ஒருநாள் கிருஷ்னன் பண்டிதரது வீட்டுக்கு வந்து தனது கஷ்டங்களைப் பற்றிச் சொல்லி அழுதான் அதற்குப் பண்டிதர் சொன்னார்; ‘‘மகனே, கஷ்டமில்லாதவர்கள் உலகில் இல்லை. மனிதனாகப் பிறந்த எல்லோரும் ஒவ்வொரு விதமான கஷ்டத்துக் குள்ளாகிறார்கள். உனக்குள்ள கஷ்டத்தை நீ எனக்குச் சொல்லி அழுகிறாய். உன்னை விட எனக்குக் கஷ்டமதிகம்.

அதை யாரிடஞ் சொல்வது. வாழ வழியில்லாத போதுங் கூடப் பிச்சை எடுப்பது தர்மமாகாது. தனது சொந்த உழைப்பால் கிடைத்தது தெளிந்த நீரைப்போன்ற கூழேயாயினும், அதை உண்பதை விட இனிமையானது இந்த உலகில் வேறொன்றுமில்லை. அதனால் திடகாத்திரமான நீ உழைத்து உண். பேடிகளைப் போல கஷ்டம் என்று ஏன் கலங்குகிறாய்? வறுமையை உழைப்பின் மூலம் தான் போக்க முடியும். எத்தனை நாட்களுக்கு உனக்கு உதவுவது. ஒழுங்காக அவயங்களையும் பலத்தையும் கடவுள் உன்னிடம் தந்துள்ளார். முயற்சியெடு, உனது வறுமை பறக்கும்'' என்று பண்டிதர் கிருஷ்னனுக்குக் கூறும் போது துளசி கேட்டுக் கொண்டிருந்தாள். உபதேசம் செயலாகாது; பசித்தவனுக்கு உணவும் ஆகாது'' என்று அன்று அவள் நினைத்தாள். ஆனால் இப்போது அதை நினைக்க வெட்கமாக இருந்தது; ``தன் சொந்த உழைப்பால் கிடைத்த தெளிந்த நீர் போன்ற கூழ் இனிமையானது தான்'' என்று நினைத்தாள்.

**1065. தெள்நீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது**
**உண்ணலின் ஊங்குஇனியது இல்.**

தனது முயற்சியால் சமைத்த தெளிந்த நீரைப் போன்ற கூழே ஆயினும், அதை உண்பதை விட இனிமையானது வேறொன்றுமில்லை.

இழிவான பிச்சை

அன்று இரவுப் பூசைக்கு துளசியும் கோவலனும் வந்தனர். துளசி கன்னிப் பெண்ணாக இருக்கும் காலத்தில் செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் மகா கணபதியின் ஆலயத்திற்கு வருவாள். அவள் வரும்போது வெள்ளறுகம் புல்லில் மகா கணபதிக்கு மாலை கட்டிக் கொண்டு வருவாள். திருமணமான பின்பு கணவனுடன் வருவாள். அவள் கொண்டு வரும் அர்ச்சனைத் தட்டில் ஏராளமான பொருட்கள் இருக்கும். கரும்பு, தேன், வாசனைத் திரவியங்கள், பட்டுத்துணி போன்றன பழம் பாக்கு வெற்றிலை தேங்காய் கற்பூரத்துடன் இருக்கும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவள் கொண்டுவரும் வெள்ளறுகம்புல் மாலையைக் குருக்கள் மகாகணபதிக்குச் சூடுவார்; பட்டை அணிவார்; மிகவும் விலையுயர்ந்த பட்டை அணிந்து வெள்ளறுகம்புல் மாலையைச் சூடி அமர்ந்திருக்கும் மகா கணபதியைக் குழந்தைப் பிள்ளையைப் போல அடிக்கடி பார்ப்பார். அப்படிப் பார்த்துப் பார்த்துக் குருக்கள் பரவசமடைவார்.

பல வருடங்களுக்குப் பின்பு துளசி வெள்ளறுகம்புல்லில் மாலை கட்டிக் கொண்டு வந்திருந்தாள். நல்லதொரு பட்டுத் துணியும் கொண்டு வந்திருந்தாள். குருக்கள் அதை வாங்கிச் சென்று மகா கணபதிக்குச் சூடினார். மகா கணபதி மாப்பிளையைப் போல மிகவும் அழகாக இருந்தார்.

அர்ச்சனை முடிந்ததும் குருக்கள் அர்ச்சனைத் தட்டைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சொன்னார்; “வெள்ளருகம்புல்லில் மாலையைக் கணபதிக்குச் சாத்துபவர்களுக்கு எந்தக் கஷ்டமும் வரமாட்டாதென்று

விநாயகபுராணம் கூறுகிறது. நீ அளவுக்கதிகமாகக் கஷ்டப்பட்டுவிட்டாய். இனி உனக்குக் கஷ்டம் வராது'' என்றார் குருக்கள்.

துளசி எதுவும் பேசாது சிரித்தாள்; ''குருக்கள் மக்களின் மனம் மகிழ்வதற்காக இப்படிச் சொல்வார்'' என்று நினைத்தவாறு திரும்பி நடந்தாள். குருக்கள் அவள் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றார். அவளை நினைக்க அவருக்குக் கவலையாக இருந்தது.

துளசி வெளியே வந்து அரச மரத்தடியைப் பார்த்தாள். சுவாமியார் அரச மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார். அவருக்கு அருகில் யாரும் இருக்கவில்லை. அவள் சுவாமியாரின் அருகிற் சென்று அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.

சுவாமியார் புன்னகைத்தார்; ''ஒரு மனிதனுக்கு வேண்டியது முயற்சிதான். முயற்சி செய்தால் மற்ற எல்லாச் செல்வங்களும் தானே வந்தடையும். முயற்சி இல்லாவிட்டால் முன்னோர் தேடிய சொத்துக்களும் பறிபோய் விடும். இயலாதது எதுவும் இல்லை. கடவுள் மீது நம்பிக்கையை வைத்து விட்டு முயற்சிப்பவன் வெற்றியடைவான். பண்டிதர் இலட்சியவெறியுடன் வாழ்ந்த உன்னதமான மனிதன். அவரை இந்தச் சமூகத்தால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதனால் தான் இவ்வளவு துன்பங்களும் வந்தன். நீ வலிமையுடன் வாழ்க்கையை எதிர்த்துப் போராடத் தொடங்கி விட்டாய். இனி உனக்குத் துன்பங்கள் உண்டாக வழியில்லை. ஒவ்வொருவரும் உன்னைப்

போலத் துணிந்து விட்டால் எந்தத் துன்பங்களும் நெருங்காது. உறுதியுடன் செயலாற்றுபவர்களுக்கு இறைவன் என்றும் உதவி புரிவான். மனந்தளராது வாழ்'' என்றார்.

துளசி வீட்டுக்கு வந்த போது இராசகோபால் அங்கிருந்தான்; ''இன்று சம்பள மெடுத்திருப்பாய். வலிமையானவர்கள் அஞ்சமாட்டார்க்ள. முன்பே உன்னை வேலை செய்யப் பண்டிதர் அனுமதித்திருக்கலாம். இரண்டு மூன்று நாட்களாக வரவில்லை அதனால் வந்தேன். நான் வரட்டா?'' என்று கேட்டான் இராசகோபால்.

''முதன்முதலாக இன்று சம்பளமெடுத்துள்ளேன். இருங்கள் தேநீர் குடித்துவிட்டுப் போகலாம்'' என்றாள் துளசி.

இராசகோபால் அவளின் சொல்லைக் கேட்டு இருந்தான். சிறிது நேரத்தில் துளசி இனிப்பும் தேநீரும் கொண்டு வந்து இராசகோபாலுக்குக் கொடுத்தாள்.

''வேலை செய்யாமல் இருந்தால் வீடு விடியாது. வீட்டுள் முதேவிதான் குடியிருப்பாள். நான் எனது சேனையில் அல்லது தோப்பில் வேலை தருவதாக இருந்தால் கூலி வேலைதான் தருவேன். பரமேஸ்வரன் ஐயா உனக்கு நல்ல வேலை தந்துள்ளார். கை நிறையச் சம்பளமும் தருவார்'' என்றான் இராசகோபால்.

''எல்லாம் காலம் அண்ணை. உயிர் உள்ளவரை வேலை செய்து வாழவேண்டும் என்று

அப்பா சொல்வார். பசுவிற்கு நீர்வேண்டும் என்று பிச்சை கேட்டாலும், ஒருவனது நாவிற்கு அவ்வாறு கேட்பதை விட இழிவானது வேறெதுவும் இல்லை'' என்றும் அப்பா சொல்வார். அப்போது அவர் கூறியது எனக்கு கோபத்தை உண்டாக்கியது. இப்பொழுது தான் அதன் அர்த்தம் தெரிகிறது'' என்றாள் துளசி.

**1066. ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு**
**இரவின் இளிவந்தது இல்.**

பசுவிற்கு நீர் வேண்டும் என்று இரந்து கேட்டாலும் அந்த இரத்தல் நாவிற்கு மிகவும் இழிவானது ஆகும்.

## பிச்சை கேட்கத் தகாதவர்

இராசகோபால் சென்றுவிட்டான். துளசி பிள்ளைகளுக்குச் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டுத் தானும் உண்டாள்.

பிள்ளைகள் படுத்தவுடன் உறங்கி விட்டனர். துளசிக்கு நித்திரை வர மறுத்தது. காதலித்து மணம் புரிந்த கணவனுடன் அவள் ஐந்து வருடங்கள் மட்டும் தான் வாழ்ந்தாள். அந்த ஐந்து வருட வாழ்க்கை ஐம்பது வருட வாழ்க்கைக்குச் சமமானது. அவன் அவளைத் தேவதையாக நினைத்தான். அவளுக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் வாங்கிக் கொடுத்தான். அவன் வாங்கிக்கொடுத்த நகைகளையெல்லாம் அவள் விற்று விட்டார். அவளுக்காக அவன் வாங்கிக்

கொடுத்த விதம் விதமான விலை உயர்ந்த சேலைகள் சிலவற்றை அவள் பெட்டியில் பௌத்திரமாக வைத்திருந்தாள். சிலவற்றை அவள் தனது சகோதரிகளுக்குக் கொடுத்து விட்டாா். நித்திரை வராததால் பாயில் உருண்டு கொண்டிருந்த அவளுக்குத் திடீரென்று அச்சேலைகளில் ஒன்றை உடுத்த வேண்டும் என்ற நினைவு வந்தது. பாயால் எழுந்து சென்று பெட்டியைத் திறந்தாள். பல சேலைகள் பெட்டிக்குள் கிடந்தன. அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சரித்திரம் உண்டு. மேலே இருந்த பச்சைப் பட்டுச் சேலையை எடுத்தாள். அச்சேலை கலியாணமான பின் வந்த அவளது பிறந்த தினத்திற்கு அவன் வாங்கிக் கொடுத்தது. கண்கள் கலங்க அச்சேலையைத் தன் மார்போடு அணைத்தாள். அவளது காதுக்குள் அவன் கிசுகிசுத்தான்; ‘‘இன்று நீா் மிகவும் அழகாக இருக்கிறீா். பசுமையான அழகுமிக்க உமது உடலின் வனப்பை இச்சேலை குறைக்கிறது’’

‘‘போங்கோ’’

‘‘உம்மைத் திருமணஞ் செய்ய நான் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். உம்மைத் திருமணஞ் செய்த பின், நீா் உம்மையே எனக்குத் தந்துவிட்டீா். அதனால் உம்மைப் பிரிந்து என்னால் இருக்க முடியவில்லை. வேலைத் தலத்தில் வேலைகள் எதையும் செய்ய முடியவில்லை.’’

‘‘சும்மாய் என்னை ஏமாற்றச் சொல்கிறீா்கள்’’

“உம்மை நான் ஏமாற்றுவேனா…? நீர்தான் எனது சொர்க்கம். உம்மை ஏமாற்றுவதாக நினைத்தால் நான் முன்பே ஏமாற்றியிருப்பேன். பல இலட்ச ரூபாவுடன் எத்தனை பேர் என்னை மாப்பிள்ளையாக எடுக்க வரிசையில் நின்றவர்கள். அப்படியிருக்க நான் உம்மைத் திருமணம் செய்தேன். அப்படியான நான் உம்மை ஏமாற்றுவேனா…?”

“அம்மா” என்றவாறு கோவலன் எழுந்து பாயில் அமர்ந்தான்.

துளசியின் சிந்தனைகள் தடைப்பட்டன. அவள் அவனின் அருகே சென்று அவனருகில் படுத்தாள். கோவலன் அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நித்திரையானான்.

‘அன்பே, உம்மைப்படிக்க நான் விடவில்லை. என்னைப் படிக்க உமது நினைவுகள் விடவில்லை. அதனால் எமது பிள்ளைகளை நன்றாகப் படிப்பிக்க வேண்டும்”

துளசி சிரித்தாள்; “இருவரும் காதலால் படிக்கவில்லை. எமது பிள்ளைகளும் அப்படித்தான் செய்வார்கள்” என்றாள் துளசி.அவன் அவளது வாயைப் பொத்தினான்; “விளையாட்டாகக் கூட அப்படிச் சொல்லக்கூடாது. எமது பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும்” கோவலன் இறுக அணைத்தபடி வாய் புலம்பினான்.

“நாளைக்கு மகாகணபதி ஆலயத்திற்குக் கோவலனைக் கூட்டிச் சென்று மந்திரித்து நூல் கட்ட வேண்டும்” என்ற நினைப்புடன் துளசி தூங்கிவிட்டாள்.

மறுநாள் எழுந்து சமையலை முடித்துப் பிள்ளைகளுக்குக் காலை உணவைக் கொடுத்து விட்டுக் குளித்துவிட்டு வந்தபோது கிருஷ்னன் முற்றத்தில் நின்றான்.

அவன் அவளது கணவனிடம் வேலை செய்தவன். அவன் இறந்த பின்பு கூலி வேலைகள் செய்கிறான். சரியான குடிகாரன்.

“என்ன?” என்று கேட்டார் துளசி.

“மகாராசா போன பிறகு நான் பா்ற கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. இளையவனுக்குச் சுகமில்லை. சிவசுந்தரமூர்த்தியைக் காசுகேட்டேன். அவர் தரமறுத்து விட்டார். இப்பொழுது நான் அவரின் வீட்டு வேலைகளைத்தான் செய்கிறேன்” என்றான். அவனது குரலில் வேதனை கலந்திருந்தது.

“இருப்பதை மறைத்து வைத்துக் கொண்டு, இரந்து கேட்பவர்களுக்கு இல்லை என்று கூறுபவர்களிடம் பிச்சை கேட்கக் கூடாது. கனகனிட்டை, சிவசுந்தரமூர்த்தியிட்டை சின்னத்தம்பியிட்டைக் கேட்கவேண்டாமென்று உனக்கு நான் எத்தனை தடவைகள் சொன்னனான். அவர்கள் மற்றவர்களிடம் பிச்சை வாங்கத் தகுதியானவர்களேயல்லாமல் கொடுப்பதற்குத் தகுதியற்றவர்கள். இனிமேல் அவர்களைக்

கேளாதை" என்று கூறிவிட்டு வீட்டுள்ச் சென்ற துளசி, ஐந்நூறு ரூபாய்த்தாள் ஒன்றை எடுத்து வந்து கொடுததாள். கிருஷ்னன் அதிர்ந்து போனான்.

**1067. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.**

உள்ளதை மறைத்து வைத்து விட்டு இல்லை என்று சொல்வோரிடம் சென்று இரந்து கேட்க வேண்டாம் என்று இரப்பவர்கள் எல்லோரையும் இரந்து வேண்டுகிறேன்.

## உடையும் மரக்கலம்

"தங்கச்சி, நான் எனது மனதில் இருந்ததைச் சொன்னேனே தவிர உன்னைக் கேட்கவில்லை. பண்டிதர் மாமனிதர். அவருக்கு அருகில் இருந்தாலே அறிவு பெருகும். மனதிற்குக் கஷ்டமேற்பட்டால் நான் பண்டிதர் ஐயாவிடம் வருவேன். அவர் தகுதி வேறுபாடு பாராது எல்லோரையும் சமமாக மதிக்கும் உன்னத மனிதர். அவரிடம் எனது கஷ்டங்களைச் சொன்னால் அவர் மருந்து தருவார். வாழ்க்கையை வெறுத்து அதை அறுத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு அவரிடம் வந்தால், அவர் மனதிற்கு ஒத்தணம் பிடித்து, மனதைக் குளிரப்பண்ணி வாழ்க்கையில் பிடிப்பேற்படவைப்பார். சிவசுந்தரமூர்த்தியிடமும் கனகனிடமும் வேலை செய்வது ஒரே மாதிரியானது. முன்பு நான் கனகனிடம் வேலை செய்தேன். சம்பளப் பணத்தை அவன் ஒழுங்காகத்தர மாட்டான். அதனால் சிவசுந்தரமூர்த்தியிடம் வேலை செய்யப் போனேன். கனகனைவிட இவன்

மோசமானவன். எனது மகனுக்கு இரண்டு வாரகாலமாகக் காய்ச்சல். மருந்தெடுத்தும் சுகமாகவில்லை. அதனால் இரத்தம் சோதிக்கப் பணம் கேட்டேன். அவன் பல்வேறு கதைகள் சொல்கிறானே தவிரப் பணம் தருகிறான் இல்லை. அதனால் அவனது வீட்டுக்குப் போவதை நிறுத்தி விட்டேன். அந்தச் சோகக் கதைகளை பண்டிதரின் ஆத்மாவிடம் சொல்லி விட்டுப் போகலாம் என்பதற்காகத்தான் வந்தேன். நீ கஷ்டப் பட்டவள். அப்படி இருந்தும் பணம் தந்துவிட்டாய்'' அழுதான் கிருஷ்னன்.

''வறியவர்களுக்குத் தான் வறியவர்கள் படும் துன்பம் தெரியும். ''மரணம் நேர்வதைத் தடுக்க முடியாது. மரணம் நேர்வதற்கு முன் வசதியுள்ளவன் தன்னிடமுள்ளதைப் பிறருக்குக் கொடுக்க வேண்டும்.'' என்று அப்பா அடிக்கடி சொல்வார். நேற்று நான் சம்பளமெடுத்தேன். அதனால் என்னிடம் சிறிதளவு பணம் இருந்தது. எனது பிள்ளைக்கு வருத்தம் வந்த போது நான் எப்படித்துடித்தேனோ அதே போலத்தான் நீயும் துடிதுடிப்பாய். அதனால் தான் என்னிடமுள்ள பணத்தைத் தந்தேன். யாசிப்பது என்ற பாதுகாப்பில்லாத மரக்கலம், வைத்துக் கொண்டு இல்லையென்று இரக்கமின்றிக் கூறுவதாகிய நிலம் தாக்கினால் உடைந்து விடும். உனது பிள்ளைக்குக் கடும் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. அப்பிள்ளை உயிர் தப்ப வேண்டுமானால் பணம் வேண்டும். அந்தப் பணம் என்னிடம் இருந்ததால் தந்தேன்'' என்றாள் துளசி.

கிருஷ்னன் விம்மி விம்மி அழுதான். நல்ல குணங்களும் பண்புகளும் குலத்திற்குரியவை

என்பார்கள். பண்டிதர் அருமையான மனிதன். மனிதப் பண்புகளின் பிறப்பிடம். மனிதப் பண்புகள் பெற்றோரிடத்தில் இருந்துதான் பிள்ளைகளுக்குக் கிடைக்கின்றன. பெற்றோரைப் பொறுத்துத்தான் பிள்ளைகளின் குணங்களும் இருக்கும். பண்டிதரைப் போலவே இருக்கும் நீ பல்லாண்டு காலம்சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வேண்டும்'' கண்கலங்கினான் கிருஷ்னன்.

''நீ குடிக்கக்கூடாது; தவறான நடத்தைகளில் ஈடுபடக்கூடாது. அப்படி நீ இருந்தால் நான் பரமேஸ்வரனிடம் சொல்லி உனக்கு அவரது தொழிற்சாலையில் ஒரு வேலை வாங்கித் தருவேன்'' என்றாள் துளசி.

''தங்கச்சி, நான் நல்ல குடும்பத்தில் தான் பிறந்தேன். வறுமை காரணமாக எனது தந்தையார் கனகனின் வீட்டில் என்னை வேலைக்குச் சேர்த்தார். எனக்குக் களவைப் பழக்கியது கனகன்தான். பாடசாலைப் பொருட்கள் எல்லாவற்றையுமத் நான் இரவில் கொண்டு சென்று கனகனின் வீட்டில் வைப்பேன். அதை விட விக்னேஸ்வரமூர்த்தி ஐயா அதிபராக இருந்தது கனகனுக்குப் பிடிப்பதில்லை. அதனால் நானும் நடராசாவும் சேர்ந்து பாடாசலையை உடைத்துப் பலமுறை பொருட்களைத் திருடிக் கனகனின் வீட்டில் கொண்டு சென்று கொடுத்தோம். பக்காத்திருடர்களுக்கு உதவியதற்காக நாங்கள் கள்ளப்பட்டம் பெற்றுள்ளோம். பயனை அனுபவித்தவர்கள் சமூகத்தால் மதிக்கப் படுகிறார்கள்.''

“கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் பல முறை திருட்டுப்போனது. அதைத் திருடியது நீங்களா..?” அதிர்ச்சியுடன் கேட்டாள் துளசி.

“ம்” வாய்திறவாது சொன்ன கிருஷ்னன் சிறிது நேரம் கழித்துச் சொன்னான்; “நான் பண்டிதர் ஐயாவுக்கு எல்லாவற்றையும் கூறிவிட்டேன்.”

அப்பொழுது சிவசுந்தரமூர்த்தி பணத்துடன் வந்தார்; “என்னிடம் நீ கேட்ட போது பணம் இருக்கவில்லை. வேலாயுதபிள்ளையிடம் மாறினனான் இந்தா பிடி. நாளைக்கு வேலைக்கு வா”

“எனக்கு காசுவேண்டாம். ஊரில் பெரிய பணக்காரனான உன்னிடம் பணம் இல்லையென்றால் வங்கியிலும் பணம் இராது. நீயும் கனகனும் சொல்வதெல்லாம் பொய்யும் புரட்டும். இனிமேல் நான் உனது வீட்டுக்கு வரமாட்டேன்” என்றான் கிருஷ்னன்.

---

**1068. இரவுஎன்னும் ஏமாப்புஇல் தோணி கரவுஎன்னும்**
**பார்தாக்கப் பக்கு விடும்.**

---

இரத்தல் என்ற பாதுகாப்பு இல்லாத மரக்கலம் உள்ளவற்றை ஒளித்து வைத்துக் கொண்டு இல்லை என்று இரக்கமின்றிக் கூறும் பாறை போன்ற உள்ளத்தவர் தாக்கினால் உடைந்து விடும்.

கிருஷ்னன் சொல்வதைக் கேட்டதும் சிவசுந்தரமூர்த்திக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது; “நீ பெரிய ரோஷக்காரன். சொல்லுறபடிதானே நடக்கிறனீ. நான் உன்னைத் தேடி எத்தனை வீடுகளுக்குச் சென்று வருகிறேன் என்று உனக்குத் தெரியுமே…? உனக்கு பணம் வேண்டாமென்றால் போ. நாலு நாள்க்கழிய என்னிடம் வருவாய். உன்னை நம்பியார் வேலை தரப்போகிறார்கள்?” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“உண்மைதான். நீ சொல்வது உண்மைதான். நல்ல மனிதர்கள் எவரும் எனக்கு வேலை தரமாட்டார்கள். ஏனென்றால் உன்னோடு சேர்ந்து நான் களவு எடுத்தனான். நீயும் கனகனும் சேர்ந்து ஊரில் எத்தனை கொடுமைகளைச் செய்தீர்கள் முன்பு நான் கனகனுடன் வேலைசெய்யும் போது அவன் அதிபராக இருந்த பாடசாலைப் பொருட்களெல்லாவற்றையும் கொண்டுவந்து கொடுத்தனான். கோயிலையும் பாடசாலை யையும் உங்களிருவரோடுஞ் சேர்ந்து கொள்ளை அடித்தது நான் தான். அதனால் எனக்குக் கள்ளப் பெயர். உங்களுக்கு நல்ல பெயர். இராசையாவுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுக்காததால் அவன் பேசாமல் நின்று விட்டான். இப்ப அவன் அனாதை இல்லத்திலை வேலை செய்கிறான். அதைப் போல நானும் வேலை செய்வனே தவிர உன்னிடம் வேலைக்கு வரமாட்டன்” என்றான் கிருஷ்னன்.

கிருஷ்னன் அப்படிச் சொல்வான் என்று எதிர்பாராத சிவசுந்தரமூர்ததி தடுமாறிப் போனார்.

அவரால் பேச முடியவில்லை; ‘‘இந்தா காசைப்பிடி’’ என்று நீட்டினார்.

‘‘எனக்கு வேண்டாம். பிச்சை எடுத்துப் பிள்ளையை வளர்ப்பதை விட அப்பிள்ளை சாகலாம். இரத்தலின் கொடுமையை எண்ணிப் பார்த்தால், எனது மனம் வெட்கத்தால் கரைந்து உருகிவிடும். அதே போல உன்னைப் போன்றவர்கள் உள்ளதை ஒளிக்கும் கொடுமையை நினைத்தால் உருகிய உள்ளம் உறைந்து விடும். அதனால் இனிமேல் நான் இரப்பதில்லை என்று முடிவு கட்டி விட்டேன். தயவு செய்து பணத்தைக்கொண்டு போ’’ என்றான் கிருஷ்னன்.

சிவசுந்தரமூர்த்தி பேசாமல் நடந்து கொண்டிருந்தார். கிருஷ்னன் சொன்ன வார்த்தைகள் அவரை வேலாகக் குத்தின.

‘‘நீ சொல்வதைப் போலத்தான் அப்பாவும் சொல்வார். இராசகோபால் மனமகிழ்வுடன் நான் கேட்பதைத் தந்தாலும்கேட்கும்போத எனது மனம் சங்கடப்படுகிறது. அதனால்தான் நான் வேலை செய்யப் புறப்பட்டேன்’’ என்றாள் துளசி.

‘‘நான் படித்தனானா அப்பாவைப் போலச் சொல்ல. அவரும் சுவாமியாரும் சொன்னவற்றைக் கேட்டுச் சொல்கிறேன். எனக்குப் பரமேஸ்வரன் ஐயாவிடம் சொல்லி ஒரு வேலை பெற்றுத் தந்தால் நான் திருந்தி நடப்பேன்’’ என்றான் கிருஷ்னன்.

‘‘உழைப்பதிலும் பார்க்க மிச்சம் பிடிப்பது தான் முக்கியம். நீ உழைப்பதை விட அதிகமாகக்

குடிப்பதல் மற்றவர்களிடம் இரக்காமல் வாழ முடியாது. முதலில் நீ குடிப்பதை நிறுத்து'' என்றார் துளசி.

''சில கெட்ட பழக்கங்களைத் தீயவர்களுடன் கூடிப் பழகிவிட்டேன். நான் குடிக்கப்பழகியது கனகனால்தான். அவனுக்குக் குடிப்பதற்காக நான்தான் சாராயம் வாங்கி வந்து கொடுப்பேன். அவனுக்குச் சாராயம் வாங்கும் போது எனக்கும் குடிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்படும். அதனால்தான் நான் குடிக்கப் பழகினேன். ஆனால் கனகன் குடிப்பதை ஊரில் உள்ள எவரும் நம்ப மாட்டார்கள். அவன் குடிப்பதில்லை என்றுதான் சொல்வார்கள்.'' என்றான் கிருஷ்னன்.

''அதிகாரமும் பதவியும் உள்ளவர்கள் பல அநியாயங்களைத் தயக்கமின்றிச் செய்கிறார்கள். அவர்களுக்கு அழிவு தானாகவே தேடிவரும். அப்பொழுது அவர்கள் துன்பத்தைத் தாங்க முடியாது துடிதுடிப்பார்கள். பிறருக்குச் செய்யும் அற்பமான சேவைகள் கூடப் பெரும்பலனைத் தரும். அதே போலப் பிறருக்குச் செய்யும் சிறிய தீமைகள் கூடப் பெரும் விளைவுகளைத் தரும்.'' என்றாள் துளசி.

''உண்மை, நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். கனகன் இப்போது நன்றாகவா இருக்கிறான்? பிள்ளைகள் ஒன்றும் அவனுடன் ஒற்றுமையில்லை. சகோதரதரர்கள் இவனை அடித்து முறிக்க வேண்டுமென்கிறார்கள். பாடசாலைக் காணியையும் சிதம்பர சொத்துக் காணிகளையும் இவனும் தகப்பனும் பிடித்து வைத்திருக்கிறார்கள்

என்று இவனது சகோதரர்களே சொல்லிக் கொண்டு திரிகிறார்கள். இப்படியிருக்க அவன் வெள்ளை வேட்டி யும் வெள்ளைச் சட்டையும் போட்டுக் கொண்டு திரிகிறான்'' ஆத்திரப்பட்டான் கிருஷ்னன்.

''தீயவர்களைத் திருத்த முடியாது. தீயவர்களைப் பற்றிக் கதைப்பதால் எமக்குத்தான் தீமை வரும். அதனால் அவர்களைப் பற்றி நினைக்காதே. விரைவாகச் சென்று உனது மகனை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்'' என்றான் துளசி.

**1069. இரவுஉள்ள உள்ளம் உருகும்; கரவுஉள்ள உள்ளதூஉம் இன்றிக் கெடும்.**

இரத்தலின் கொடுமையை நினைத்தால் உள்ளம் கரைந்து உருகும்; உள்ளதை ஒளிக்கும் கொடுமையை நினைத்தால் உருகியது அழிந்து விடும்.

## ஒளிப்பது எங்கு

அன்று மாலை கிருஷ்னன் துளசியின் வீட்டுக்கு வந்தான். அவன் வந்த போது இராசகோபால் அங்கிருந்தான். அவனைக் கண்டதும் இராசகோபால் சொன்னான்; ''நீ துளசியிடம் பரமேஸ்வரனின் தொழிற்சாலையில் வேலை கேட்டுக் கொண்டு வரும்படி சொன்னாயாம். அத்துடன் பரமேஸ்வரனின் தொழிற்சாலையில் வேலை பெற்றுத் தந்தால் ''குடிக்கமாட்டேன்; ஒழுக்கம் தவறி நடக்கமாட்டேன்'' என்றும் சொன்னியாம்.

சிவசுந்தரமூர்த்தியும் கனகனும் உன்னை வீட்டுக்குள் விடுவதில்லை; பணம் தருவதில்லை. பொருட்களுக்குப் பொறுப்பாக விடுவதில்லை. மாட்டுக்குத்தீனி வைப்பதானாலும் கூடக் கனகனும் சிவசுந்தரமூர்த்தியும் தீனியைஅளந்து வாளிக்குள்ப்போட்டு நீர் ஊற்றி விடுவார்கள். அப்படி எல்லோராலும் செய்ய முடியுமா...? சிவசுந்தரமூர்த்தியை நான் வழியில் வரும்போது சந்தித்தேன். அவர்; “உனக்குஇந்தக் கிராமத்தில் யாரும் வேலை தரமாட்டார்களாம். நாலைந்து நாட்கள் செல்ல நீ தன்னைத் தேடி வருவாய்” என்று சொன்னார். அதற்குக் காரணம் உனது நடத்தைதான். நீ ஒழுங்காயிருந்தால் எனது தோப்பில் வேலை செய்யலாம்” என்றான்.

கிருஷ்னன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். பின் சொன்னான்; “நானும் நடராசாவும் இரவு பன்னிரண்டு மணிக்குப் பாடாசலைப் பொருட்களைக் களவாடிக் கொண்டு கனகனின் வீட்டுக்குச் செல்லும் போது நீ கண்டனி. கனகன் உனது காலில் விழுந்து கெஞ்சியதால் விட்டனி. அவர்களால் தான் நான் திருடப்பழகினேன்” என்றான் கிருஷ்னன்.

“அதனால்தான் அவர் அப்படிச் சொல்கிறார். நீ நல்லபடி வேலை செய்தால் ஊர் முழுவதிலும் வேலை செய்யலாம்” என்றான் இராசகோபால்.

“நான் இனி திருடமாட்டன். குடிக்கமாட்டன். நீ எனக்கு வேலை தா. நான் ஒழுங்காகச் செய்கிறேன்” என்றான் கிருஷ்னன்.

“நானும் உன்னைப் போல ஏழையாகத் தான் இருந்தனான். அப்போது என்னை யாரும் மதித்ததில்லை ஒருநாள் வள்ளியம்மை மயங்கி விழுந்து விட்டாள். அதனால் நான் பயந்து போனேன். அவளை வைத்தியசாலைக்குக்கொண்டு செல்ல வேண்டும். அதற்குப் பணம் இல்லை. அதனால் சிவசுந்தரமூாத்தியிடஞ் சென்றேன். அவா் இல்லை என்று சொல்லி விட்டாா். வள்ளியம்மையை நான் காதலித்துத் தான் திருமணஞ் செய்தேன். அவள் எனக்காகத் தனது குடும்பத்தை வெறுத்து என்னுடன் வந்தவள். அதனால் துயரத்துடன் வந்தேன். சிவசுந்தரமூா்த்தி தன்னிடம் தான்கேட்ட பணம் இல்லை என்று சொன்ன அளவிலேயே என் உயிா் போய்விட்டது. ஏராளமான சொத்துக்களை வைத்துக் கொண்டு இல்லை என்று சொன்ன சிவசுந்தரமூா்த்தியின் உயிா் எங்கு சென்று ஒளித்திருக்கும் என்று நினைத்தவாறு வந்தேன். அன்று வேலாயுதபிள்ளை அண்ணை தான் உதவிசெய்தாா். நானும் உனது நிலையில் இருந்ததால் தான் உனக்கு உதவிசெய்கிறேன். நீ திருந்தி ஒழுங்காக வாழ்வாய் என்று துளசி சொல்கிறாள். அத்துடன் உனக்குப் பொறுப்பும் நிற்கிறாள்” என்றான் இராசகோபால்.

கிருஷ்னன் திகைத்துப் போனான்; “என்ன துளசி எனக்குப் பொறுப்பு நிற்கிறாளா?” என்று கேட்டான்.

“நீங்கள் பத்துப் பதினைந்து வருடங்களாக அப்பாவைத் தேடி வீட்டுக்கு வாறனீங்கள். அத்துடன் எனது கணவரின் வியாபா நிலையத்தில் வேலை செய்தனீங்கள். அத்துடன் ஒருவன் திருந்த

வேண்டும் என்று நினைக்கும் போது அவனுக்கு நாம் உதவி செய்தல் வேண்டு'' என்றாள் துளசி.

''இறைவன் எல்லாவற்றையும் படைத்து விட்டு, மனிதனைப் படைத்து அவனை அவற்றை அனுபவிக்கும் படி வைத்திருக்கிறார். மனிதனுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் படைக்கப்பட்டுள்ளன. அவற்றை அவன் தனது முயற்சியால்பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிரக் களவெடுக்கக்கூடாது. இரக்கக் கூடாது. களவெடுப்பதை விட இரப்பது பாவமானது. ஒருவன் இரக்கும் போது அவனது உயிர் போய் விடும். அதனால் நீ இரப்பதை விட்டு விட்டு ஒழுங்காக வேலை செய்'' என்றான் இராசகோபால்.

''நான் நாளைக்கே வேலைக்கு வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான் கிருஷ்னன்.

''வேலை எப்படி?'' என்று கேட்டான் இராசகோபல்.

''நல்லவேலை. கஷ்டமானதுதான். ஆனால் அதைச் செய்யும் போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நீங்கள் நல்லவர்; இரக்க சுபாவம் மிக்கவர். இருந்த போதும் எத்தனை நாட்களுக்கு உங்களால் எமக்கு உதவி செய்ய முடியும். நான் உழைத்தால் கூசாமல் செலவு செய்யலாம். பிறர்க்கும் கொடுக்கலாம். கோயிலில் அர்ச்சனை செய்யலாம். எல்லாவற்றிற்கும் 'ஓர் பெண்தன் கணவனைக் கூட எதிர்பார்க்ககூடா'தென்று அப்பா சொல்வார். அதனால் தான் நான் வேலைக்குச் செல்கிறேன்'' என்றாள் துளசி.

“எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. கூலி வேலை செய்வதைத் தான் நான் விரும்பவில்லை” என்று கூறிவிட்டு எழுந்தான் இராசகோபால்.

**1070. கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவா சொல்லாடப் போஒம் உயிர்.**

இரப்பவனுக்கு ‘இல்லை’ என்று சொல்கின்ற போது உயிர் போய்விடுகிறதே, உள்ளதை இல்லை என்று ஒளிப்பவரின் உயிர் எங்கு போய் ஒளித்திருக்கிறதோ?.

## ஒத்திருப்பார்கள்

அன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத் தேர்த்திருவிழா. தேர்த்திருவிழாக்கெனச் சிங்கப்பூரில் வாழும் அக்கிராமத்தைச் சேர்ந்த கீதாஞ்சலியின் குடும்பம் வந்திருந்தது. கீதாஞ்சலியின் கணவர் வீமராஜன். அவரது மகள் அபிராமசுந்தரி. மகன் விநாயகன் ஆகியோர் வந்திருந்தனர். கீதாஞ்சலி முன்பொருமுறை வந்து சுவாமியாரையும் மகாகணபதியையும் தரிசித்து விட்டுச் சென்றவள்.

தேர்த்திருவிழா முடிந்ததும் சுவாமியாரிடம் அனைவரும் வந்தனர். கீதாஞ்சலி முதலில் சுவாமியாரின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டாள். பின்பு “தனது கணவரையும் பிள்ளைகளையும்

அவரது பாதங்களைத் தொட்டுக் கும்பிடுமாறு'' கூறினாள். அவர்கள் சுவாமியாரைத் தொட்டுக் கும்பிட்டதும் சுவாமியாருக்கு அருகில் இருந்த விக்னேஸ்வர மூர்த்திக்கு அருகில் வந்த கீதாஞ்சலி தனது இருபிள்ளைகளையும் விக்னேஸ்வரமூர்த்தி யினதும் தணிகாசலத்தினதும் பாதங்களில் விழுந்து கும்பிடுமாறு கூறினாள்.

``இவர் விக்னேஸ்வரமூர்த்தி. பெரிய கல்விமான். நான் கற்ற பாடசாலையை இமயமளவிற்கு உயர்த்திய மகான். எனது குருநாதர் வைத்திலிங்கம் அவர்கள் எதை நினைத்து இப்பாடசாலையைத் தொடங்கினாரோ, அதை நிறைவேற்றியர். ஒழுக்கம் மிக்கவர். தற்போது கல்விப்பணிப்பாளராகப் பணி புரிகிறார். இவர்கள் நடமாடும் தெய்வங்கள். இவர்களுக்காகத்தான் மழை பொழிகிறது.'' என்றாள் கீதாஞ்சலி.

விநாயகனும் அபிராமசுந்தரியும் விக்னேஸ்வரமூர்த்தியனதும் தணிகாசலத்தினதும் கால்களில் விழுந்து வணங்கினர். வேறு நாடொன்றில் பிறந்து வாழும் அவர்கள் தமிழ்ப் பண்பைக் கடைப்பிடித்தது விக்னேஸ்வரமூர்த்திக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அதனால் அவர்களை அணைத்தெடுத்து ஆசீர்வதித்தார். தணிகாசலம் பதறிப்போனார். அவரை மக்கள் புகழ்வார்களே தவிர அவரது கால்களில் வீழ்ந்து ஆசீர்வாதம் பெறுவதில்லை.

“மிகவும் பெரிய மனிதரென்றால் நானும் ஆசீர்வாதம் பெறப் போகிறேன்” என்று வீமராஜன் விக்னேஸ்வரமூர்த்தியின் கால்களில் விழுந்தார்

விக்னேஸ்வரமூர்த்தி பதறிப்போனார்; “என்னைவிட மூத்தவரான நீங்கள் தடுமாறினார்” விக்னேஸ்வரமூர்த்தி.

“ஐயா, நல்லவர்கள் ஒழுக்கமானவர்கள், கல்விமான்கள் வயதில் இளையவர் களானாலும் போற்றப் படவேண்டியவர்கள்; வணங்கப்பட வேண்டியவர்கள். ஐந்து வயதுப் பாலகனான திருஞானசம்பந்தரை எண்பது வயதுக் கிழவரான அப்பர் வணங்க வில்லையா….? சிவன் தனது மகனைக் குருவாக ஏற்கவில்லையா?” என்றார்.

சுவாமியார் புன்னகைத்தார்; “இன்று ஓர் அதிசயம் நடந்துள்ளது. மிகப்பெரிய பணியாளரான விக்னேஸ்வரமூர்த்தி தான் செய்யும் எந்தச் செயலுக்கும் பாராட்டுக்களையோ பரிசில்களையோ எதிர்பார்க்காத ஓர் உத்தமர். இத்தகைய ஆசைகள் இல்லாத அவரும் மகா கணபதியும் சமமானவர்கள். தணிகாசலம் வேலாயுதபிள்ளை தனபாலசிங்கம் போன்றோரும் போற்றுதற்கும் வணங்குவதற்கும் உரிய உத்தமர்கள். தோற்றத்தில் பார்ப்பதற்கு நல்லவர்களும் கயவர்களும் ஒரே மாதிரித்தான் காணப்படுவார்கள். அவர்களைப் போல ஒத்திருப்பவர்களை வேறெந்த இருவகைப் பொருட்களிலும் காண முடியாது. இந்த உத்தமர்களைப் போலத்தான் தீய செயல்களைச் செய்யும் கயவர்களும் உருவ அமைப்பில்

ஒத்திருக்கிறார்கள். அவர்களை வேறுபடுத்துவது செயல்களே....?'' என்றார் சுவாமியார்.

அப்போது கனகனும் சிவசுந்தரமூர்த்தியும் வந்தனர்; ''சுவாமியார் கூறியது சரி. கனகனும் சிவசுந்தரமூர்த்தியும் எவ்வளவு தீமைகளை மக்களுக்கும் சமூகத்திற்கும் செய்கிறார்கள். கனகன் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் படித்து பட்டம் பெற்று ஆசிரியராகிப்பின் அதிபரானவன். அந்தப் பாடசாலையின் சொத்தை கிருஷ்னனைக் கொண்டும் நடராசாவைக் கொண்டும் திருடி வந்தவன். அதைவிட பாடசாலைக் காணிக் கொள்வனவில் அதிபருக்கெதிராக நீதிமன்றுக்குச்சென்று வட்டிக்காசும் நீதிமன்றச் செலவுகாசும் வாங்கிய கயவன்'' என்றான் இராசகோபால்.

''இவர் கனக வாத்தியார். எனக்குக் கற்பித்தவர். அமரர் வைத்திலிங்கத்தின் பெயரை நாசமாக்கியவர்'' என்றாள் கீதாஞ்சலி.

''இவரின் கால்களிலும் வீழ்ந்து நமஸ்கரிக்கட்டுமா அம்மா..'' என்று கேட்டான் விநாயகம்.

''இல்லை.... இல்லை.... இவர்கள் தூசிக்கப்பட வேண்டியவர்கள்'' என்றாள் கீதாஞ்சலி.

கீதாஞ்சலியைக் கண்டதும் சிவசுந்தரமூர்த்தி அவளுக்கு அருகில் வந்தார். முன்பு அவர் சிறுபிள்ளையாக இருந்த போது அவளின் வீட்டுக்கு அருகில் இருந்தவர்.

“எப்படிக் கீதாக்கா சுகமாக இருக்கிறீர்களா..? குடும்பத்துடன் வந்தாகக் கேள்விப் பட்டேன்” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“ஓம்” என்ற கீதாஞ்சலி அவரை தனது கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் அறிமுகப்படுத்தினாள்.

“நல்லவர்கள் தமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்கிறார்கள். கயவர்கள் தமக்கும் மற்றவர்களுக்கும் தீமை செய்கிறார்கள். நீங்கள் கோயிலுக்குச் செய்யும் செயல்களைப் பற்றி தனபாலசிங்கம் மாமா அடிக்கடி எழுதுவார். உங்களைப் பற்றிய தகவல்கள் எல்லாம் அறிந்துள்ளேன்” என்றாள் கீதாஞ்சலி.

**1071. மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பார் யாம்கண்டது இல்.**

தோற்றத்தில் பார்ப்பதற்கு நல்லவர்களும் கயவர்களும் ஒரே மாதிரித் தான் இருப்பார்கள். அவர்களைப் போல ஒத்திருப்பவர்களை வேறெந்த இருவகைப் பொருள்களிலும் நாம் காணமுடியாது.

## மேலானவர்கள்

அன்று இரவு கனகனும் கணபதி மத்திய மகா வித்தியாலய அதிபரும் சிவசுந்தரமூர்த்தியும்

கீதாஞ்சலியின் வீட்டுக்கு வந்தனர். கீதாஞ்சலி தனபாலசிங்கத்தின் வீட்டில் தங்கியிருந்தாள்.

வீட்டுக்கு வந்த மூவரையும் கீதாஞ்சலி வரவேற்று ஆசனத்தில் இருத்தினாள்; "எப்படி சுகமாக இருக்கிறீர்களா..? சிங்கப்பூரில் எனது தந்தையாரின் சகோதரியின் பிள்ளைகள் வாழ்கிறார்கள்" என்றான் கனகன்.

"ஓ, எனக்கு அவர்களைத் தெரியும். அவர்கள் அங்கு ஒழுக்கமாக வாழவில்லை. கோயில் நிர்வாகத்தில் இருந்து பிரச்சினைப்படுகிறார்கள். உங்களது தந்தையின் சகோதரியின் மகன் கந்தையாபிள்ளை தான் எமது பிள்ளையார் கோயில் தலைவர். அவர் கட்டிட நிதிக்காக வாங்கிய பணத்தின் பெரும்பகுதியை விழுங்கிவிட்டார். முன்பு உங்களது தந்தையார் பாடசாலை கட்டவென சிங்கப்பூரில் வந்து காசு வாங்கினவராம். எங்கே பாடசாலை கட்டியிருக்கிறார் என்று கோயில் நிர்வாகம் என்னைப் பார்த்துவரச் சொன்னது" என்றாள் கீதாஞ்சலி.

கனகன் எதுவும் பேசவில்லை. "உங்களைப் போலத்தான் உங்கள் இனத்தவர்களும் அங்கு கோயிற் சொத்தைத் திருடிவிட்டு நீதிமன்றத்திற்குச் சென்று வழக்காடுகிறார்கள். நீங்கள் பாடசாலைகுவிற்ற காணிக்குள் செல்வவதி என்ற பெண் இருந்தது எனக்குத் தெரியும். அவளின் தாய் என்னுடன் படித்தவள் அதனால் அவள் என்னை வந்து சந்தித்தவள். அவளை எழுப்பாது எப்படி நீங்கள் காணியை விற்கலாம். அதைவிட விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவுக்கு கல்வித்

திணைக்களம் அப்பெண் காணியை விட்டு எழும்பிய பின்புதான் காணிக்கான பணத்தைக் கொடுக்கச் சொன்னது. அதை எப்படி அவர் மீற முடியும். பாடசாலையில் உள்ள சிலரும் கல்வித் திணைக்கள ஊழியர்கள் சிலரும் விக்னேஸ்வரமூர்த்தியின் மீது கொண்ட காழ்ப்புணர்வால் உங்களுடன்சேர்ந்து நாடகமாடினர். நீங்கள் நீதிமன்றத்திற்கும் காவல்துறைக்கும் செல்வதில் வல்லவர். அதனால் பணத்தைக் கொடுத்து அந்தப் பெண்ணைக் கலைத்து விட்டுக் காரியம் பர்த்துவிட்டீர்கள்'' என்றார் கீதாஞ்சலி.

''இல்லை அந்தக் காணிக்குள் இருந்தவள் விக்னேஸ்வரமூர்த்தியின் சொந்தக்காரி. அவளுக்காக அவர் பரிந்து பேசினார்'' என்றான் கனகன்.

''அப்போ அக்காணிக்குள் யாரோ ஒருவர் இருந்தருக்கிறர் என்பதை ஒத்துக் கொள்கிறீா. அவரை எழுப்பாது எப்படிக் காணியை விற்கலாம். அத்துடன் கல்வித் திணைக்களத்தின் சட்ட விதிகளுக்கேற்பத்தான் அத்திணைக்களத்தில் வேலை செய்வோர் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா…?''

''இல்லை, விக்னேஸ்வரமூர்த்தி பொய் சொல்கிறார். அவர் தனது இனத்தவருக் காகத்தான்….'' கனகன் கூறிக் கொண்டிரக்கும் போது கீதாஞ்சலி கோபத்துடன் குறுக்கிட்டாள்; ''அந்தக் காணிக்குள் குடியிருந்த பெண் உமக்கும் சொந்தக்காரிதான். நான் பழைய வரலாற்றைச்

சொல்லவா. வரலாற்றைப் பார்த்தால் அந்தக் காணிக்குள் நிற்கும் தென்னை மரங்களைச் சீவுபவனும் உமக்குச் சொந்தக்காரனாகி விடுவான். அதை விட விக்னேஸ்வரமூர்த்தி அரிச்சந்திரன். தன் உயிர் போனாலும் தர்மத்தை மீற மாட்டார். அது எனக்கு மட்டுமல்ல இந்த உலகம் முழுவதும் பரந்து வாழும் அவரது மாணவர்கள் அனைவருக்கும் தெரியும்.'' என்றாள் கீதாஞ்சலி.

``விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலைக்குப் பெரிதாக எதுவுஞ் செய்யவில்லை'' என்று கனகன் கூறும் போது கீதாஞ்சலி சொன்னாள்; ``நீங்கள் அதிபராக இருக்கும் போது பாடசாலையின் வேலியை அடைத்தீர்களா..? பிள்ளைகள் குடிப்பதற்கு எங்கு இருந்து நீர் கொண்டு வந்தனர்…? பாடசாலைக்கென எத்தனை பரப்புக் காணி இருந்தது. மற்றவர்கள் பிடித்து வைத்திருக்கிறதையும் சேர்த்து''

15 தை 1963ஆம் ஆண்டு 2112ஆம் இலக்க அரச வர்த்தகமானியைப் பாருங்கள். மற்றவர்கள் பிடித்த காணியை இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள்ப்பிடிக்கவேண்டும்'' என்றாள் கீதாஞ்சலி.

கனகன் அதன்பின் எதுவும் பேசவில்லை. சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; ``இவர்தான் தற்போதைய கணபதி மத்திய மகாவித்தியாலய அதிபர்''

“தெரியும் விக்னேஸ்வரமூர்த்திக்கு விசுவாசமானவர் போல நடந்து காணி விஷயத்தில் காட்டிக் கொடுத்தவர். வேலாயுதபிள்ளை என்ற பெயரில் விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றிப் புகாரிட்டவர். ஏனைய விஷயங்களிலும் கழுத்தறுத்தவர்” அத்துடன் இவரது நடத்தையால் தான் பதினைந்து வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டிடமும் தளபாடங்களும் இல்லாமற் போனது” என்ற கீதாஞ்சலி திரும்பி அவரைப் பார்த்தாள், பின் சொன்னாள்; “நன்மை தீமைகளை அறிந்தவர்களை விட, அவற்றைப் பற்றிச் சிந்திக்காது அச்சமில்லாமல் தீமைகள் செய்யும் கயவர்கள் மேலானவர்கள்” என்று பெரியவர்கள் சொல்வார்கள். விக்னேஸ்வரமூர்த்தியை அவமதிப்போர் காலகதியில் மக்களால் தூக்கியெறியப்படுவார்கள். விக்னேஸ்வரமூர்த்தி பதவி உயர்வு பெற்றபின் பல இலட்சரூபாவுக்கான உதவிகளைப் பாடசாலைக்குச் செய்வதாக அறிந்தேன். அவர் நிறுவுனரின் மீது கொண்ட அதீத பற்றால் பாடசாலைக்கு அளவுக்கதிகமான உதவிகளைத் தொடர்ந்தும் செய்வார். அதனால் அவர் வந்து கேட்டால் தான் நான் உதவி சேய்வேன். மற்றவர்களிடம் நான் நம்பிக்கை கொள்ளமாட்டேன்” என்றாள் கீதாஞ்சலி.

“அப்ப நாங்கள் வரப்போறம்”

“தேநீர் குடித்து விட்டப் போங்கோ. குடிப்பீர்களா…..? நீங்கள் உங்களது சகோதரங்களின் வீடுகளிலேயே குடிப்பதில்லை” அத்துடன் பாடசாலை ஆசிரியர்களின் நல்ல கெட்ட

நிகழ்வுகளுக்கு மறுநாள் தானே போவீர்கள்'' அதிபருக்கு ஒரு சகோதரி இருக்கிறார். பெரிய படிப்புப் படித்துப் பேராசிரியராக இருக்கிறார். அதை விட அவரின் புரிசன் படித்தவர். இனத்தவை பெரும் படிப்புக்காரர். அவை உங்களுக்கு நல்லவற்றைச் சொல்வதில்லையா...? அவர்களும் உங்களைப் போலத்தான் இருப்பார்கள்'' என்றார் கீதாஞ்சலி.

**1072. நன்றுஅறி வாரின் கயவர் திருஉடையர்**
**நெஞ்சத்து அவலம் இலர்.**

நல்லவர்களை விடக் கயவர்களே நல்லபேறு உடையவர்கள். ஏனெனில் கயவர் எதைப்பற்றியும் எவ்வேளையிலும் கவலை கொள்வதில்லை.

## போன்றவர்கள்

தனது வீட்டுத் தேவைக்காக அழகானதொரு மோட்டார் வாகனமொன்றை வாங்கித் தரும்படி இராசகோபால் நவராசாவைக் கேட்டான்.

அன்று மோட்டார் வண்டி வாங்குவது சம்பந்தமாக இராசகோபால் நவராசாவின் வீட்டுக்குச் சென்ற போது நவராசாவுடன் கெங்காதரன் இருந்தான். இராச கோபால் முன்பு உழைக்காமல் இருந்த காலத்தில் கெங்காதரனது வியாபார நிலையத்திற்குச் சென்று பொழுது போக்குவான். சில சமயங்களில் கெங்காதரன், இராசகோபாலிடம் பணம் கொடுத்து சாராயம் வாங்கி வரச் சொல்வான். இராசாகோபால் பணத்தை வாங்கிச் சென்று சாராயம் வாங்கி வந்து கொடுப்பான். அப்போது கெங்காதரன் இராச கோபாலைச் சாராயம் குடிக்குமாறு சொல்வான். ஆனால்

இராசகோபால் சாராயம் குடிப்பதில்லை. கெங்காதரன் வற்புறுத்தினால் சொல்வான்; “இப்பொழுதே வறுமை தாங்க முடீயவில்லை. சாராயமும் குடித்தால் எப்படி இருக்கும். வள்ளியம்மை வீட்டால் துரத்தி விடுவாள்” என்பான்.

“வா இராசகோபால், நீ இப்போது பெரிய ஆள்” என்றான் கெங்காதரன். அவனில் இருந்து சாராய நெடி வீசியது.

“நீ குடிப்பதில்லை என்று சுவாமியார் மீதும் மகா கணபதி மீதும் சத்தியம் செய்தாய்” என்றான் இராசகோபால்.

“இப்பொழுது நான் இவனைக் கெங்காதரத் தேவர் என்றே அழைக்கிறேன். தேவர்களைப் போல கெங்காதரன் தான் விரும்புபவற்றையெல்லாம் செய்து மனம் போன போக்கில் வாழ்கிறான். அதனால் தேவரைப் போன்றவன் கெங்காதரன்” என்றான் நவராசா.

இராசகோபால் சிரித்தான். “தாம் விரும்புபவற்றையெல்லாம் செய்து மனம் போன போக்கில் வாழ்பவர்களைக் கயவர்கள் என்று சொல்வார்கள். நீ கெங்காதரனைத் தேவன் என்கிறாய்” என்றான்.

“புரிந்து கொண்டால் சரி” என்றான் நவராசா. அப்போது அங்கே துர்க்கா வந்தாள். “இராசகோபால் அண்ணை, இவரைக் கெங்காதரனுடன் சேரவேண்டாமென்று பலமுறை

சொல்லியும் கேட்கிறாரில்லை. கெங்காதரனின் நடத்தைகள் சரியில்லை. முன்பு சூதாடியவர்; பெண்களுடன் தகாத தொடர்கள் வைத்திருந்தவர்; குடிப்பவர்; நன்மை தீமைகளை ஆராயாது தாம் விரும்புபவற்றைச் செய்பவர். மனம் போன போக்கில் நடப்பவர்; கெட்டவர்களான சிவசுந்தரமூர்த்தியுடனும், கனகனுடனும், கனகலிங்கத்துடனும் தொடர்பு வைத்திருப்பவர். இவரோடு தொடர்பு வைக்கவேண்டாமென்று சொன்னால் கேட்கிறாரில்லை. தயவு செய்து இவருடன் தொடர்பு வைக்க வேண்டாமென்று சொல்லுங்கோ'' பெருங்குரலெடுத்து அழுதாள் துர்க்கா.

''நான் என்ன செய்வது இராசகோபால்? இவனையும், சிவசுந்தரமூர்த்தியையும், கனகனையும் எனது வீட்டுக்கு வரவேண்டாமென்று பலமுறை கூறியும் இவர்கள் என்னைத் தேடி வருகிறார்கள். வரவேண்டாமென்றால் கேட்க வேண்டும். நல்லவர்கள் சொல்வதைக் கேட்பார்கள். தீய செயல்களைச் செய்பவர்கள் தான் கேட்கமாட்டார்கள். இவர்களுக்கு வெட்கம், ரோசம், மானம் எதுவும் கிடையாது.'' கவலையுடன் கூறினான் நவராசா.

''துர்க்கா, நீ தயவு செய்து உண்மையான நிலையை நினைத்துப் பார். கெங்காதரனுடன் நவராசா பழகுகிறானா..... இல்லையே..... எப்போதாவது அவனது வீட்டுக்குச் செல்கிறானா..? இல்லையே.... கயவர்களுக்கு நல்லவர்களின் நட்பு கடைசி வரைக்கும் கிடைக்காது. அதனால் தான் அவன் நவராசாவைத் தேடி வருகிறான். நவராசா நல்லவன். அவனைக் கெடுக்க யாராலும் முடியாது.

கெங்காதரன் பழையபடியும் வசந்தினியிடம் செல்கிறான்; குடிக்கிறான்; சூதாடுகிறான்; அதே போலத்தான் நவராசாவிடமும் வருகிறான்'' என்றான் இராசகோபால்.

''வசந்தினியை என்னால் மறக்க முடியவில்லை. எனது மனைவியால் என்னைத் திருப்திப்படுத்த முடியவில்லை. எமது கடவுளான இந்திரன் அகலிகை மேல் ஆசை கொண்டு அவளிடம் செல்லவில்லையா? இந்திரனின் மனைவி கொடுக்காத இன்பத்தை அவன் இன்னொரு பெண்ணிடம் பெற நினைத்திருக்கலாம். கட்டிய மனைவி கணவனுக்குப் போதிய இன்பத்தைக் கொடுத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அவன் இன்னொரு பெண்ணைத் தேடிச் செல்வதில் என்ன தவறு இருக்கிறது?'' என்றான் கெங்காதரன்.

''நீ நினைப்பது தவறு. முதலில் உனக்கு நற்குணங்கள் எவையெவையெனத் தெரிய வேண்டும். நற்பண்புகள் தவறாது வாழ்பவன் வாழ்க்கையில் எத்தகைய உயர்ந்த நிலையில் வாழ்வான் என்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். கள்ளும் விலைமாதும் நல்வாழ்வையும் மனச்சாந்தியையும் ஒருபோதும் அளிக்கமாட்டாது. ஒழுக்கம்தான் மனச்சாந்தியையும் இன்பத்தையும் அளிக்கும். கயவர்கள் பெண் இன்பத்தைப் பெரிதாக நினைப்பார்கள். ஒருவன் தனது மனைவியிடம் பெறுவது தான் உச்சமான இன்பம். மற்றப் பெண்களிடம் பெறுவது இன்பமல்ல. உணர்ச்சிகளை அடக்கல். தேவர்களைப் போல நீயும் மனம்போன போக்கில் வாழாதே. ஒழுக்க நெறியில் வாழ்'' என்றான் நவராசா.

**1073. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்**
**மேவன செய்தொழுக லான்.**

கயவரும் தேவர்களைப் போலத் தாம் விரும்பியவற்றை அடைந்து மனம் போன போக்கில் நடப்பதாள் கயவர் தேவரைப் போன்றவர்கள் ஆவர்.

## அவரைவிட உயர்ந்தவர்

“நீ என்னைக் குற்றவாளியாகக் கருதுகிறாய். நான் என்ன செய்கிறேன்? குடிக்கிறேன். சமூகத்திலுள்ள ஒருவரும் குடிக்காவிட்டால் எத்தனையாயிரம் தொழிலாளர் களுக்கு வேலை இல்லாமல் போய் விடும். அந்தக் குடும்பங்கள் என்ன செய்வது? அந்தக் குடும்பத்தினர் உண்ண வேண்டும்; உடுக்க வேண்டும்; கல்வி கற்க வேண்டும். அதற்காகத்தான் நான் உதவி செய்கிறேன். இந்த ஊரில் நான் மட்டுமா குடிக்கிறேன். கனகன் இரகசியமாக குடிப்பான். அவன் ஆசிரியராக இருந்து அதிபராகப் பதவி உயர்வு பெற்று ஓய்வெடுத்தவன். ஒருநாள் எனக்குச் சொன்னான்; “கெங்கா குடிப்பது தவறில்லை. ஆனால் அதை யாரும் காணாமல் குடிக்க வேண்டும். குடித்தால் வீட்டில் இருக்க வேண்டும். அளவாகக் குடிக்க வேண்டும். அளவுக்கதிகமாகக் குடித்து விட்டுத் தெருக்களிலும் வீதிகளிலும் உடுதுணியில்லாமல் விழுந்து கிடப்பது தான் குற்றம். உடம்புக் களைப்புக்காகக் குடித்து விட்டு சாப்பிட்டுவிட்டு படு. உன்னை யாரும் குற்றஞ்

சொல்லமாட்டார்கள்'' என்றான். அதன்படி தான் நான் இப்போது நடக்கிறேன். நான் குடிப்பது எனது மனைவிக்கோ அல்லது அப்பாவுக்கோ தெரியாது. முன்பு மாதிரி நான் குடித்து விட்டு வீதியில் விழுந்து கிடக்கிறேனா…? இதைக் குறையாக நினைக்காதை'' என்றான் கெங்காதரன்.

''நீ எதையும் சொல். ''இழிந்த மனம் படைத்தவர்கள் தங்களைவிட இழிவாக நடப்பவர்களைக் கண்டால், தாம் அவரை விட உயர்ந்தவர்கள் என எண்ணிப் பெருமைப் படுவார்கள்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீ உதாரணத்திற்கு ஏன் கனகனையும் சிவசுந்தரமூர்த்தியையும் எடுக்கிறாய். நல்லவர்களை எடன். விக்னேஸ்வரமூர்த்தி ஐயா, வேலாயுதபிள்ளை அண்ணை, தணிகாசலமண்ணை ஆகியோர் எப்படி வாழ்கிறார்கள். அவர்களைப் போல வாழ வேண்டும் என்று ஏன் நினைக்கிறாய் இல்லை. பன்றி எப்பொழுதும் பன்றியோடுதான் சேரும். பசுவைப்பற்றி நினைக்க மாட்டாது'' என்றான் நவராசா.

கெங்காதரன் பேசாமல் பெரிதாகச் சிரித்தான் ''கனகன் எத்தனை பெண்பிளைகளுடன் தொடர்பாக இருந்தவன். அவனை விட அவன்ரை தகப்பனைப் பற்றி உனக்குத் தெரியும் தானே… இவர்களையெல்லாம் திருத்த நீ முயற்சித்தனியா..?'' கேலியாகச் சிரித்தான் கெங்காதரன்.

''அவர்களுக்கும் எனக்கும் தொடர்பில்லை. அவர்கள் எனது வீட்டுக்கு வருவதும் இல்லை. அதே போல நீயும் எனது தொடர்பைவிடு. நீ

வருவது எனது மனைவிக்கும் பெற்றோருக்கும் பிடிப்பதில்லை. அவர்கள் தினமும் என்னை ஏசுகிறார்கள். உனக்கு ரோசமிருந்தால் இன்றுடன் இங்கு வருவதை விட்டுவிடு'' என்றான் நவராசா.

இரண்டு தினங்களுக்கு முன்பு தணிகாசலம் கூறிய வார்த்தைகள் அவனது காதில் ஒலித்தன; ''நவம், நீ நல்லவன். நான்கு நாட்களுக்கு தீயவர்களுடன் சேர்ந்து திரிந்தால் அத்தீயவர்களின் பழக்கம் உன்னையும் கெடுத்து விடும். உனது பெற்றோர் நீ கெங்காதரனுடன் நட்புக் கொண்டிருப்பதை நினைத்துக் கவலைப்படுகிறார்கள் நீ, உனது தாய் தந்தையர்க்குப் பெரிதாக எதையும் கொடுக்கத் தேவையில்லை. ஏனென்றால் அவர்களுக்கு வேண்யடிவற்றைச் செய்து வருகிறாய். அதனால் அவர்கள் மனம் மகிழ்கின்றனர். ஆனால் உனது நட்பை நினைத்து வேதனைபடுகின்றனர். அவர்களை மகிழ்ச்சியடைய வைக்க வேண்டுமானால் நீ கயவனான கெங்காதரனின் நட்பைத் துறக்க வேண்டும். உனது தாய் தந்தையரை மகிழ்விக்கா விட்டால் நீ கடவுளை வணங்குவதிற் கூடப் பலனிருக்காது. அதனால் அவனது நட்பை விட்டு விடு'' என்றார்.

நவராசாவுக்கு அவனது நட்பால் பெரும் துன்பமாக இருந்தது. கதிரேசன் சொன்னார்; ''தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன் என்பார்கள். உனக்கு நான் எதையும் சொல்லத் தேவையில்லை. கெங்காதரன் முன்பு போலக் குடிக்கிறான். வசந்தினியின் வீட்டுக்குச் செல்கிறான் அதனால் ஊரில் அவனைப் பற்றிக் கேவலமாகக் கதைக்கிறார்கள். அவனுடன் நீ ஏன் நட்பு

வைத்திருக்கிறாய்? துர்க்காவுக்கும் அது பிடிப்பதில்லை. நண்பர்கள் தீயவற்றைச் செய்தால் அதைக் கண்டிப்பது நண்பரின் கடமை. இவன் நட்புக் கொள்ளத் தகாதவன். அவனுடன் நீ சேர்ந்தால் உன்னைப் பற்றியும் தவறாகத்தான் மக்கள் நினைப்பார்கள். இழிந்த மனம் படைத்தோர் தங்களை விட இழிவாக நடப்பவரைக் கண்டால் தாம் அவர்களை விட உயர்ந்தவர்கள் என்று எண்ணிப் பெருமைப்படுவார்கள். அப்படித்தான் நீ நினைக்கிறாயா…?''

''அப்பூ'' அலறினான் நவராசா.

''அப்படித்தான் நான் நினைக்கிறேன். அதனால் நீ அவனது நட்பை விடும்வரை நான் உனது வீட்டுக்கு வரமாட்டேன்'' என்றார் கதிரேசன். அதை நினைக்க நவராசாவுக்கு வேதனையாக இருந்தது.

''என்னடா நவம் யோசிக்கிறாய்? உன்னுடைய நட்பை என்னால் துண்டிக்க முடியாது''

அதைக் கேட்ட நவராசாவுக்கு கோபம் வந்தது; ''கதைக்காமல் எழுந்து வெளியே போ. இதை உனக்கு நான் எத்தனை தடவை சொல்வது?'' என்றான்.

---

**1074. அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்**
**மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.**

---

கீழ் மக்கள் தமக்குக் கீழ்பட்டு நடப்பவர்களைக் கண்டால், தாம் அவர்களை விட மேலானவர்கள் என்று எண்ணி இறுமாப்படைவர்.

## அச்சமான ஒழுக்கம்

“என்னை வராதை என்று மட்டும் சொல்லாதையடா…?” என்று கலங்கிய கெங்காதரன் எழுந்து சென்றான்.

“கீழ்மக்கள் சற்று ஒழுங்காக இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அச்சமே ஆகும். பலருக்குச் சமூக விரோத செயல்களில் ஈடுபடப்பயமே காரணமாகும். காவல்துறையினருக்குப் பயம்; சிறைக்குப் பயம்; தண்டனைக்குப் பயம். கிருஷ்னன் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டு வேலைகளைச் செய்தவன். அவருடன் பிரச்சினைப்பட்டு வேலையை விட்டு விட்டான். அவனுக்கு யாரும் வேலை கொடுக்க மாட்டார்கள். அதனால் துளசியிடம் சென்று பரமேஸ்வரனிடம் ஒரு வேலை வாங்கித் தருமாறு கேட்டிருக்கிறான். அவள் வேலையாகி ஒருமாதம் தான் ஆகிறது. அதை விடக் கிருஷ்னன் கூடாதவன். எந்த நேரம் எதைக் களவெடுப்பான் என்று சொல்ல முடியாது. அதனால் துளசி கேட்கவில்லை. என்னிடம் அவனுக்கு ஒரு வேலை கொடுக்குமாறு சொன்னாள். கிருஷ்னனைத் துளசி வெருட்டியுள்ளாள். அதனால் அவன் பயந்து விட்டான். நானும் பல நிபந்தனைகளுடன் தான் வேலை கொடுத்தேன். இப்போது ஒழுங்காக வேலை செய்கிறான். அதற்குக் காரணம்அச்சம் தான். தான் குற்றச் செயல்களில் ஈடுபட்டால், நான்

தன்னைவேலையை விட்டு நீக்கிவிடுவேன் என்ற பயம். அதே போல நீ கெங்காதரனை வீட்டுக்கு வரவேண்டாமென்று வெருட்டினால் அவன் திருந்துவான் என்று எதிர்பார்க்கிறாயா?'' என்று கேட்டான் இராசகோபால்.

''இவனைத் திருத்த முடியாது. இவனுக்கு எதற்கும் பயம் கிடையாது'' என்றான் நவராசா.

கெங்காதரன், நவராசா அப்படிச் சொல்வானெனச் சற்றும் எதிர்பார்க்கவில்லை; ''கதைக்காமல் எழுந்து வெளியே போ. இங்கு வரவேண்டாம் என்று உனக்கு எத்தனை தடவைகள் சொல்வது'' என்று நவராசா கூறிய வார்த்தைகள் இடியோசை போல ஒலித்துக் கொண்டிருந்தன. அவன் மன அமைதியை நாடி வசந்தினியின் வீட்டுக்கு வந்தான்.

''குடித்திருக்கிறீர்கள்'' என்றாள் வசந்தினி.

''மனம் சரியில்லை'' என்றான் கெங்காதரன்

''உங்களைத்தான் நான் அதிகமாக நேசிக்கிறேன். அது உங்களுக்குத்தெரியும். அப்படியிருந்தும் நீங்கள் ஏன் குடிக்கிறீர்கள்? மனம் சரியில்லை என்கிறீர்கள். உங்களை எப்படித் திருப்திப்படுத்துவதென்று கூறுங்கள், நான் உங்களுக்காக என்னை மாற்றிக் கொள்கிறேன்''

‘‘என்னை விட உமக்கு மோட்டார் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு திரிபவனில் தான் மோகம் அதிகம்’’ கெங்காதரனின் குரல் கரகரத்தது.

வசந்தினி அதிர்ச்சியடையாது அவனை மோகத்துடன் பார்த்துச் சிரித்தாள்; ‘‘விசர்க்கதை கதையாதைங்கோ. வேண்டுமானால் நான் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி மீது சத்தியம் செய்கிறேன். அவனது எனது கணவரின் ஒன்று விட்ட தம்பி. அவரின் சகோதரியுடனும் கணவனுடனும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஞ்சத்திருவிழாவன்று லிங்கம் தேநீர்க் கடையில் ஒன்றாக இருந்து சாப்பிட்டதை இராசசேகரம் வாத்தியார் கண்டவர். கேட்டுப் பாருங்கோ.’’

அன்பொழுகக் கதைத்துக் கொண்டிருக்கும் வசந்தினியைக் கெங்காதரன் பாச மிகுதியுடன் பார்த்தான். ‘‘அவள் சொல்வதில் உண்மையில்லாமல் இல்லை. நான் அளவுக்கதிகமாகக் குடிப்பதனால் தான் என்னை அவள் வெறுத்தாள். பின் நான் குடிப்பதை நிறுத்தியதும் கடைக்கு வந்து அன்பாகப் பேசி என்னைச் சமாதானப்படுத்தி அழைத்து வந்து விட்டாள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது’’ என்று நினைத்தான் கெங்காதரன்.

‘‘மனிதராகப் பிறந்த எல்லோரும் தவறு செய்பவர்கள் தான். தவறுசெய்பவர்கள் மற்றவர்களுக்குத் தெரியாது செய்தல் வெண்டும். நீங்கள் குடிக்காமல் விட்டால், நீங்கள் என்னிடம் வந்து போவதைப் பற்றி யாரும் பெரிதாகக் கதைக்க மாட்டார்கள். நீங்கள் குடியை விட்டால்

நவராசா உங்கள் நட்பை விடமாட்டான். தயவு செய்து எனக்காகக் குடிப்பதை விடுங்கள்'' என்றவாறு அணைத்தாள் வசந்தினி.

''கண்டாலின்பம் கேட்டால் கீதம் உண்டா லமுதம்
- முகர்ந்தால் மோகம்
தொட்டால் சுவர்க்கம் ஐந்து புலனுள் ஒன்றால்
- நுழைந்து ஐம்பெருமின்பம்
நித்தமளிக்கும் நிலவொளி யணங்கு''

கெங்காதரன் புலம்பியது வசந்தினிக்குக் கேட்டது.

மெல்ல மெல்ல அணைப்பை இறுக்கிய வசந்தினி சொன்னாள்; ''உங்களைப் பிரிந்து என்னால் வாழ முடியாது. அதனால்தான் என்னை விட்டுப் பிரிந்து சென்ற உங்களைத் தேடி வந்தேன். நீங்கள் குடிப்பதானால் இங்கு வரவேண்டாம்'' கைகளைச் சிறிது தளர்த்தினாள் வசந்தினி.

எல்லையில்லா பேரின்பத்தைக் கொடுத்த அந்தச் சுகம் சிறிது குறைந்ததும் அவதிப்பட்ட கெங்காதரன் சொன்னான்; ''இனிமேல் நான் குடிக்கவில்லை. நான் விரும்புவது உம்மைத்தான். நீர் கிடைத்தால் நான் குடியை விடத்தயார்'' முனகினான் கெங்காதரன்.

''உங்களில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் எனக்காக எதையும் செய்வீர்கள்'' கிசுகிசுத்தாள் வசந்தினி. அன்று என்றுமில்லாத இன்பம் அவனுக்குக் கிடைத்தது.

அன்று இரவு கெங்காதரன் நவராசாவின் வீட்டுக்கு வந்து, நவராசாவிடம் சொன்னான்; ‘‘இனிமேல் நான் குடிக்கமாட்டன். அதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தனான். நான் வாறன்’’ கெங்காதரன் நவராசாவின் பதிலை எதிர்பாராது நடந்தான். நவராசா அவனை மறிக்கவில்லை.

‘‘கீழ்மக்கள் சற்று ஒழுக்கமாக இருக்கிறார்களென்றால் அதற்குக் காரணம் அச்சமே ஆகும். அவர்கள் உண்மையாகவே திருந்திவிட்டார்கள் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் விரும்பும் பொருள் கிடைப்பதேயாகும். யாரும் வசந்தினி இன்னொருவனுடன் திரிகிறாள் என்பதால் தான் கெங்காதரன் அளவுக்கதிகமாகக் குடித்தான் இப்போ அவள் சேர்ந்து விட்டாள். விரும்பியது கிடைத்து விட்டது. அதனால் கெங்காதரன் கொஞ்ச நாட்களுக்கு குடிக்க மாட்டான். இருந்தாலும் நீங்கள் அவனோடு சேர வேண்டாம்’’ என்றாள் துர்க்கா.

‘‘சாக்கடை நீரை சந்தணமென்று
என்னுட லெங்கும் அள்ளிப்பூசி
நறுமணமென்று புலம்பிய போது
நாற்றமென்று அறிந்தவர் கூறினர்
பூச்சியும் புழுவும் கிருமியும் சேர்ந்து
உடலைத் தாக்கி மனதைக் கொன்றது
பல்வகைக் கழிவுகள் சேரும் குழியை
அமிர்தம் சுரக்கும் பெட்டகமென்றும்
நறுமணம் வீசும் ரோஜாவென்றும்
நினைத்தது ஒருநாள் கலைந்தது
நீயும் வேண்டும் நானும் வேண்டும்

யார் வந்தாலும் அணைத்திடல் வேண்டும்
என்று எண்ணும் எண்ணம் கொண்ட
அழகிய உருவம் கசந்தது மனதில்
என்னில் கவர்ச்சி குறைய அவள்
இன்னொரு துணையைத் தேடிக் கொண்டு
என் முன்னாலேயே கலகலவென்று கதைபலபேசி
இந்திய வண்டியில் இன்பமாய் செல்கிறாள்''
என்று கெங்காதரன் கூறிய வார்த்தைகள் நவராசாவின் காதில் ஒலித்தன.

''கெங்காதரன் கடைசிவரையும் திருந்தாமாட்டான். இனியாவது அவனுடன் கொண்ட நட்பை விடுங்கள்'' கலங்கினாள் துர்க்கா.

''கயவர்கள் திருந்தமாட்டார்கள். வசந்தினி தன்னுடன் உறவுள்ள அனைவரையும் மயக்குமொழி பேசி ஏமாற்றி வைத்துள்ளாள். அவளை வெல்வது கஷ்டம்'' என்று நினைத்தான் நவராசா.

''வசந்தினி தனது கணவனையே ஏமாற்றித் தனது பிடிக்குள் வைத்திருக்கிறாள். மற்றவர்களை மயக்குவது பெரிய காரியமல்ல. கெங்காதரன் திருந்தமாட்டான். நீங்கள் தான் திருந்த வேண்டும்'' என்றார் துர்க்கா.

''அது நியாயம்'' என்று நினைத்தான் நவராசா.

---

**1075. அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம்**
**அவா உண்டேல் உண்டாம் சிறிது.**

---

கீழ் மக்கள் ஒழுங்காக வாழ்வதற்குக் காரணம் அச்சமாகும். எல்லா நிலையிலும் ஒழுக்கமாக அவர்கள் வாழ்கிறார்கள் என்றால் அவர்கள் விரும்பும் பொருள் கிடைப்பதே காரணமாக இருக்கும்.

## அடித்தால் ஒலிக்கும் பறை

ஓர் அழகான மோட்டார் வண்டியை நவராசா இராசகோபாலுக்குக் கொடுப்பதற்காக இராசகோபாலின் வீட்டுக்குக் கொண்டு வந்தான். அவன் வந்த போது அங்கு கிருஷ்னன் இருந்தான்.

மோட்டார் வண்டியைக் கண்ட வள்ளியம்மை சொக்கிப் போனாள். அதைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள் கதவைத் திறந்து உள்ளே ஏறி அமர்ந்தாள். மோட்டார் வாகனம் குளிரூட்டப்பட்டிருந்தமையால் அவளுக்கு அது இதமாக இருந்தது.

“மனிசியை ஒருமுறை வீதியுலா கொண்டு செல்” என்றான் நவராசா.

இராசகோபால் மோட்டார் வண்டியை இயக்கினான். இருவரும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தனர். குருக்கள் இராசகோபாலின் மோட்டார் வாகனத்திற்குத் திருநீறு பூசினார். பின்பு மந்திரித்து நூல் கட்டினார்.

“அழகான வண்டி. கவனமாக ஓட்டு. இராசகோபால், கிருஷ்னனை மிகவும் அவதானமாக கண்காணித்துக் கொள். கயவர்கள் தாம் கேட்ட

இரகசியங்களை வலியப் போய்ப் பிறருக்குச் சொல்லி வெளிப்படுத்துவார்கள். கிருஷ்னன் கனகனுடன் சேர்ந்து இருக்கும் போது அவனைப் பற்றிய தகவல்களையெல்லாம் சந்திகளிலும் தெருக்களிலும் சொல்வான். சிவசுந்தரமூர்த்தியின் வீட்டு இரகசியங்களையும் கண்ட கண்ட இடங்களில் சொல்லித் திரிந்தவன். அதனால் தான் அவர்கள் இரகசியமாகச் செய்த பல விஷயங்கள் அம்பலத்திற்கு வந்தன. சிவசுந்தரமூர்த்தியும் கனகனும் கிருஷ்னனைப் போன்றவர்கள் தான். அதனால் அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. உன்னிடம் வேலைக்குச் சேர்வதற்குச் சில நாட்களுக்கு முன் கிருஷ்னன் உனக்கும் துளசிக்கும் கள்ளத் தொடர்பிருப்பதாக எனது காதிற்குக் கேட்கக் கூடியதாகக் கதைத்தவன். திரும்பவும் சொல்கிறேன். கயவர்கள் தாம் கேட்ட இரகசியங்களை வலியப் போய்ப் பிறருக்குச் சொல்வார்கள். அதனால் அவர்கள் 'அடித்து ஒலி எழுப்பப்படும் பறையைப்' போன்றவர்கள்'' என்றார் குருக்கள்.

மோட்டார் வண்டியைக் கண்டதும் உண்டான குதூகலம் பட்டென்று வள்ளியம்மைக்கு மறைந்து விட்டது. இராசகோபால் பதறிப் போனான். அவன் பண்டிதரைக் கடவுளாக நினைப்பவன். அத்துடன் துளசியை தனது சகோதரியாக நினைத்துப் பூசிப்பவன்.

''கயவர்கள் பழிக்கு அஞ்சாது பலவாறு கதைப்பார்கள். தமக்கு வரும் நன்மைகள் யாவும் இறைவனால் தமக்குத் தரப்படுவனவென்றும், தீமைகளை நாமே தேடிக் கொள்கிறோம் என்றும்

நல்லவர்கள் நினைப்பார்கள். ஆனால் கயவர்கள் நன்மைகள் யாவும் தம் முயற்சியால் தேடப்படுவதாகவும், தீமைகள் அனைத்தும் இறைவனால் தமக்குக் கொடுக்கப்படுவதாகவும் நினைப்பவர்கள். அதற்காகத்தான் அவர்கள் கோயில் களுக்கு வந்து சுவாமி தரிசனஞ் செய்கிறார்கள். நல்லவர்களுக்குத்தான் நாம் உதவி செய்தல் வேண்டும். கயவர்களுக்கு உதவினால் தீமைகள் தான் வரும். திரும்பத் திரும்ப உதவி செய்தாலும் கயவர்களின் குணத்தை மாற்ற முடியாதென்பதற்கு இவ் ஊரில் வாழும் பல பிரமுகர்களை உதாரணமாகக் கூறலாம். அவர்களைப் பற்றி நான் கூறவில்லை. அவர்களை உனக்குத் தெரியும். நீ அவதானமாக இரு'' என்றார் குருக்கள்.

இராசகோபாலின் மனம் வாடிச் சோர்ந்தது; ''இவற்றையெல்லாம் உணர்ந்து தான் துளசி வேலைக்குச் செல்கிறாள். நான் இனிமேல் எக்காரணங் கொண்டும் துளசியின் வீட்டுக்குச் செல்லக் கூடாது'' என நினைத்தான்.

''கிருஷ்னனை வேலைக்குச் சேர்க்க வேண்டாமென்று முன்பே நான் உங்களுக்குச் சொன்னனான். நீங்கள் கேட்கவில்லை. அவன் வந்த சில நாட்களுக்குள் சிவசுந்தரமூர்த்தியைப் பற்றியும் கனகவாத்தியரைப் பற்றியும் பல தகவல்களை எனக்குச் சொன்னவன். சிவசுந்தரமூர்த்தி பெம்பிளைக் கள்ளனாம். பக்கத்து வீட்டுப் பரிமளத்தோடு தொடர்பு வைத்திருக்கிறானாம். இப்படிப் பல கதைகளைச் சொன்னவன். பரிமளமக்கா இருபது இருபத்தைந்து வருடங்களாகச்

சிவசுந்தரமூர்த்தியின் குடும்பத்துடன் பேசுவதில்லை. அப்படியிருக்க வாய் கூசாமல் சொல்கிறான். அதைவிடப் பெண்ணான எனக்கு இந்தக் கதையை எப்படிக் கூற முடியும்? அவனை வேலையால் துரத்துங்கள். இனி அவன் எக்காரணங்கொண்டும் வீட்டுப் பக்கம் வரக்கூடாது'' என்றாள் வள்ளியம்மை.

இராககோபாலும் வள்ளியம்மையும் மோட்டார் வண்டியால் இறங்கினர். வள்ளியம்மை இறங்கியதும் தாமதியாது வீட்டினுள்ச் சென்றாள். அது நவராசவின் மனதை வாட்டியது. நிமிர்ந்து இராசகோபாலின் முகத்தைப் பார்த்தான். அது கலவரமடைந்திருந்தது.

``உனக்கு வண்டி பிடிக்கவில்லையா...?'' என்று கேட்டான் நவராசா.

இராசகோபால் அதற்குப் பதில் கூறாது நவராசாவுக்கு அருகில் நின்ற கிருஷ்னனுக்குச் சொன்னான் ``கிருஷ்னா நீ உடனே எனது தென்னத் தோப்பிற்குப் போ..'. இனி அங்குதான் உனக்கு வேலை. எந்தத் தேவைக்கும் நீ வீட்டுப்பக்கம் வரக்கூடாது. உடனே போ'' என்றான்.

**1076. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட**
**மறைபிறர்க்கு உய்த்து உரைக்க லான்.**

கயவர் தாம் கேட்டறிந்த இரகசியங்களைப் பிறருக்கு வலியச் சென்று சொல்வதால், அவர்கள் அடித்து ஒலி எழுப்பிச் செய்தியைச் சொல்லும் பறையைப் போன்றவர்களாவர்.

## உதவிக்கான காரணம்

அதிர்ச்சியுடன் கிருஷ்னன் இராசகோபாலைப் பார்த்தான்; "இராசகோபால் மிகவும் நல்லவன்; இரக்க சுபாவம் உடையவன். தாராள மனப்பான்மை உடையவன். இதுவரை பலத்துப் பேசியதே கிடையாது. அப்படியிருக்க திடீரென்று இப்படி ஏன் கோபமாகப் பேசுகிறான்?" என்று நினைத்தான் கிருஷ்னன்.

"நல்லவர்களுடன் நல்லமுறையில் நடக்க வேண்டும். தீயவர்களுடன் கடுமையாக நடத்தல் வேண்டும். தீய செயல்களைச் செய்யும் கயவர்கள் மற்றவர்களை அடித்து முறிக்கும் முரடர்களுக்குத் தான் பயப்படுவார்கள். நீ மிகவும் அவதானமாக வேலை செய்தல் வேண்டும். கனகவாத்தியாருக்கும் சிவசுந்தரமூர்த்திக்கும் விட்ட திருகுதாளங்களை எனக்கு விட்டாயானால் உன்னை அடித்து முறித்து விடுவேன். அதிபர் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்காட விரும்பாதபடியால் தான் கனகன் பயமில்லாமல் வட்டிக் காசும் செலவுக் காசும் கேட்டவன். தனபாலன் காணிப் பிரச்சினையின் போது குடித்து விட்டுக் கத்தியுடன் கனகனின் வீட்டுக்குச் சென்று முற்றதில் நின்ற வாழையை வெட்டி வீழ்த்தினான்; குரைத்துக் கொண்டு வந்த நாயை வெட்டினான். அந்த நேரம் வீட்டில் இருந்த கனகன் ஒளிந்திருந்தான்; "கனகன், நீதிமன்றத்திற்குப் போனால் கொலை விழும்: என்று கத்தினான் தனபாலன். அதற்குப் பயந்த கனகன்

“ஆறுமாதகாலம் வீட்டால் வெளிக்கிடவில்லை. கயவர்கள் தம் கன்னத்தைக் குத்தி உடைக்கின்ற முரடர்களுக்கு மட்டும்தான் பயப்படுவார்கள்; நல்லவர்களை ஏமாற்றுவார்கள். அதனால் நீ உடனே போ” என்றான் இராசகோபால்.

கிருஷ்னன் ஏதோ கதைக்க முற்பட்டான். அதைக் கண்ட இராசகோபாலுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது; “நீ என்னைக் கனகன் என்று நினைத்தாயா…? இல்லைச் சிவசுந்தரமூர்த்தி என்று நினைத்தாயா…? போடா தென்னந் தோப்புக்கு… அங்கே வேலை செய்ய முடியவில்லால் வீட்டை போ”

கிருஷ்னன் பயந்து போனான். சிவசுந்தரமூர்த்தி ஆயிரம் ரூபா சம்பளமாகக் கொடுப்பார். அதை முழுமையாகக் கொடுக்க மாட்டார். முதலாம் திகதி கொடுக்க வேண்டிய சம்பளத்தை வாங்கி முடிக்க பதினைந்தாம் திகதி வந்து விடும். ஆனால் இராசகோபால் மூவாயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்கிறான். அதுவும் மாதம் பிறந்தன்று கொடுத்து விடுவான். அதைவிட வள்ளியம்மை மிஞ்சும் சோறு கறிவகைகளைக் கட்டிக் கொடுப்பாள். தோட்டத்தில் விற்றது போக மிஞ்சும் காய்கறி வகைகளைக் கொடுப்பாள். அவர்களிடம் பல கறவை மாடுகள் நின்றன. அதனால் தேநீருக்குப் பதிலாக பசுப்பால் கொடுப்பாள்; தயிர் கொடுப்பாள். இத்தனையையும் இழக்கக் கிருஷ்னனுக்கு மனம் வரவில்லை. அதனால் நடந்தான்.

“வேலைக்குச் செல்கிறாயா..? இல்லை வீட்டுக்குச் செல்கிறாயா..?” அடிப்பதைப் போலக் கேட்டான் இராசகோபால்.

“வேலைக்குத்தான் போகிறேன்..” என்று சொல்லிவிட்டுச் சென்றான் கிருஷ்னன்.

“உனக்கு இப்படிக் கோபம் வந்ததை நான் பார்க்கவில்லை. ஏன்? என்ன நடந்தது?” என்று கேட்டான் நடராசா.

“நவம், நீ என்னுடைய நண்பன். சொல்லாமல் விட முடியாது. இவன் கோயிலடீலை துளசியைப் பற்றியும் என்னைப் பற்றியும் தவறாகக் கதைத்தவனாம்..” கலங்கினான் இராசகோபால்.

“கயவர்கள் எப்பொழுதும் கதைகட்டிக் கதைப்பதிலும், இரகசியங்களை வெளிப்படுத்துவதிலும் வல்லவர்கள். அவர்கள் முரடர்களுக்கு தான் பயப்படுவார்கள். கிருஷ்னனை வேலைக்குச் சேர்க்க வேண்டாமென்று நான் உனக்கு எத்தனை தடவை சொன்னனான். கெங்காதரனுடன் சேர்ந்து திரிவான். அவன் மது மயக்கத்தில் ஏதாவது உழறினால் அதைப் பெரிதாக வீதிகளிலும் சந்திகளிலும் கதைப்பான். அது அவனின் இயல்பு” என்றான் நவராசா.

“கிருஷ்னனை வேலையிருந்து நீக்கினால் இல்லாதவற்றையெல்லாம் கதைத்துக் கொண்டு திரிவான். அதனால் அவனை நான் வேலையில் இருந்து நீக்காது தென்னந் தோப்பில் வேலை

செய்யச் சொல்லியுள்ளேன்'' என்றான் இராசகோபால்.

''இன்று உனக்க மனநிலை சரியில்லை. வளியம்மையும் துக்கத்துடன் இருக்கிறாள். அதனால் இன்னொரு நாளைக்கு மோட்டார் வாகனத்தை வந்துபார்'' என்றான் நவராசா.

''இல்லை... இல்லை இது நல்ல வாகனம். இன்று நல்ல நாள். காசைக் கொண்டு போ'' என்றான் இராசகோபால்.

இருவரும் உள்ளே சென்றார்கள். வள்ளியம்மை மகிழ்ச்சியுடன் வரவேற்றான்; ''எனக்கு மோட்டார் வாகனத்தை நன்றாகப் பிடித்து விட்டது'' என்றாள்

வள்ளியம்மை கொண்டு வந்து கொடுத்த தேநீரை இருவரும் குடித்தனர். இராசகோபால் நவராசா சொன்ன பணத்தைக் கொடுத்தான். பின் அவனை வீட்டில் விடுவதற்காக மோட்டார் வண்டியில் ஏற்றிச் சென்றான்.

''கவலைப்படாதே இராசகோபால். கயவர்கள் யாருக்கும் உதவி செய்யமாட்டார்கள். அவர்களச் எச்சிற் கையால் கூடக் காசும் கலைக்க மாட்டார்கள். கிருஷ்னன் கல்வியறிவற்றவன். கல்வியறிவுள்ள கனகன் இவனை விடக் கேவலமானவன். அவன் தன்னை வெட்டச் சென்ற தனபாலனுக்குப் பயந்து அவன் கேட்பதையெல்லாம் கொடுத்தவன். ஆனால் கோயிலுக்கோ பாடசாலைக்கோ எதுவும் கொடுக்க மாட்டான். அது

கயவரின் இயல்பு'' என்றான் நவராசா. இராசகோபால் எதுவும் பேசவில்லை.

**1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுஉடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு.**

கயவர்கள் தமது கன்னத்தில் அடித்துக் காயப்படுத்தும் முரட்டுச் சுபாவம் உடையவர்களுக்கு ஏதாவது கொடுப்பார்களே தவிர மற்றவர்களுக்குத் தாம் உண்ட எச்சில் உணவைக் கூடக் கொடுக்க மாட்டார்கள்..

## வருந்திப் பெறும் உதவி

பண்டிதரின் நினைவு நாளைக் கொண்டாட வேண்டும் என எண்ணிய சனசமூக நிலையத்தினர் அன்று மாலை ஆறு மணிக்குச் சனசமூக நிலையத்தில் அதன் தலைவர் வேலாயுதபிள்ளையின் தலைமையில் கூட்டம் கூடினர். தலைவர் தலைமை உரையாற்றினார்; ''பண்டிதர் இக்கிராம மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றியவர் என்பதை இங்கு யாரும் மறுக்க மாட்டார்கள். அவருக்கு அவர் வாழுங் காலத்தில் விழா எடுக்க முற்பட்ட போதொல்லாம் அவர் ஒப்புக் கொள்ளவில்லை. அவர் பல இலக்கண நூல்களை எழுதியள்ளார். நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி மீது பல பள்ளுப் பாடல்களைப் பாடியுள்ளார். மகா கணபதியின் ஊஞ்சல் பாட்டையும் பாடியுள்ளார். இதைத் தவிர இச்சனசமூக நிலையத்தில் பணம் பெறாது முப்பது வருட காலமாகப் பிள்ளைகளுக்குத் தமிழையும் வட மொழியையும் ஆங்கிலத்தையும் கற்பித்துள்ளார். அதற்கு நாம்

பணம் கொடுப்பதனால் இலட்சக்கணக்கில் கொடுத்திருத்தல் வேண்டும். அவர் தான் செய்யும் செயல்களுக்காகப் பாரட்டுக்களையோ பரிசில்களையோ எதிர்பார்த்ததில்லை. சிலர் ஒரு நல்ல காரியத்தைச் செய்ததும் தம்மை பிறர் பாராட்ட வேண்டுமென்று நினைப்பார்கள். மகா கணபதிக்குச் செய்யும் சேவைகளைக் கூட கூட்டத்தில தெரிவிக்க வேண்டுமென நினைக்கிறார்கள். ஆனால் பண்டிதர் யாருக்கும் தெரியாமல் அரிய பல சேவைகளைச் செய்து மறைந்திருக்கிறார். அதனால் பண்டிதருக்கு எடுக்கப் போகும் விழாவை மிகவும் சிறப்பாகச் செய்தல் வேண்டும். இதற்காகச் சபையினரின் ஆலோசனைகளை வேண்டி நிற்கிறேன்'' என்றார்.

விக்னேஸ்வரமூர்த்தி எழுந்து சொன்னார்; ``பண்டிதரது சேவையைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. இலக்கியச் சேவை செய்தமைக்காக இலக்கியப் பேரவை மண்டபத்திற்கு பண்டிதரின் பெயரைச் சூட்ட வேண்டும்'' விக்னேஸ்வரமூர்த்தி அப்படிச் சொன்னதும் சபையினர் கரகோஷம் செய்தனர்; ``அவரின் நினைவாக அறிஞர்களிடம் கட்டுரைகள் பெற்று ஒரு நூல் வெளியிட வேண்டும். அத்துடன் வறிய மாணவர்களின் கல்விக்காக பண்டிதரின் பெயரில ஒரு நிதியம் ஆரம்பித்தல் வேண்டும். விரும்பினால் கஷ்டப்படும் பண்டிதரின் மகளுக்கு ஒரு தொகைப் பணத்தை வழங்கலாம்''

``நான் விக்னேஸ்வரமூர்த்தி ஐயா கூறியவற்றை ஏற்கிறேன். அதற்காக ஒரு இலட்சம் ரூபா தருகிறேன்'' என்றான் இராசகோபால்.

வேலாயுதபிள்ளை எழுந்து சொன்னார். “நானும் ஒரு இலட்சம் ரூபா தருகிறேன்”

“நானும் ஒரு இலட்சம் ரூபா தருகிறேன்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

ஜெயபாலன் எழுந்து சொன்னான்; “நான் ஐந்து இலட்சம் ரூபா தருகிறேன்”

நவராசா எழுந்து சொன்னான்; “நானும் அந்தத் தொகையைத் தருகிறேன்”

கீதாஞ்சலி எழுந்தாள்; “எனக்குப் பண்டிதர் கல்வி கற்பித்தவர். இங்குள்ள பிள்ளைகளின் அறிவைப் பார்த்த போது, பண்டிதரின் சேவையின் தன்மை புரிகிறது. நான் பண்டிதரின் மகளான துளசிக்கு இரண்டு இலட்ச ரூபா கொடுக்கிறேன்”. அப்போது சபையினர் கரகோஷம் செய்தனர்.

தனபாலசிங்கம் கைதட்டியவாறு எழுந்து சொன்னார்; “மகா கணபதியின் பாதங்களை அடைந்த பண்டிதரின் ஆத்மா எம்முடன் இருந்து உதவி செய்யும்; “நான் ஓர் இலட்ச ரூபா பண்டிதரின் நிதிக்கும், இன்னோர் இலட்ச ரூபா பண்டிதரின் மகள் துளசிக்கும் கொடுக்கிறேன்.”

“மக்கள் தம்மாலியன்ற பங்களிப்பைச் செய்யலாம்” என்றார் வேலாயுதபிள்ளை

கூட்டம் முடிந்த பின்பு ஜெயபாலன் சிவசுந்தரமூர்த்தியைக் கேட்டான்; “உங்களின் பிள்ளைகள் பண்டிதரிடம் படிக்கவில்லையா....?”

“படித்தவைதான். நான் பண்டிதர் உயிரோடு இருக்கும் போது கொடுத்தனான்”

ஜெயபாலன் சிரித்தான். “நான் நம்பமாட்டேன். ஏன் பொய் சொல்கிறீர்கள்?’

“நான் இலட்சக்கணக்கில் கொடுக்க வசதியானவனா? ஆறுதலாகக் கொடுப்போம்”

“நீ கொடுக்கிற தொகையை சொல்லன்”

“இப்பென்ன அவசரம்? மக்கள் முண்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆறுதலாக எழுதுவம்” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“பண்டிதருக்குக் கொடுக்கத் தான் வேண்டும். பிறகு கொடுப்பம் வா” என்றான் கனகன்.

“எவ்வளவு பணம் எழுதிறதென்று சொல்லுங்கோ. நான் தலைவரிடம் சொல்கிறேன்” என்றான் கிருஷ்னன்.

“நீ போடா. எனக்கு என்னுடைய வேலை தெரியும்” என்று கனகன் எழுந்து நடக்க அவனின் பின்னால் சிவசுந்தரமூர்த்தி சென்றார்.

“உவை இரண்டு பேரும் எந்த நிகழ்விற்கு வந்தாலும் சட்டம் கதைப்பார்களே தவிர உதவி செய்யமாட்டார்கள். பண்டிரைப் பற்றி நாலு வார்த்தைகள் கூறாமற் செல்கிறார்கள். காசு தரமாட்டார்கள்” என்றான் தனபாலன்.

“மேல்மக்கள், தேவையென வேண்டுகின்ற போதெல்லாம், உடனே கொடுத்து உதவுவார்கள். கீழ்மக்கள் கரும்பிலிருந்து சாற்றைக் கசக்கிப் பிழிந்து எடுப்பதைப் போலக் கஷ்டப்படுத்தினால் தான் தருவார்கள். சிவசுந்தரமூர்த்தி ஆயிரம் ரூபா எழுதினால் ஐம்பது தரம் வீட்டுக்குப் போக வேண்டும். நூறு இருநூறாகத் தான் தந்து கழிப்பார். சிலசமயம் பாக்கியும் வைத்து இருப்பார். கனகன் இதுவரை எதற்கும் தந்தது கிடையாது.” என்றான் கஜேந்திரன்.

---

**1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்.**

---

மேன்மக்கள் தேவையெனக் கேட்கும் போதெல்லாம் உடன் கொடுத்துதவுவார்கள். கீழ் மக்கள் கரும்பில் இருந்து சாற்றை எடுக்கப் பிழிந்து வருந்துவதைப் போல துன்பப்படுத்தினால் தான் உதவி செய்வார்கள்.

## பொறாமையால் வரும் குற்றம்

அன்று வேலாயுதபிள்ளையின் திருமணநாள். அதைக் கொண்டாடும் முகமாக வேலாயுதபிள்ளை நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி கோயிலில் ஒரு விஷேட அபிஷேகம் செய்தார். அத்துடன்

அன்னதான மடத்தில் ஆயிரம் பேருக்கு உணவளிக்க ஏற்பாடு செய்திருந்தார். அத்துடன் ஏழை மாணவர்களுக்குக் கல்வி கற்பதற்கான உபகரணங்களையும், ஏழைப் பெண்களுக்குச் சேலையும் ஏழை ஆண்களுக்கு வேட்டிகளும் வாங்கி வைத்திருந்தார்.

அபிஷேகம் முடிந்ததும் வந்திருந்த ஏழைகளுக்கு உடைகளையும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களையும் கொடுத்து விட்டு அவர் சென்று விட்டார். அன்னதான நேரம் அவரைக் காணாததால் மக்கள் அவரைத் தேடினார்கள். அவரைக் காணவில்லை. அப்போது அங்க வந்த கஜேநதிரன் சொன்னான்; ‘‘வேலாயுதபிள்ளை அண்ணை அயலூரில் உள்ள தனது சகோதரனின் வீட்டுக்குச் சென்று விட்டார். அவர் வரமாட்டார். அவருக்காகக் காத்திராது அன்னதானத்தைக் கொடுங்கள்’’ என்றான்.

இரண்டு தினங்கள் கழிந்த பின் வேலாயுதபிள்ளை கோயிலுக்கு வந்தார்.

‘‘நீயென்ன நாம் உணவில்லாதவர்களென்று நினைத்துச் சாப்பாட்டை ஏற்பாடு செய்து விட்டு தலைமறைவாகினாயா..?’’ என்று கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

வேலாயுதபிள்ளை சிரித்தார். அவர் யாராவது கேள்விகேட்டால் பதில்சொல்ல முடியாவிட்டால் சிரிப்பார்.

‘‘சிரித்து மழுப்பாதை உள்ளத்தைச் சொல்’’

“ஒவ்வொருவரும் தத்தம் ஆத்ம சாந்திக்காக ஒவ்வொரு செயல்களைச் செய்கிறார்கள். பிள்ளைகள் தமது பெற்றோரின் திருமண நாளை விமர்சையாகக் கொண்டாட விரும்பினார்கள். அதற்கு நான் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. பத்திரிகையில் வாழ்த்துச் செய்தி போட வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் நான் இருந்தேன். அதனால் அதை நான் யாருக்குஞ் சொல்லவில்லை. பத்திரிகையைப் பார்த்து என்மீது அன்புள்ளம் கொண்ட உள்ளங்கள் வரட்டும் என்று எதிர்பார்த்தேன். பலனை எதிர்பார்த்து நான் எதையுஞ் செய்வதில்லை. மற்றவர்களின் நன்மைக்காக நான் அவர்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்வேன். அன்பளிப்பாக யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்கமாட்டேன். யாராவது அன்பளிப்புப் பொருட்களைத் தந்து விடுவார்கள் என்பதற்காகத் தான் எனது சகோதரனின் வீட்டுக்குச் சென்றேன். பிறர் உண்பதையும் உடுப்பதையும் கண்டால் சிலர் அவர்களின் மேல் பொறாமை கொண்டு வேண்டுமென்றே குற்றஞ் சொல்வார்கள். இங்குள்ள சிலர் ‘நான் திருமண நாளைக் கொண்டாட வேண்டுமா…? என்று கூடியிருந்து கதைத்துள்ளனர். ஒரு சதத்திற்கும் வழியில்லாமல் இருந்தவர், பிள்ளைகள் வெளிநாட்டுக்குச் சென்றதும் தலைகால் புரியாமல் ஆடுகிறார் என்றும் சொன்னார்களாம்”

“சரி சரி சும்மா கேட்டால் நீ கிரந்தம் பறைகிறாய்” என்று கூறியவாறு நடந்தார் சிவசுந்தரமூர்த்தி.

‘‘நான் என்னுடன் அன்பாகப் பழகும் அத்தனை பேருக்கும் நான் போற இடத்தைச் சொல்லி விட்டுத் தான் போனனான். அவர்கள் நான் செய்தது சரியென்று சொன்னார்கள். அது எனக்குப் போதும்’’ என்றார் வேலாயுதபிள்ளை.

அப்போது அங்கே தனபாலன் வந்தான்; ‘‘உவனுக்கு நீங்கள் கதை சொல்லுறியளோ? யாராவது நன்றாகச் சமைச்சுச் சாப்பிர்றது உவனுக்குப் பிடிக்காது; யாராவது நல்ல உடை அணிவது உவனுக்குப் பிடிக்காது. எல்லாம் தான் மட்டுந் தான் செய்ய வேண்டும் என்று நினைப்பவன். நேற்றுச் சனசமூக நிலையத்தில் கூடியிருந்த சிலபேர் உங்களது சாப்பாட்டைப் பற்றித் தான் கதைத்தவை. நல்ல சுவையான சாப்பாடென்றும், நல்ல தரமான வேட்டி சால்வையும், சேலையும் சட்டையும் கொடுத்ததாய்க் கதைத்தவை. நீங்கள் எதைச் செய்தாலும் நல்ல மாதிரித்தான் செய்வியள். அதைவிட நீங்கள் பண்டிதரின் மகளுக்குச் சேலையும் சட்டையும் அவளுடைய பிள்ளைகளுக்கு உடுதுணியும் ஐம்பதினாயிரம் ரூபா காசும், பண்டிதரின் வீட்டுக்குக் கொண்டு போய்க் குடுத்தனீங்கள். அதைப் பற்றியும் கதைத்தனாங்கள். ஏழை எளியவர்களுக்குத் தானம் செய்தால் கூடப் பொறாமைப் படுகிறாங்கள். பொறாமைப் படக்கூடாதென்று சுவாமியார் தினமும் பிரசங்கம் செய்கிறார். அதை யார் கேட்கிறார்கள்?’’ என்று பெருமூச்சு விட்டான் தனபாலன்.

அதைக் கேட்டு வாய்க்குள் சிரித்தார் வேலாயுதபிள்ளை.

**1079. உடுப்பதுூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண வற்றாகும் கீழ்.**

கீழ் மக்கள் பிறர் உடுப்பதையும் உண்பதையும் கண்டால் அவர்களின் மேல் பொறாமை கொண்டு, வேண்டும் என்றே குற்றம் சொல்வார்கள்.

## தம்மை விற்போர்

பண்டிதரின் நினைவுதினக் கூட்டம் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி சனசமூக நிலைய முன்றலில், அதன் தலைவர் வேலாயுதபிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சுவாமியார் ஆசியுரை வழங்கினார். வேலாயுதபிள்ளை தலைமை உரை நிகழ்த்திய பின்பு விக்னேஸ்வரமூர்த்தி பண்டிதரின் சேவைகளைப் பற்றிப் பேசினார்.

அடுத்துப் பண்டிதரின் உருவப்படத்திற்குத் தணிகாசலம் மலர்மாலை சூடினார்.

அதன்பின் வேலாயுதபிள்ளை ‘‘பண்டிதரின் உருவப்படத்திற்கு மலர்மாலை சூடிக் கௌரவிக்க விரும்புவோர் மலர்மாலை சூடிக் கௌரவிக்கலாம்’’ என்றார்.

சிவசுந்தரமூர்த்தி முண்டியடிக்கும் சனக்கூட்டத்தைத் தாண்டிக் கொண்டு மேடையில் ஏறினார். அவரது கையில் பெரியதொரு மாலை இருந்தது. அவர் கொண்டு வந்த மலர்மாலையை

பண்டிதரின் உருவப்படத்திற்குச் சூடிவிட்டு அப்படத்தைத் தொட்டு வணங்கி விட்டுப் பெருங் குரலெடுத்து அழுதார்; ‘‘மகா மேதையான பண்டிதரை இழந்து இவ்வூர் நிற்கிறது; கொள்கைக்காக வாழ்ந்து மறைந்த கர்மவீரர் பண்டிதர். பண்டிதரது நினைவு நாளைக் கொண்டாட வேண்டுமென்று இங்குள்ள பெரியவர்கள் விரும்பிய போது இங்குள்ள பலார் விரும்பவில்லை. இந்த ஊரில் பண்டிதரின் வீட்டு வாசலுக்குக் கல்விக்காகச் செல்லாத கால்கள் உண்டா…..? அவருக்குச் சனசமூக நிலைய முன்றலில் சிலை வைத்தல் வேண்டும். முன்பே இதை நான் தெரிவித்திருப்பேன். சிலருக்கு அது விருப்பமில்லை. நிறுவியிருந்தால் இன்று அதையும் திறந்து வைத்திருக்கலாம். இருந்த போதும் இவ்விழா கோலாகலாமாகக் கொண்டாடப்படுகிறது. விரைவில் பண்டிரது சிலையையும் நிறுவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்’’

அடுத்துக் கணபதி மத்திய மகா வித்தியாலய அதிபர் பேசினார்; ‘‘பேரன்புக் குரியவர்களே, பண்டிதரைப் பற்றி எம்மூரில் உள்ள அனைவருக்கும் தெரியும். அதனால் அவரின் ஒழுக்க முறைகளைப் பேணி நடப்பது தான் நாம் அவருக்குச் செய்யும் தொண்டாகும். சிவசுந்தரமூர்த்தி சொன்னது போலப் பண்டிதருக்குச் சிலை நிறுவுதல் வேண்டும். அதற்காகச் சனசமூக நிலைய நிர்வாகமும் பொது மக்களும் உழைக்க வேண்டும் என்று கூறி விடை பெறுகிறேன்’’ என்றார்.

அடுத்து இலக்கியப் பேரவையின் மகா நாட்டு மண்டபத்திற்கு பண்டிதரின் நாமஞ்

சூட்டப்பட்டது. அவரின் பெயர் பொறிக்கப்பட்ட பலதாகையின் திரைச் சேலையை விக்னேஸ் வரமூர்த்தி திறந்து வைத்தார்.

விழா இரவு எட்டு மணிக்கு முடிவடைந்தது. விழா முடிந்த பின்பும் விழாவை நடத்தியர்கள் அங்கு அமர்ந்திருந்தனர்.

“பண்டிதர் உயிரோடு வாழும் வரை சிவசுந்தரமூர்த்தி அவருக்கு எந்த உதவிகளையும் செய்யவில்லை. அவரைப் பற்றிக் குறை கூறிக் கொண்டே திரிந்தார். நான் பண்டிதரின் மகளுக்கு உதவி செய்த போது வீதியில் பலருடன் கூடி நின்று பரிகாசமாகப் பேசினார். இன்று பெருந்தொகையான மக்கள் முன் நடித்து விட்டுப் போகிறார். அவர் பண்டிதரின் நினைவு நாள் விழாவுக்கு ஒரு சதம் கூடத் தரவில்லை. பிறகு சிலையைப் பற்றி பேசுகிறார். சிலையைத் தான் செய்து தரலாம் தானே… இல்லாவிட்டால் கொஞ்சப் பணமாவது தரலாம். அதை விட்டு விட்டு மேடையில் ஏறி நிர்வாக சபையின் அனுமதியின்றிப் பேசுகிறார். இவர் படித்தவரா…?” கோபப்பட்டார் வேலாயுதபிள்ளை.

“கீழ்மக்கள் தமக்குத் துன்பம் நேருகின்ற போது தம்மைப் பிறருக்கு விற்று விடுவார்கள். இவன் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடந்து கொள்வான்” என்றார் தணிகாசலம்.

“அதிபரும் அப்படித்தான். அவருக்கு அதிபர் தரம் இல்லாததால் இன்னொரு வரை அதிபராக நியமிக்கக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை

எடுக்கிறதாம். அதனால் இப்போது பாடசாலையிலும் வெளியிடங்களிலும் விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறார். அடிக்கடி அவரின் வீட்டுக்குச் செல்கிறார்'' என்றார் வேலாயுதபிள்ளை.

``பண்டிதருக்குச் சிலை நிறுவத்தான் வேண்டும். அதை நாம் இலக்கியப் பெரவை முன்றலில் நிறுவுவோம். அதற்கான நிதியை வெளிநாட்டிலுள்ள அவரது மாணவனிடம் கேட்போம்'' என்றார் தணிகாசலம்.

``இனித்தான் தான் தான் சிலையை நிறுவினேன் என்று சிவசுந்தரமூர்த்தி சொல்லித் திரிவார். இப்போ அதிபருக்கும் சிவசுந்தரமூர்த்திக்கும் இடையில் மனஸ்தாபமாம். இருவரும் கதைப்பதில்லை'' என்றார் வேலாயுதபிள்ளை.

``இரண்டு பேரும் சந்தர்ப்பத்திற்கேற்றபடி நடந்து கொள்வார்கள். தேவையேற்பட்டால் தம்மைப் பிறருக்கு விற்றும் விடுவார்கள். அப்படியானவர்களின் கதையைக் கதையாதை'' என்றார் தணிகாசலம்.

**1080. எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்**
**விற்றற்கு உரியர் விரைந்து.**

கயவர் எதற்கு உரியவரென்றால் தமக்குத் துன்பம் வந்த போது அதைப் போக்கத் தம்மைப் பிறருக்கு விலையாக விற்று விடுவதற்கு உரியவர் ஆவர்.

திரு.கே.வி.குணசேகரம் அவர்களின் நூல்கள்.

- ஆத்திசூடிக்கதைகள் - 4 தொகுதிகள்.
- திருக்குறள் கதைகள் (1330) - 24 தொகுதிகள்
- பகவத்கீதைக்கதைகள் (700) – 1 தொகுதி
- இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம் - 10 தொகுதிகள்
- திருவருட்பயன் கதைகள் (100) – 1 தொகுதி
- அன்பான வேண்டுகோள்
- கனவுகள் கற்பனைகள் - சிறுகதைத்தொகுதி
- சிறுவர் கதைகள் - 4 தொகுதிகள்
- பெரியபுராணக்கதைகள்
- விநாயகபுராணக்கதைகள்
- கட்டுரைகள் - 2 தொகுதி
- பொதுஉளச்சார்பு
- வாழ்க்கை என்பது…!

- சிவஞானபோதக்கதைகள்
- மாயை பற்றிய தத்துவக்கதைகள்

இந்நூல்களைச் ஸ்ரீலங்கா புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

